விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com


சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை (17.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333

# ஜனாதிபதியின் முடிவில் திருப்தியில்லை

# சர்வதேச விசாரணையே அவசியம்

## சந்திப்பின் பின் உறவுகள் விரக்தி

(கொழும்பு) வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இனியும் இலங்கை அரசை நம்பப் போவதில்லை என உறுதியாகத் தெரிவித்த காணாமல் போனவர்களுடைய உறவுகள், இந்த விடயத்தில் சர்வதேசம் உடனடியாக தலையிட்டு நீதியை பெற்றுத் தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (23-ம் பக்கம்...)



## யாழ். குடாநாட்டில் இரு வாரங்களில் 269 பேருக்கு டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த இரு வாரங்களுக்குள் 269 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர் என யாழ் பிராந்திய சுகா 23

## மதில் விழுந்து குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

புதிய மதில் இடிந்து விழுந்ததில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் பரிதாபமாக உயிரிழந்து 23

## நல்லாட்சியை வீட்டுக்கு அனுப்ப மகிந்த அழைப்பு

(கொழும்பு)

ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் புரட்சி 23

## எனது ஆட்சியில் எவரும் காணாமலாக்கப்படவில்லை

(கொழும்பு)

எனது ஆட்சியில் எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை, இரகசிய தடுப்பு முகாம்களும் தற்போதைய ஆட்சியின் கீழ் செயற்படவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியில் காணாமல் போனவர்கள் தொடர்பான தீர்வினை பெறுவதற்கு 23

## வாள்வெட்டு சந்தேக நபருக்கு பிணை மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வாள்வெட்டின் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபருக்கு யாழ். மேல் நீதிமன்றம் பிணை வழங்க மறுத்துள்ளது.

யாழ். மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் 1062/16 என்ற கைக் குண்டு, வாள்வெட்டு 23

## புதிய அரசியலமைப்பை மகிந்த ஆதரிக்க வேண்டும்

### நேரிலேயே கோரினார் சம்பந்தன்



(கொழும்பு)

புதிய அரசியலமைப்புக்கு மகிந்த ராஜபக்ஷ ஆதரவளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் 24

## வாள்வெட்டு குழுக்களை உடன் கைது செய்ய நீதிபதி பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வாள்வெட்டு, குழு மோதல் சம்பவங்களை கட்டுப்படுத்தும் வகையில் அவற்றில் ஈடுபடும் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து சட்டத் 04



### வாள்வெட்டுடன் தொடர்பு

## கைது செய்யப்பட்ட நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட நால்வரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ். ஆனைக்கோட்டை பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த ஒருவரை வாளால் வெட்டி காயப்படுத்தியதுடன் வீட்டில் இருந்த பொருட்களையும் சேதப்படுத்தியிருந்தனர்.

இச் சம்பவத்தை தொட 23

## விசாரணைக்கு வருமாறு பிரதமருக்கு அழைப்பு



(கொழும்பு)

பிணைமுறி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையா 24

## அரியாலை துப்பாக்கி சூடு; அதிரடிப்படை சிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணியம் தோட்டப்பகுதியில் இளைஞர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை சேர்ந்தவர்களையும் எதிர்வரும் 30-ம் 23

### ஆதரவு - 151 வாக்கு, எதிர் - 58 வாக்கு

## வரவு - செலவு திட்டத்தின் 2-ம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது 151 வாக்குகள் ஆதரவாகவும் 58 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன.

பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயக கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஆதரவாகவும், மக்கள் விடுதலை முன்னணி, கூட்டு எதிர்க்கட்சி ஆகிய தரப்புக்கள் எதிராகவும் வாக்களித்திருந்தன.

கடந்த 9 ஆம் திகதி இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்திற்காக நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் 2018 ஆம் ஆண் 24

### உள்ளூராட்சி தேர்தலுக்கு ஆபத்தா?

## வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிரான மனு 22 ஆம் திகதி தீர்மானம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களின் மீள் எல்லை நிர்ணயம் தொடர்பாக அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாகக் கோரி நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 22 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

கொழும்பு, கண்டி, ஹாலிஎல, மாத்தறை மற்றும் எம்பி 23



பாராட்டி
# வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி புனித லிகோரியார்
கோவில் வீதியைச் சேர்ந்த
**திரு.ஜெயக்குமார் ஞானோதயன்**
இன்று (17.11.2017) கொழும்பு பண்டார
நாயக்கா சர்வதேச மகாநாட்டு
மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில்
BTEC HND in Construction and Built Environment
(Specialized in Building Services Engineering)
என்னும் பட்டத்தை பெற்றுக்கொள்வதையிட்டு
அவரை பாராட்டி வாழ்த்துவதுடன்
தங்கள் வாழ்வும் வளமும் சிறக்க
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:-திரு.திருமதி சாள்ஸ் மேரி பிரான்சிஸ்கா
(மாமன், மாமி) ஆனைக்கோட்டை.

(1353)

# 6ஆம் ஆண்டு நினைவுகளுடன்



**திருமதி கனகராசா**
**சரஸ்வதி (கிளி)**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30.08.1947 | 23.11.2011 |

திதி:-திரயோதசி
ஆண்டுகள் ஆறாய்
ஓடி மறையும் அம்மா
உம் அன்பு முகம் எம்மைவிட்டு
அகலாது ஒரு போதும்
நீர் இன்றிய வாழ்வு வேதனைதான்
இருப்பினும் ஈசன்தாள் இருக்கிறீர் என
எண்ணுகையில் நெஞ்சம் நெகிழ்ந்துருகுதம்மா!

(இ-400)

ஒட்டுவெளி,
மிருசுவில்.

க.கனகேந்திரன்
குடும்பம்

# கண்ணீர் அஞ்சலி



திருமதி **கோவிந்தபிள்ளை**
**இராசமணி**

கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க
பாடசாலை ஆசிரியர் திருமதி குமுதினி
விஜயரட்ணம் அவர்களின் தாயார்
திருமதி கோவிந்தபிள்ளை இராசமணி
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தவருக்கு எமது கண்ணீர்
அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

**கல்விச் சமூகம்**
**கிளி/இராமநாதபுரம் கிழக்கு**
**அ.த.க பாடசாலை**

பிறப்பு:-30.06.1932
இறப்பு:-16.11.2017

(இ-406)

குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
உடல் உயிர்மனம்
தன் திறமையையும் வல்லமையையும் பெருக்கிக்கொள்ள

## மனவளக்கலையோகா பயிற்சிகள்

**எளியமுறை உடற்பயிற்சிகள் காயகல்ப்ப பயிற்சிகள்**





**எளியமுறை தியாணப் பயிற்சிகள்**






**18.11.2017 சனிக்கிழமை மாலை 05.00 மணி**

யாழ்.அறிவுத் திருக்கோவிலில் தமிழ்நாடு மனவளக்கலைப் பேராசிரியர்
**ச.இந்திரா** அவர்களால் நடாத்தப்படுகின்றன.
அனைவரையும் பயிற்சிபெற்று பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2772**

(இ-406)

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY







**யாழ்.மாவட்ட வாக்காளப் பெருமக்களே!**

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை) ஐ.தே.க சார்பாக போட்டியிட புதிய தேர்தல் திருத்தச் சட்டத்திற்கு அமைய ஆண்/ பெண் இரு பாலாரிடமிருந்தும் கட்சித் தலைவர் கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வழிகாட்டலில், பொதுச் செயலாளர் கௌரவ அமைச்சர் கபீர் ஹசீம் மற்றும் கௌரவ அமைச்சர் D.M.சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள கட்சி காரியாலயத்திற்கு 21.11.2017க்கு முன் தங்களது முழு விபரங்களுடன் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரில் சமர்ப்பிக்க விரும்பின் காலை 9.00 முதல் மாலை 5.00 மணிக்கிடையில் சமர்ப்பிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:-
01.முன்பு விண்ணப்பித்திருப்பின் தயவு செய்து மீண்டும் விண்ணப்பிக்கவும்.
02.மேலும் தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**இப்படிக்கு**
**நா.விஷ்ணுகாந்தன் (சட்டத்தரணி)**
**யாழ்.மாவட்ட முகாமையாளர்**
**ஐக்கிய தேசியக் கட்சி கிளைக் காரியாலயம்,**
**கிராம கோட்டடி, பருத்தித்துறை வீதி, புலோலி**

0777672188
nvishnukanthan@yahoo.com
14.11.2017

(C-153)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## திருமதி மனோகரன் ஈஸ்வரி



*யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் ஈஸ்வரி 15.11.2017 புதன்கிழமை அன்று காலமாகி விட்டார்.*

*அன்னார் மனோகரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-சரஸ்வதி தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான முத்தையா-பொன்னம்மாள் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், மதியாபரணம், பாலசிங்கம், பஞ்சரத்தினம், தணிகாசலம், விநாயகமூர்த்தி மற்றும் கணேஷ், முத்துராசா, நவரத்தினராசா (குண்டுமணி), தையல்நாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கண்ணன், ராதிகா, மேனகா, சிந்துஜா மற்றும் காலஞ்சென்றவர்களான வித்தியா, திவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராம்குமார், சுரேந்திரன், சற்குணராசா, பிரதீபா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராம்குமார், சுரேந்திரன், சற்குணராசா, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமியும், ரமானுஜா, ரோகித், அனனியா, பரணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**தொலைபேசி:-**
**0212213248**

(1374)

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

# உள்ளூராட்சி வர்த்தமானிக்கு எதிராக நல்லாட்சியின் எடுபிடிகளே வழக்கு

## நாடாளுமன்றில் மகிந்த அணி குற்றச்சாட்டு

(கொழும்பு) உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கத்தின் எடுபிடிகளே வழக்கு தாக்கல் செய்ததாக மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.



இந்தக் குற்றச்சாட்டை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான காஞ்சன விஜேசேகர நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைத்தார். இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவின் மாத்தறை மாவட்ட இணைப்பாளர், இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவின் உதவியாளர், பதுளை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணிபுரியும் நபர் மற்றும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவின் கண்டி மாவட்டத்தில் இருந்து ஒருவர் ஆகிய குழுவினராலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும் இந்த குற்றச்சாட்டை மின்சக்தி, எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேராவும், இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவும் முற்றாக நிராகரித்தனர். இந்த விவாதத்தின்போது சபையில் பெரும் அமைதியின்மை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து மகாநாயக்கர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு





(கொழும்பு)
மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துள்ளார். குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது ஜனாதிபதி ஆசியும் பெற்றுக் கொண்டுள்ளார். இந்த சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலவரங்கள், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பன தொடர்பில் அவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## மரநடுகையும் மலர்க்கண்காட்சியும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில்

(யாழ்ப்பாணம்)
வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மரநடுகையும் மலர்க்கண்காட்சியும் நாளை காலை 9 மணிக்கு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறும்.

தமிழ் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர்பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

வடமாகாண தாவர உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் பங்கேற்கும் மலர்க்கண்காட்சி நாளை 18 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## குற்றமிழைக்காத இராணுவத்தினருக்காக ஜனாதிபதியுடன் அரசு உடனிருக்கும்-இசுறு



(கொழும்பு)
அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்றால் போல் செயற்பட தயாராக இல்லை என ஜனாதிபதி தெளிவாக எடுத்துக் கூறியுள்ளதாக மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட மேல்மாகாண முதலமைச்சர், சட்டரீதியாக குற்றமிழைக்காத இராணுவத்தினருக்காக ஜனாதிபதியுடன் அரசாங்கமும் உடனிருக்கும் எனத் தெரிவித்தார்.


"இனவாதிகளாக முன்னிற்பவர்கள், இனவாத நோக்கத்துடன் இருந்துகொண்டு அரசியல் செய்பவர்கள் சில அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திற்கு இராணுவ அதிகாரிகளை தொடர்புபடுத்தி பல்வேறு மட்டங்களில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

இராணுவத்தினருக்கு காணிகளை வழங்குவதாக ஒருதரப்பினர் குறிப்பிடுகின்றனர். அல்லாவிடின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என குறிப்பிடுகின்றனர். யுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்ட இராணுவத்தினரை சிறைக்கு அனுப்பி, அநீதி இழைப்பதாக குற்றஞ்சாட்டுகின்றனர். விசேடமாக ஒன்றை தெளிவாக கூற வேண்டும்.

சட்டரீதியான குற்றவாளிகள் அல்லாத அனைத்து இராணுவ வீரர்களுக்காகவும் ஜனாதிபதியுடன் அரசாங்கமும் முன்னிற்கின்றது. சர்வதேசத்திற்கும் இந்த நாட்டு மக்களுக்கும் பொறுப்புமிக்க தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி ஒன்றைத் தெளிவாக கூறியுள்ளார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்கேற்றால்போல் செயற்படுவதற்கு தாம் தயாராக இல்லை என்பதை ஜனாதிபதி தெளிவாக கூறியுள்ளார். விசேடமாக இராணுவத்தினருக்காக, இராணுவத்தினரின் உரிமைகளுக்காக இராணுவத்தினரின் எதிர்காலத்திற்காக அரசாங்கம் என்ற வகையிலும் நாட்டின் தலைவர் என்ற வகையிலும் அந்தப் பொறுப்பை ஜனாதிபதி ஏற்றுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார் (இ-7)

## அலோசியஸுடன் அமைச்சர்கள் பலருக்குத் தொடர்பு




(கொழும்பு)
பொது முயற்சியாண்மை நிலையியல் குழு எனப்படும், கோப் குழு விசாரணைகளை மேற்கொண்டு வந்த காலப்பகுதியில், அந்தக் குழு உறுப்பினர்கள் பலர் அர்ஜுன் அலோசியஸுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளமை தெரிய வந்துள்ளது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் மேற்கொண்ட பகுப்பாய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

அமைச்சர்களான தயாசிறி ஜெயசேகர, சுஜீவ சேனசிங்க அஜித் பி. பெரேரா உள்ளிட்டவர்களுடன் ஹெக்டர் அப்புகாமி மற்றும் ஹர்சன ராஜகருணா உள்ளிட்டோரே இவ்வாறு அர்ஜுனவுடன் தொடர்பில் இருந்துள்ளமை தெரியவந்துள் ளது. (இ-7)

## முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய இறைவரி சட்டத்தின் கீழ் நிவாரணங்கள்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு




(கொழும்பு)
இளைஞர்,யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டத்தில் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய இறைவரி சட்டத்தின் கீழ் நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"இன்டெக்ஸ் ஏசியா 2017" என்ற தெற்காசியாவின் ஆடை உற்பத்தி கண்காட்சி நேற்று முன்தினம் கொழும்பு கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த திட்டங்களுக்காக அரசாங்கம் 500 கோடி ரூபாவை இந்த ஆண்டு ஒதுக்கியுள்ளதாகவும், இதன் கீழ் புதிதாக வர்த்தக முயற்சிகளை ஆரம்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு 100க்கு 200 வீதம் மூலதனக் கொடுப்பனவுகளை இரண்டு வருடங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும். போட்டித் தன்மை அடிப்படையில் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதுடன் தனியாக அபிவிருத்தி வங்கி உருவாக்கப்பட்டு அதன் மூலம் நிதி பெற்றுக்கொடுக்கப்படும். முதலீட்டாளர்களுக்கு வெளிநாட்டு சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கும் சர்வதேச ஏற்றுமதி கைத்தொழில் மற்றும் தேவைகள் எமது நாட்டிற்கு பெற்றுக்கொள்ளவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பிணைமுறி மோசடி விசாரணைக்கு ஆஜராக பிரதமர் ரணில் தீர்மானம்

(கொழும்பு)
இலங்கை மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணைமுறி விநியோகம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவில் முன்னிலையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என அறிய முடிகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் பிரதமரிடம் விளக்கங்களை பெற்றுக் கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இந்த நிலையில், ஆணைக்குழுவில் முன்னிலையாகி விளக்கங்களை வழங்க பிரதமர் தீர்மானித்துள்ளார் என பிரதமர் அலுவலகத்தை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)



## கொல்கத்தாவில் ஜில் என்ற காலநிலைக்கு மத்தியில்

# லக்மலின் பந்து வீச்சில் அனல் பறந்தது இந்தியா முதல் நாள் நிறைவில் 3/17

விட்டு விட்டு பெய்த மழைக்கு மத்தியில் சுராங்க லக்மல் வேகத்தில் மிரட்ட, கொல்கத்தா டெஸ்டில் இந்திய அணி திணறல் ஆரம்பம் கண்டது. மழை காரணமாக முதல் நாளில் 12 ஓவர்கள் மட்டும்தான் வீசப்பட்டன.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இததொடரின் முதல் டெஸ்ட் நேற்று கொலகத்தாவின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்தது. மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் 4 மணி நேரம் தாமதமாக தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் சண்டிமல், முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் ஷமி, உமேஷ், புவனேஷ்வர் என 3 வேகப்பந்துவீச்சாளர்கள் மற்றும் 'சுழலில்' அஷ்வின், ஜடேஜா இடம்பிடித்தனர். தமிழக வீரர் முரளி விஜய்க்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

**மோசமான துவக்கம்**

இந்திய அணிக்கு ஷிகர் தவான், லோகேஷ் ராகுல் ஜோடி ஆரம்பம் வழங்கியது. ஈரப்பதம் காரணமாக ஆடுகளம் வேகத்துக்கு கைகொடுக்க, இலங்கை அணி தொடக்கத்திலேயே மிரட்டியது. போட்டியின் முதல் ஓவரை லக்மல் வீசினார்.

இதன் முதல் பந்தில் லோகேஷ் ராகுல் டக்-அவுட்டானார். தொடர்ந்து தொல்லை கொடுத்த இவர், ஷிகர் தவானை (8) போல்டாக்கினார். இந்திய அணி 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டை இழந்து தடுமாறியது. பின் புஜாரா, அணித் தலைவர் ஹோலி ஜோடி இணைந்து அணியை சரிவிலிருந்து மீட்க முயற்சித்தனர்.

**ஹோலி அதிர்ச்சி**

இந்த நிலையில், மழை குறுக்கிட ஆட்டம் 50 நிமிடம் தடைப்பட்டது. மீண்டும் போட்டி தொடங்கியதும் ஹோலியை 'டக்' அவுட்டாக்கினார் லக்மல். இதற்கு ஹோலி 'ரிவியூ' கேட்ட போதும் பலன் கிடைக்கவில்லை.

நேற்றைய நாளில் வீசப்பட்ட 11.5 ஓவர்களில், இந்திய அணி முதல இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 17 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, போதிய வெளிச்சமின்மை காரணமாக முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. புஜாரா (8), ரகானே (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இலங்கை சார்பில் அதிகபட்சமாக 6 ஓவர் வீசிய லக்மல், ஓட்டம் எதுவும் கொடுக்காமல் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மீதமுள்ள நான்கு நாட்களும் அரைமணி நேரம் முன்னதாக காலை 9.00 மணிக்கு போட்டி ஆரம்பிக்கும்.

**48 ஆண்டுகளுக்குப்பின்...**

கடந்த 1969ஆம் ஆண்டுக்குப்பின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்த டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்று பந்துவீச்சை தேர்வு செய்த இரண்டாவது அணியானது இலங்கை. இதற்கு முன், பாகிஸ்தான் (1987) இப்படி செய்திருந்தது.

**லக்ஸ்மனுக்கு கௌரவம்**

இந்திய முன்னாள் வீரர் லக்ஸ்மன், ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் வைக்கப்பட்டுள்ள மணியை அடித்து முதல் நாள் ஆட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

**'மைக்' பிடித்தார் நெஹ்ரா**

இந்திய வேகப்பந்துவீச்சாளர் ஆஷிஸ் நெஹ்ரா, சமீபத்தில் சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெற்றார். இதனையடுத்து நேற்றைய ஆட்டத்தில் வர்ணனையாளர் அவதாரம் எடுத்தார். சக முன்னாள் வீரரான சேவாக்குடன் இணைந்து போட்டியை இந்தியில் வர்ணனை செய்தார்.

**லக்மல் அசத்தல்**

நேற்றைய ஆட்டத்தில் இலங்கை வேகப்பந்துவீச்சாளர் லக்மல் துல்லியமாக பந்துவீசினார். இவர் வீசிய 6 ஓவரும் 'மெய்டனாக' அமைநதது. தவிர, 3 விக்கெட் வீழ்த்தி இந்திய அணிக்கு நெருக்கடி தந்தார்.

**ஆறாவது வீரர்**

டெஸ்ட் போட்டியில் முதல் பந்திலேயே ஆட்டமிழந்த 6ஆவது இந்திய வீரரானார் லோகேஷ் ராகுல். கடைசியாக, 2007ல் சிட்டகொங் கில் நடந்த டெஸ்டில் வாசிம் ஜாபர் (எதிர்-பங்களாதேஷ்) இப்படி ஆட்டமிழநதிருந்தார். கொல்கத்தா மண்ணில் சுதிர் நாயக் (1974), கவாஸ்கருக்கு (1984) பின், முதல்பந்தில்ஆட்டமிழந்த 3ஆவது இந்திய வீரர் ஆனார்ராகுல்.

# வடமராட்சியில் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த இருவர் கைது!

## 15 தொலைபேசிகளும் மீட்பு

வடமராட்சிப் பகுதியில் தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து பெறுமதி வாய்ந்த 15 கைத்தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வடபகுதிக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோ, யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித்த பெர்னாண்டோ ஆகியோரின் வழிநடத்தலுக்கு அமைவாக காங்கேசன்துறை புலனாய்வுப் பொறுப்பதிகாரி வஜிர குணவர்த்தன மற்றும் உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளான சிசில கேரத், டி.கே. பிரியந்தவின் தலைமையில் குற்றப்பிரிவுகளுக்கு பொறுப்பான மனோகரா மற்றும் பருத்தித்துறை குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி தசநாயக்க, சுமணசிங்க, விக்கிரமசிங்க ஆகிய பொலிஸ் அணி ஒன்று தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது.

இந்நிலையில் பருத்தித்துறைப் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் திருடப்பட்ட தொலைபேசிகள் பாவனையில் இருந்த நிலையில் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸ் அணியினர் தும்பளைப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இருவரைக் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 15 கைத்தொலைபேசிகள் மீட்கப்பட்டன.

இவர்கள் இருவரும் மேலும் பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் நிலையில் அவர்களிடம் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இச்சம்பவத்தில் வேறு யாராவது சம்பந்தப்பட்டார்களா? என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-60)

## வாள்வெட்டு ...

[illegible]தின் முன் நிறுத்துமாறு வட மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் அவசர பணிப்புரையை பிறப்பித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி, அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் மற்றும் வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் குழுவினருக்கு இடையில் இடம்பெற்ற விஷேட கூட்டத்திலேயே மேற்படி பணிப்புரையானது நீதிபதியால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இக்கூட்டத்தில் வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பாலித்த பெர்னாண்டோ, யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரொசான பெர்னாண்டோ, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சென விரட்ண, பொலிஸ் அத்தியட்சகர் அம்பேபிட்டிய மற்றும் யாழ்.தலைமை பொலிஸ நிலைய தலைமை பொலிஸ்பரிசோதகர் ஹொமா விதாரன்ா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

விஷேட கூட்டம் ஆரம்பமானபோது, வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வாளவெட்டு கலாசாரத்தை நிறுத்தும் வகையில் விஷேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இரவு நேரங்களில் விசேட பொலிஸ் ரோந்து நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்களை மிக அவதானமாக கவனித்துக் கொண்டிருந்த நீதிபதி அவசர பணிப்புரைகளை பிறப்பித்தார்.

தொடர்ச்சியான வாள்வெட்டு சம்பவங்கள் இடம்பெறுவதானது சட்டம் ஒழுங்கிற்கு சவால விடுகின்ற செயற்பாடாகவே காணப படுகின்றது. இதனை உடனடியாக கட்டுப்பாட்டுக குள் கொண்டுவரப்பட வேண்டும்.

எனவே சட்டம் ஒழுங்கிற்கு அச்சுறுத்தலாகவுள்ள இவ் வாள்வெட்டு கலாசாரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் வகையில் பொலிஸ் திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளையும் பயன்படுத்தி இத்தகைய சமூக விரோத, சமூகத்தவர்களுக்கு அச்சுறுத்தலான வாள்வெட்டு தாக்குதலில் ஈடுபடுபவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அவசர பணிப்புரையை பிறப்பித்திருந்தார். (மு-4)

# விபத்தில் சிக்கிய இளைஞன் சிகிச்சை பலனின்றி மரணம்

(மல்லாவி )

முள்ளியவளை பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள முள்ளியவளை ஆலடிச் சந்தியில் வீதியை ஊடறுத்துத் திரும்பிய தனியார் பேருந்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்து கோமா நிலையில் முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் தொடர் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நள்ளிரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கடந்த 04ஆம் திகதி சனிக்கிழமை காலை 07 மணியளவில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் இருந்து முள்ளியவளை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்து முள்ளியவளை ஆலடிச் சந்திப் பகுதியில் வீதியை ஊடறுத்து திரும்பியபோது, முள்ளியவளையில் இருந்து ஆலடி நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் மோதுண்டு விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 12 நாட்களாக கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் முள்ளியவளை 01ஆம் வட்டாரம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த சிறிஸ்கந்தராஜா ஜெனகன் (வயது - 21) என்ற இளைஞரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். (மு-15)


## மரண அறிவித்தல்

### திருமதி நமசிவாயம் கற்பகம் (முத்து)



*மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் அல்லாரை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நமசிவாயம் கற்பகம் (முத்து) நேற்று (16.11.2017) அன்று காலமானார்.*

*அன்னார் வைரமுத்து நமசிவாயத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் கணபதிப்பிள்ளை, சடாச்சரம், அமரர் கமலாம்பிகை மற்றும் பத்மநாதன், சிவராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

அல்லாரை வடக்கு,
அல்லாரை.

தகவல்:
கணவர்

(C-409)

# கண்ணீர்க் காணிக்கை

திருமதி.
**உமாபதி புஸ்பலதா**



எமது பாடசாலையின்
ஆசிரியர்
திருமதி.சசிந்திரா செந்தூரன்
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி. உமாபதி புஸ்பலதா**
அவர்கள்
16.11.2017 அன்று காலமானார்.
அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்திற்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.



# 2ஆம் ஆண்டு நினைவும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அமரர்
**சின்னத்துரை பஞ்சலிங்கம்**



கடந்த 09.12.2015 அன்று
சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு
அமரர்
சின்னத்துரை பஞ்சலிங்கம்
அவர்களின்
இரண்டாம் ஆண்டு நினைவும்,
ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்
17.11.2017 இன்று வெள்ளிக்கிழமை
ந.ப. 12.00 மணியளவில்
அன்னாரது இல்லத்தில்
நடைபெறவிருப்பதனால்
அந்நிகழ்வில் கலந்து ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு
தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு தங்களை
அன்புடன் அழைக்கின்றோம்.

(C-399)

வத்தலாவளை, வல்வெட்டி. குடும்பத்தினர்


# அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டத்தில் கலகம் செய்த பௌத்தபிக்கு சிக்கினார்!

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கலகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பௌத்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் மாலை தங்காலை குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்காக அம்பாந்தோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வீரகெட்டிய மெதமுலன கின்சிகுனே ஸ்ரீசந்திர பிம்பாராமயே அரன்வில அமித்த என்ற பிக்குவே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்தள சர்வதேச விமான நிலையத்தை இந்தியாவிற்கு தாரைவார்க்க வேண்டாம் என்று தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிரணியினர் கடந்த ஒக்டோபர்மாதம் அம்பாந்தோட்டையில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையில் கலகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 30க்கும் மேற்பட்டவர்கள் கைதாகி பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில் குறித்த தேரர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)


# பகிரங்க ஏலவிற்பனை

எமது வித்தியாலயத்தில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன. மாணவர் மேசை (மரம்)-25, மாணவர் கதிரை (மரம்) -02, பாலர் மேசை (மரம்)-13, பாலர் கதிரை (மரம்)-05, நீளமேசை (மரம்)-05, நீள வாங்கு (மரம்)-05, ஆசிரியர் மேசை (மரம்)-05, ஆசிரியர் கதிரை (மரம்)-01, மாணவர் கணனி கதிரை-03, மாணவர் கணனி மேசை-01, ஆசிரியர் கணனி கதிரை-01, ஆசிரியர் கணனி மேசை-01

இடம்: வித்தியாலய முன்றல்

காலம்: 2017.11.30 வியாழக்கிழமை மு.ப. 11.00 மணி

அதிபர், யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.



# மரண அறிவித்தல்

## திருமதி. கஜனி சுபேந்திரன்

*[தலைவர் மற்றும் ஸ்தாபக உறுப்பினர் யாழ். இந்து மகளிர் கல்லூரி, பழைய மாணவிகள் சங்கம், (பிரித்தானியக் கிளை)]*



*யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் லண்டன் Clayhall ஐ வதிவிடமாகவும் கொண்ட கஜனி சுபேந்திரன் அவர்கள் 13.11.2017 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் (முன்னாள் யாழ். இந்து மகளிர் கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), தனலட்சுமி (முன்னாள் யாழ். போதனா வைத்தியசாலை தாதிமார் விரிவுரையாளர்) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான யாழ். நீராவியடி பிறவுண் வீதியைச் சேர்ந்த செந்திவேல்-சந்திரமணி தம்பதிகளின் அன்பு மருமகளும், சுபேந்திரன் (பழைய மாணவர்- யாழ்.இந்துக் கல்லூரி) அவர்களின் ஆசை மனைவியும், கஜன், சுஜீபா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஜேந்திரன் (பழைய மாணவர்- யாழ். இந்துக் கல்லூரி), கௌசலா, வத்சலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிராளினி, டானியல் ஜெயராஜா, சிறீரவீந்திரா, சுரேந்திரன், றனேந்திரா, துஸ்யந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆரணி, அபர்ணா ஆகியோரின் ஆசை மாமியும் அபிராமி, தானியா, கனிஸ்கன் ஆகியோரின் அருமைச் சித்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.11.2017 ஞாயிற்றுக்கிழமை 10.00 \ è Bás _ âç¦ ØÃu® éõ ¦[ Manor Park இல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

T.P : + 442085509153

சுபேந்திரன் (கணவர்),
பிரித்தானியா

(1304)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

# வெளிவாரிப் பரீட்சைகள்

கலைமாணித் தேர்வு பகுதி - **II –2014** (வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 04.12.2017(திங்கட்கிழமை) தொடக்கம் 20.12.2017 (புதன்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணையை எமது இணையத் தளத்திலும் (www.codl.jfn.ac.lk) எமது முகப்புத்தகப் பக்கத்திலும் (www.facebook.com/uoj.codl) பார்வையிடலாம்.

பரீட்சை அனுமதி அட்டைகளை 28.11.2017 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம்30.11.2017(வியாழக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
15.11.2017

(சி-404)


# இராசி பலன்

17.11.2017
கார்த்திகை 01, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 3.58 மணிவரை
சுவாதி மாலை 6.13 மணிவரை
சுபநேரம் 6.08-7.38 மணிவரை
இராகுகாலம் 10.38-12.08 மணிவரை
போதாயண அமாவாசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரட்டாதி, ரேவதி | | ராகு |
| கேது | | | |
| | சனி,<br>புத<br>சூரி | சுக்,<br>குரு,<br>சந் | செவ் |

**மேடம்:** வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், விருந்தினர் வருகையுண்டு, ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் நிலை ஏற்படலாம்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உடல் நலன் சீராகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** பெருமைகள் வந்து சேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன சுகமுண்டு.

**கடகம்:** வருமானம் வரும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும், செய்தொழிலில் சிறப்புகள் கூடும் நாள்.

**சிம்மம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

**துலாம்:** தொழில் ரீதியான பயணமொன்றை மேற்கொள்வீர்கள், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** பயணங்களால் பலனுண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர் வருகையுண்டு.

**தனுசு:** பொது வாழ்வில் புகழ் கூடும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்:** கனவுகள் நனவாக கணபதியை வழிபட வேண்டிய நாள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள்.

**கும்பம்:** தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மீனம்:** உறவினர் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், வளர்ச்சி காண வழிபாட்டில் அக்கறை காட்ட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

# மதுபான விலைக்குறைப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து மகஜர்

## யாழ்.மாவட்ட சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைவு

(யாழ்ப்பாணம்)

மதுபான விலை குறைப்புக்கு ஆட்சேபனை தெரிவித்து யாழ்.மாவட்டத்தில் இருந்து அரசுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அந்த வகையில், சகல சிவில்அமைப்புக்களும்இணைந்து, இது தொடர்பான மகஜர் ஒன்றை இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு வடமாகாண ஆளுநர் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கவுள்ளனர்.

இலங்கையில் பியர்வகை மதுபானத்திற்கான விலை குறைக்கப்படவுள்ளதாக அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவித்து மகஜர் ஒன்றை அரசுக்கு அனுப்புவதாக யாழ்.மாவட்ட சிவில் சமூக அமைப்புக்களின் கலந்துரையாடலின் போது முடிவு செய்யப்பட்டதாக சிவில் சமூக அமைப்புகளின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே மது பாவனையில் முன்னணி வகிக்கும் யாழ்.மாவட்ட சமூகத்தை இவ் விலை குறைப்பு மேலும் சீரழித்து விடும் என்று அச்சமுறுவதாகவும் எனவே சகல அமைப்புக்களும் இன்று கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட சிவில் சமூக அமைப்புக்களின் சம்மேளனச் செயலாளர் ச.செந்துராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-9)

# வடக்கிலுள்ள அரச சாரதிகள் வெளியக இடமாற்றத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கடமையாற்றும் அரச சாரதிகள் வெளியக இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படவேண்டும் எனக் கோரி வடமாகாண முதலமைச்சரிடம், நேற்று முன்தினம் வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

இணைந்த சேவையில் உள்ள சாரதிகளின் வருடாந்த இடமாற்றம் 2018 மற்றும் சாரதிகளின் சீருடை தொடர்பாக அச்சங்கத்தினர் கையளித்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிர்வாக நடைமுறை கோவைக்குஅமைவாகஇணைந்த சேவையிலுள்ள் அலுவலர்கள் யாவரும், ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை இடமாற்றம் செய்யப்படல் வேண்டும். இந்த நடைமுறை சாரதிகளுக்கும் பொருந்தும். எனினும் வடமாகாணத்தில் உள்ள சில திணைக்கள சாரதிகள் ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒரே திணைக்களத்தில் கடமையாற்றி வருவதுடன் உள்ளக இடமாற்றத்துக்கு மட்டுமே உள்வாங்கப்படுகின்றனர்.

இவ்வாறான நடைமுறையானது, வெவ்வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் சாரதிகளுக்கு இழைக்கப்படும் அநீதி ஆகும். எனவே ஐந்து வருடங்களுக்கு மேல் ஒரே திணைக்களத்தில் கடமையாற்றும் சாரதிகள் உள்ளக உடமாற்றத்திற்கு உட்படுத்தாது வெளியக இடமாற்றத்திற்கு உட்படுத்தல் வேண்டும். இதன் மூலமே சீரான இடமாற்ற சேவையை அனைத்து சாரதிகளும் பெற்றுக்கொள்ள வழியேற்படுத்தப்படும்.

மேலும் வடமாகாணத்திலுள்ள வேறுபட்ட திணைக்களங்களில் கடமையாற்றும் சாரதிகளுக்கு சீருடை கொடுப்பனவானது வேறு பட்ட அளவில் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இக் கொடுப்பனவினை அனைத்து சாரதிகளுக்கும் சம அளவில் வழங்குவதன் ஊடாக சாரதிகள் பயனடைவர்.

எனவே மேற்படி விடயத்தை கவனத்தில் எடுத்து தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

# சேவை நயப்பு, கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் சேவை நயப்பு மற்றும் கௌரவிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் ஆசிமட விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தம்பதியர், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் லெஜினா தம்பதியர், கௌரவ விருந்தினராக ஜே/116 சமுர்த்திச் சங்கத் தலைவர் ஆ.ஜெயதாசன் அமிர்தகௌரி தம்பதியர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-10)

# சோமவார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சோமவார உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து தொடர்ந்து நான்கு திங்கள் இடம் பெறவுள்ளது.

பூசைகள் யாவும் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெறுவதுடன் சுவாமி உள்வீதி வலம் வரும் திருக்காட்சியும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ




# திருட்டு குற்றச்சாட்டில் இருவர் கைது

(கரணவாய்)

பருத்தித்துறை நகரிலுள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றினை உடைத்து திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சில மாதங்களிற்கு முன்னர் நகரில் அமைந்திருந்த அபான்ஸ்காட்சியறை உடைக்கப்பட்டு தொலைபேசி, மடிக்கணனி என்பன திருடப்பட்டிருந்தன.

திருடப்பட்ட தொலைபேசிகளின் இமி இலக்கங்களைக் கொண்டு விசாரணை மேற்கொண்டு வந்த பருத்தித்துறை பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரை நேற்று முன்தினம்புதன்கிழமை கைது செய்துள்ளதுடன் தொலைபேசிகளையும் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.(இ-60)

# முன்பள்ளி சிறுமிக்கு ஏற்பட்ட காயம் குறித்து விசாரணை

(கரணவாய்)

நெல்லியடி பகுதியிலுள்ள முன்பள்ளி ஒன்றில் சிறுமி ஒருவரிற்கு காயம் ஏற்பட்டமை தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு பிரிவினரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள முன்பள்ளி ஒன்றில் நான்கு மாதங்களிற்குமுன்னர் சிறுமி ஒருவருக்கு இரண்டு விரல்களில் கடும் காயம் ஏற்பட்டதையடுத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 20/07/2017 அன்று அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒரு விரல் அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மற்றைய விரல் தொடர்ந்தும் இயங்க முடியாமல் உள்ளமையினால் நான்கு மாதங்களின் பின்னர் இது தொடர்பில் சந்தேகம் கொண்ட சிறுமியின் பெற்றோர் கரவெட்டி பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு இது தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரியப்படுத்தியதையடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (இ-60)

# துன்னாலையில் வன்முறை வழக்கு 29வரை ஒத்திவைப்பு

(கரணவாய்)

துன்னாலை வன்முறைச் சம்பவம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த ஜுலை மாதம் 9 ஆம் திகதி சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்து வந்தோரின் ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதனையடுத்து ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்போரும் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் நடைபெற்ற வழக்கிற்கு முன்னிலையாகியிருந்தனர்.

அப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர்களை தொடர்ந்து 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி வழக்கை 29.11.2017 வரை ஒத்திவைத்தார். (இ-60)

# பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

(யாழ்ப்பாணம்)

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தின விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பிரம்மஸ்ரீ அருணாசல சாஸ்திரிகள் மண்டபத்தில் அதிபர் ப.பிரதாபன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கலந்து கொள்வார். (இ-10)

# கலை மற்றும் மொழி வகுப்புக்களை கற்பிக்க வளவாளர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைவாக 2018 ஆம் ஆண்டு திறமை மேம்பாட்டு நிகழ்ச்சிக்காக சண்டிலிப்பாய் பிரதேசசெயலக பிரிவில் அமைக்கப்பட இருக்கும் கலாசார மத்திய நிலைய, தற்காலிக கலாசார மத்திய நிலையத்தில் இசை, நடனம், சித்திரம், நாடகம், சிங்களம், ஆங்கிலம், மிருதங்கம், ஆர்மோனியம், வயலின் ஆகிய பாடநெறிகள் நடைபெற இருப்பதனால் வளவாளர்களை (ஆசிரியர்கள்) தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விபரங்களை இம்மாதம் 24.11.2017ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (இ-7)



மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வித்தியாலயத்தின் 85 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் கார்த்திகேசு முத்தமிழ் கலையரங்கில் இடம்பெற்றது. வித்தியாலய முதல்வர் சு.சிவானந்தம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினராக இந் நிகழ்வில், பாடசாலையில் சேவையாற்றிய அதிபர்கள் மற்றும் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். வறுமையிலுள்ள 10மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகளை கடனாவிலுள்ள 'மீசாலை மக்கள் ஒன்றியம்' வழங்கியுதவியது. மேலும், விக்கினேசன் என்ற நூலும் நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# சமூகப்பணி விருதுக்கு விண்ணப்பம் கோரல்

வடமாகாணத்திலுள்ள சமூக ஆர்வலர்களைப் பாராட்டி அவர்களின் சமூகப்பணிக்கு வழங்கும் விருதுக்கு தகைமையுடையவர்களை விண்ணப்பிக்குமாறு வடமாகாண ஆளுநர் செயலகத்தால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அளப்பரிய சமூகப்பணியை ஆற்றிய சமூக ஆர்வலர்களை பாராட்டி விருது வழங்கும் செயற்றிட்டத்தை வடமாகாண ஆளுநர் ஆரம்பித்துள்ளார்.

அந்த வகையில், ஆராய்ச்சிகளும் புதிய கண்டுபிடிப்புக்களும், விவசாயம், நிரந்தர கைத்தொழில், அரசசேவை, சமூகசேவை, வியாபாரம், பாரம்பரிய ஆயுள்வேதம், வீட்டுக் கைத்தொழில், நன்கொடையாளர்கள் போன்ற பிரிவுகளிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விருதுக்கு, வடமாகாணத்தில் உள்ள சகல பிரதேச செயலர் பிரிவின் ஊடாகவும் தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

வடமாகாணத்திலுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் தமது பிரிவில் உள்ள விருது வழங்க தகுதியானவர்கள் பற்றிய விபரங்களை விண்ணப்பம் மூலம் அறியத்தர முடியும். மேலும் தொலைத்தொடர்பு சாதனங்கள், பத்திரிகைகள் அல்லது வேறு ஊடகங்களில் வரும் மேற்படி தகுதியுடையவர்களை மக்கள் விண்ணப்பம் ஊடாக அறியத்தர முடியும்.

அத்துடன் தம்மை இந்த விருதுக்கு தகுதி உடையவர் என நினைப்பவர்களும் தமது விபரங்களை நேரடியாக அனுப்பி வைக்க முடியும்.

ஒருவர் எத்தனை பிரிவுக்கும் விண்ணப்பிக்க முடியும். ஆனால் தனித்தனியாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். விருதுக்காக தெரிவு செய்யும் பிரிவில் தமக்குள்ள திறமைகளை வெளிக்காட்டுவதற்காக சான்றிதழ்கள், கடிதங்கள், ஆவணங்கள் போன்றவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் அனைத்தும் ஒவ்வொரு பிரிவுக்கும் பொறுப்பாகவுள்ள அனுபவம் மிக்க குழுவால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இந்த விருதுக்கு மேலும் தகுதியுடையவர்களாக மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் சர்வதேச மட்டத்தில் ஒரு புகழை பெற்றிருக்க வேண்டும். தேசிய மட்டத்தில் ஒரு ஆக்கம் செய்திருத்தல் வேண்டும். குறித்த பிரிவில் விசேடமான நிகழ்வுகளுக்கு கௌரவிப்பு பெற்றிருத்தல் வேண்டும். பொது மக்களின் இரசனை வளர்ச்சி, மக்கள் வாழ்க்கையை நல்வழிப்படுத்தல், செய்யும் விடயங்களை இலகுவாக செய்தல், மனித தொடர்புகளின் வளர்ச்சிக்காக செய்த செயற்பாடுகளை உறுதிப்படுத்த வேண்டும்.

பொதுவாக சமுதாய பங்களிப்பு முக்கியமானது என ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். (இ-9)

# வழக்குகளை விரைவுபடுத்த வளர்ச்சி அளவீட்டுச்சபை

## ஐ.தே.க. செயற்குழு தீர்மானம்

(கொழும்பு)

நிதி மோசடி உள்ளிட்ட சட்ட ஒழுங்கு முறைகேடுகளை ஆராயும் அமைப்புகளின் நடவடிக்கைகள் குறித்துக் கண்காணிப்பதற்காக 'வளர்ச்சி அளவீட்டுச் சபை' ஒன்றை நிறுவ ஐ.தே.க. செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஐ.தே.க. செயற்குழுக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் பேரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது, சட்ட ஒழுங்கு ஆய்வு நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிதி மோசடி விசாரணைக் குழு இதுவரை 92 வழக்குகளை விசாரித்து சட்டமா அதிபரிடம் அறிக்கைகள் சமர்ப்பித்திருப்பதாகவும் அவற்றில் 11 சம்பவங்கள் மீது மட்டுமே சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் சிலர் பாரபட்சமாக நடந்து கொள்வதாகவும், சட்ட நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெற இதுவும் ஒரு காரணம் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தாஜுதீன் கொலை வழக்கில் பிரதான சந்தேக நபரான அனுர சேனநாயக்கவுக்கு பிணை வழங்கப்பட்டிருப்பது சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ள பலவீனத்தையே காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா, விரைவில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு புதிதாக 100 அதிகாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவர் என்றும் இதன் மூலம் தாமதம் தவிர்க்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்தக் குழுவின் முதலாவது சந்திப்பு சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் நீதி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி மற்றும் நலன்புரி அமைச்சர் தலதா அத்துகோரள ஆகியோர் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அமைச்சர்களான எரான் விக்கிரமரத்ன, அஜித் பி.பெரேரா, சுஜீவ சேனசிங்க மற்றும் ஜனாதிபதி ஆலோசகர் நிஸ்ஸங்க நாணயக்கார, அசோந்திரா சிறிவர்தன ஆகியோரும் இச்சபையில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வறுமைக்கோட்டிற்குட்பட்ட சிறுவர்களுக்காக

# 543 துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களை சேர்ந்த சிறுவர்களுக்கு பிரிட்டனை சேர்ந்த ஒரு தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

லண்டன் - இலங்கை மீள்குடியேற்றம் மற்றும் மறுமலர்ச்சி நிதியத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தை சேர்ந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட சிறுவர்களுக்கான 543 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக 143 துவிச்சக்கர வண்டிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா. வேதநாயகனிடம் கையளிக்கப்பட்டன.

பிரிட்டனிலுள்ள மக்களால் பயன்படுத்தப்படாத, கைவிடப்பட்ட துவிச்சக்கர வண்டிகள் சேகரிக்கப்பட்டு அவை பிரிட்டன் சிறைகளில் இருக்கும் தொழிற்திறன் கொண்ட கைதிகளிடம் வழங்கப்பட்டு மறுசீரமைக்கப்படுகின்றன.

அந்த துவிச்சக்கரவண்டிகளே யாழ்ப்பாணத்தில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (இ-9)

# புனர்வாழ்வு ஆணையர் பணியகத்தை சட்டமாக்க சட்டமூலம் வருகிறது

(கொழும்பு)

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்தைச் சட்டமாக்குவதற்கான சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

முறைதவறிச் சென்ற போர்வீரர்கள், தீவிரவாத அல்லது அழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள், போதைப்பொருள் மற்றும் விஷ ஔடதங்களுக்கு அடிமையானவர்கள் போன்றவர்களை புனர்வாழ்வளித்து, அவர்களை சமூகமயமாக்குவதற்கும் அவர்கள் தொடர்பான பின்னூட்டல்களை மேற்கொள்வதற்கும் ஏதுவான வகையில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தை நாடாளுமன்ற சட்டமொன்றின் மூலம் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# காணி அபிவிருத்தி கட்டளைகள் சட்டத்தில் திருத்தம் செய்யமுடிவு

(கொழும்பு)

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்வதற்கு, அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, காலத்துக்கு ஏற்றாற்போல் நிபந்தனைகளை உள்ளடக்கிய கொடுப்பனவு அட்டையொன்றை அறிமுகப்படுத்துதல், கொடுப்பனவு அட்டையின் கீழ் வசிப்புக்காக வழங்கப்படுகின்ற காணிகளை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புக்களை செய்துகொடுத்தல், அடுத்த உரிமையைக் குறிப்பிடாது கொடுப்பனவு அட்டை உரித்தான நபர் ஒருவர் மரணிக்கும் போது அவருக்கு உரித்தான கொடுப்பனவு அட்டை சொத்தின் உரிமையை சாதாரண சிவில் சட்டத்தின் கீழ் கிடைக்கும் வகையிலான திருத்தங்களை உட்படுத்தியே இந்தக் கட்டளைகள் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்குவதற்கு, காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக முன்வைத்த யோசனைகளுக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா:80 செவ் 1 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:MBA, ACMA, CPA<br>அவுஸ்ரேலியா<br>தொ.இ: B/7983 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>கி.பா: 17 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/5802 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/7984 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 28<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/கணக்காளர்<br>தொ.இ: G/5803 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: PHD/<br>ஆராய்ச்சியாளர்<br>தொ.இ: B/7986 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 34<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/5808 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 33 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc, MSc/<br>தனியார் தொழில் டுபாய்<br>தொ.இ: B/7987 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/<br>அரசதொழில்<br>தொ.இ: G/5817 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பாதுகாப்பான காலணி, கையுறை, உடை அணியாது கழிவுப்பொருட்கள் அகற்றல்

## கரைச்சி பிரதேச சபையினர் கவனத்தில் கொள்வார்களா?



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் கழிவு அகற்றும் பிரிவில் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கழிவகற்றல் பணியில் ஈடுபடுகின்ற பணியாளர்கள் பாதுகாப்பான காலணி, கையுறை மற்றும் உடைகள் இன்றி நீண்ட நாட்களாக தேங்கி நிற்கும் கழிவுப் பொருட்களை எதுவித கருவிகளுமின்றி தமது கைகளினால் அகற்றி வருகின்றனர்.

இதனால் பணியாளர்கள் சுகாதாரம் மற்றும் உளரீதியான பாதிப்புக்களை எதிர்கொண்டு பணியாற்றுகின்றனர்.

அதனைவிட வேலை முடிந்த பின்னர் குளிப்பதற்கு குளியல் அறை கரைச்சிப் பிரதேச சபையில் அமைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கழிவுப் பொருட்களை தரம்பிரித்து கழிவுகளை சேகரிக்கும் முறைமையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

இதேவேளை நகரை அண்மித்த பொது இடங்களில் கழிவுப்பொருட்களை சேகரிப்பதற்கான கழிவுக்கூடைகள் வைக்கப்படவில்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் நீண்ட நாட்களாக பல பகுதிகளில் கழிவுப் பொருட்கள் ஆங்காங்கே குவிந்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பல சந்தைகளில் கழிவுக் கூடைகள் வைக்கப்படவில்லை என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

கழிவுப்பொருட்களை அகற்றுவதன் மூலம் கரைச்சிப் பிரதேச சபைக்கு வருமானம் கிடைக்கின்ற போதிலும் தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளை சுத்தமாகவும் சுகாதாரமான முறையிலும் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லையென பொது அமைப்புக்கள், மக்கள், வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே கழிவு அகற்றல் தொடர்பில் விரைவாக கரைச்சி பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள், வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-277)



# பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பொருட்கள் வழங்கப்பட்டன




ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிலுள்ள அமைப்புகளுக்கு ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவித்திட்டம் வழங்கப்பட்டுள்ளன.

மீள்குடியேற்றம் மற்றும் சிறைச்சாலை இந்து கலாசார அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் பாராளுமன்ற பன்முகப்படுத்தப்பட்டநிதியிலிருந்து ஐ.தே.கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் அணியின் தலைவரினால் தெரிவு செய்யப்பட்ட அமைப்புகளுக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும் ஐ.தே.கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அணியின் தலைவி ஜெ.தர்சினி தெரிவு செய்யப் பட்ட அமைப்புகளுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும் உத்தியோகபூர்வமாக அமைப்புகளின் தலைவர்களிடம் ஐ.தே.கட்சியின் மாவட்ட இணைப்பாளர் றிசாம் ஜெமால்டீனினால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# வட்டுவாகல் பாலத்தின் மையப்பகுதியில் உடைவு

## முல்லைத்தீவுக்கான போக்குவரத்திற்கு தடை



(மல்லாவி )

பரந்தன் - முல்லைத்தீவு ஏ -35, வீதியில் உள்ள வட்டுவாகல் பாலத்தில் பாரிய உடைவு ஏற்பட்டுள்ளதால் ஏ - 35, வீதியில் புதுக்குடியிருப்பு முள்ளிவாய்க்கால் ஊடான முல்லைத்தீவுக்கான வாகனப் போக்குவரத்துக்கள் முற்றாக தடைப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நீண்ட காலமாக புனரமைப்பு பணிகள் எதுவும் நடைபெறாத நிலையில் தற்காலிகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடப் பெயர்வின் பின்னரான மக்கள் மீள் குடியேற்றத்தின் போது இந்த வீதி தற்காலிகமாக செப்பனிடப்பட்டது.

இந்நிலையில் மிகுந்த அச்சத்தின் மத்தியில் வட்டுவாகல் பாலத்தின் ஊடான வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறுகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நண்பகல் வட்டுவாகல் பாலத்தின் மையப் பகுதியில் திடீரென ஏற்பட்ட வெடிப்பு காரணமாக பாலத்தில் உடைவு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து. இப்பாலத்தின் ஊடாக நடைபெற்ற முல்லைத்தீவு நோக்கிய வாகனப் போக்குவரத்துக்கள் யாவும் தற்போது புதுக்குடியிருப்பில் இருந்து கேப்பாப் பிலவு- வற்றாப் பளை ஊடாக முள்ளியவளை சென்று பின் னர் அங்கிருந்து முல்லைத் தீவுக்கான வாகனப் போக்கு வரத்துக்கள் நடைபெற்று வருகின்றன.

இப் பாலத்தின் தற்காலிக புனரமைப்பு தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளும், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்து ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# மீள்குடியேற்ற அமைச்சினூடாக முல்லையில் 608 வீடுகள் அமைப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு இவ்வாண்டு மீள்குடியேற்ற அமைச்சினூடாக 608 வீடுகள் வழங்கப்பட்டு அதனுடைய வேலைகள் நடைபெற்று வருவதாக மாவட்ட செயலக தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு பல்வேறு திட்டங்கள் ஊடாக வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இருந்தபோதும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் தற்போது மீள்குடியேற்ற அமைச்சினூடாக 608 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் முல் லைத் தீவு மாவட்டச் செயலகத்தினால் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்கள், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 32 கிராம அலுவலர் பிரிவுகளில் 205 பயனாளிகளும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 11 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 201 பயனாளிகளுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 27 கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 103 பயனாளிகளுக்கும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 17 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 36 பயனாளிகளுக்கும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 11 கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 33 பயனாளிகளுக்கும் வெலிஓயா பிரதேசத்தில் 7 கிராம அலுவலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்குமாக 608 வீடுகள் வழங்கப்பட்டு இதில் 19 வீடுகளின் வேலைகள் நிறைவடைந்துள்ளன.

குறித்த வீடுகள் மீள்குடியேற்ற அமைச்சினூடாக 487.20 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருவதுடன், இதில் 361.52 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 334.06 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டுத் திட்டப் பயனாளிகள் தொடர்பில் பெண் தலைமைத்துவக் குடும்ங்கள் மாற்றுத்திறனாளிகள் கடும் பாதிப்பிற்குட்பட்டவர்கள், இந்தியாவில் இருந்து மீளத்திரும்பியோர் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# 'வடக்கு மாகாண செயற்பட்டு மகிழ்வோம்' மாணவர்களுக்கு இடையே போட்டிகள்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சபையின் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண செயற்பட்டு மகிழ்வோம் எனும் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டிகளில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களில் இருந்தும் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட அணிகள் போட்டியிடவுள்ளன.

குறிப்பாக தரம் 3,4,5 ஆகியவற்றைச்சேர்ந்த மாணவர்கள் ஆண், பெண் தனித்தனியாகவும் இருபாலாருமாக கலந்து கொண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. (2-277)

# சமூக நலன் வேலைத்திட்டமும் காசோலை கையளிப்பும்

(கிளிநொச்சி)

தென்னை பயிர்ச் செய்கைச் சபை, கற்பகதரு சங்கத்தினரின் அனுசரணையுடன் சமூக நலன் வேலைத்திட்டமாக "போசணை தொடர்பான வலுவூட்டல்" எனும் கருப்பொருளில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு வளவாளராக யாழ். போதனா வைத்தியசாலையின் துறைசார்ந்த வைத்தியர் பங்குபற்றவுள்ளார்.

அத்துடன் இவ்வருட தென்னை மானியத் திட்ட கிளிநொச்சி மாவட்ட பயனாளிகளுக்கு காசோலைகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இதன் முன்னோடி நிகழ்வாக கற்பகதரு சங்க அங்கத்தவர்களினாலும் மயில்வாகனபுரம் மற்றும் இராமநாதபுரம் பகுதிகளில் வதியும் மக்களினாலும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் தென்னை பயிர்ச்செய்கை சபையினரின் அனுசரணையுடன் சிரமதான நிகழ்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (2)

# சிறுவர், முதியோர், ஆசிரியர் கௌரவிப்பு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் ஆலகால் போட்ட குளம் பகுதியில் சிறுவர், முதியோர் மற்றும் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண விவசாய மீன்பிடி அமைச்சர் க.சிவநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறுவர், முதியோர் மற்றும் ஆசிரியர்களை கௌரவித்தார். (2)

# கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்திற்கு றெஜிபோம் பெட்டிகள் வழங்கி வைப்பு



(முல்லைத்தீவு)

2017 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் மூலம், வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனினால் முல்லைத்தீவு கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்திற்கு, 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 965 மலக்கியமெத்துப்பெட்டிகள் (றெஜிபோம் பெட்டிகள்) வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வானது அண் மையில் ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்தினர் கலந்து கொண்டு, ரவிகரனிடமிருந்து மலக்கிய மெத்துப்பெட்டிகளை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2)

## மன்னார் பொலிஸார் அதிரடி

# 21 கிலோ கேரளக்கஞ்சா பொதிகள், 3,440 போதை மாத்திரைகள் மீட்பு

(மன்னார்)

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிச்சென்ற தனியார் பேருந்தில் இருந்து சுமார் 21 கிலோ கேரள கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டுள்ளதோடு,கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் வீட்டில் இருந்து ஒரு தொகை போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாக பேசாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலைமன்னாரில் இருந்து நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு 9.15 மணிக்கு கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றில் கஞ்சாப்பொதிகள் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவதாக மன்னார் பொலிஸாருக்கு இரகசிய தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மன்னார் பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக பேசாலை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் ஆர்.டி.எம். சிறில் தலைமையில்,உதவி பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட்,பொலிஸ் கொஸ்தாபல்கள் அடங்கிய குழுவினர் குறித்த பேருந்தை வங்காலைப்பாடு சந்தியில் இடை மறித்து சோதனையிட்டனர்.

இதன் போது பேருந்தில் இருந்து சுமார் 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான 21 கிலோ 451 கிராம் எடை கொண்ட கேரள கஞ்சாப் பொதிகளை பொலிஸார் மீட்டுள்ளதோடு பேருந்தில் இருந்த நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் தலைமன்னாரில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்று பேசாலை பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதன் போது குறித்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 3 ஆயிரத்து 440 போதை மாத்திரை களையும் மீட்டுள்ளனர். தற்போது குறித்த சந்தேகநபர்பேசாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

விசாரணைகளின் பின் குறித்த நபர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதோடு,மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் மற்றும் போதை மாத்திரைகள் என்பன மன்றில் ஒப்படைக்கப்பட வுள்ளதாக பேசாலை பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-4)




# கூழாமுறிப்பு குளத்தின் பிரதான துருசு பகுதியின் கதவு உடைப்பு

## குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலை

(மல்லாவி)

ஒட்டுசுட்டான்கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட கூழாமுறிப்பு குளத்தின் பிரதான துருசுப்பகுதியின் கதவு உடைத்து 14 அடி ஆழத்தில் இருப்பதால் மழை வீழ்ச்சி தொடருமானால் குளத்தில் சேரும் மேலதிக நீரை வெளியேற்ற முடியாத நிலையில் குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலை தோன்றியுள்ளதால் அதனை தவிர்க்கும் வகையில் கடற்படையினரின் உதவியுடனும் சீர்படுத்தும் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மனோகரன் சற்குணநேசன் தெரிவித்துள்ளார்



இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கூழாமுறிப்பு குளமானது 14 அடி நீரைக் கொள்ள ளவுடைய இக்குளத்தின் கீழ் 190 ஏக்கரில் விவசாய நடவடிக்கையை 63 விவசாயக் குடும்பங்கள்மேற்கொண்டுவருகின்றன.

அண்மையில் பெய்த கனமழையின் நீர் வரத்துக் காரணமாக குளம் வான் பாய்ந்து தற்போது ஓய்வடைந்துள்ளது.

இவ்வாறான நிலையில், குளத்தின் பிரதான துருசுப் பகுதியின் கதவு. உடைத்து துருசுக்குள் விழுந்துள்ள நிலையில் அதனை மீட்டு எடுத்து புனரமைப்பு செய்வதற்கு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் 35 விவசாயிகளும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கூழாமுறிப்பு பகுதியில் முகாமிட்டுள்ள இராணுவ வீரர்களும் இணைந்து கடும் முயற்சிகளை மேற்கொண்ட போதும் நேற்று வியாழக் கிழமை நண்பகல் வரை முயற்சிகள் கைகூடவில்லை.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தில் முகாமிட்டுள்ள கடற் படையினரின் உதவி கோரப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# கல்லாறு காட்டில் கசிப்பு உற்பத்தி நிலையம் நிர்மூலம்; ஒருவர்கைது



(மல்லாவி)

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங் களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸாரின் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையின் போது தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறுக் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைக்கப்பட்டு கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களுடன் 3 பெரல்களில் உள்ளடங்கிய 600 லீற்றர் கசிப்புக் கோடாவையும் கசிப்பு 20 லீற்றரையும் கைப்பற்றியதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையமும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவின் பொலிஸ் அணியினர் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறுக் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றிவளைத்து கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களுடன் 3 பெரல்களில் உள்ளடங்கிய 600 லீற்றர் கசிப்புக் கோடாவையும் கசிப்பு 20 லீற்றரையும் கைப்பற்றியதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ததன் பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையமும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும், கைதான சந்தேக நபரையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# அழிவுகளுக்கு மத்தியில் மாவீரர் ஒருவரின் கல்லறை

(மல்லாவி)

வன்னி விளான்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்ஒருவரின் வித்துடலைத் தாங்கிய கல்லறை நேற்று முன்தினம்புதன்கிழமை நடைபெற்ற மூன்றாம்கட்ட சிரமதானப் பணிகளின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வன்னிவிளான்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் வன்னியில் இடம் பெற்று முடிந்த இறுதிக்கட்ட யுத்தத்திற்கு பின்னர் இராணுவத்தினர் முகாமிட்டிருந்ததுடன், மாவீரர்களின் கல்லறைகள் அனைத்தையும் அகற்றியிருந்தனர்.

கடந்த 2016. ஆம் ஆண்டு தொடக்கம் இராணுவத்தினர் இந்த துயிலும் இல்லத்தை விட்டு வெளியேறிய பின்னர் கடந்த வருடம் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இம்முறையும் மாவீரர் தினத்தை கார்த்திகை 27 இல் அனுஷ்டிக்கும் முகமாக சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போதே மாவீரர் ஒருவரின் வித்துடல் உள்ள கல்லறை சிதைவடையாமல் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்தின் மாவீரர் நாள் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

(பனிக்கன்குளம்)

வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறஏற்பாடாகியுள்ளதாக மாவீரர் நாள் பணிக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பணிக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த ஆண்டு மாவீரர் நிகழ்வுகள் எழுச்சிபூர்வமாக கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பணிக்குழுவினை சேர்ந்த எஸ். பரமானந்தன் தெரிவித்துள்ளார்.



அத்துடன் மாவீரர் நாள் நிகழ்வுகளில் அரசியல் கட்சியாக நுழைந்து கொள்ள அனுமதி கிடையாது. சாதாரண மக்களாக வரலாம். அவர்களின் பாதுகாப்பு உறுப்பினர்கள் கூட ஆயுதங்களுடன் இந்த இடத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் வித்துடல்களும் விதைக்கப்பட்டுள்ளன.

அவர்களின் பெற்றோர்கள், உறவினர்களை தனித்தனியாக அழைக்க முடியாத ஒரு சூழ்நிலை காரணமாக அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் என்றும் ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-28)

# 50 பயனாளிகளுக்க முருங்கை செயற்றிட்டம் கிராம அலுவலரிடம் விபரங்களை வழங்குங்கள்

## வவுனியா பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் அடுத்த வருடம் முன்னாள் போராளிகள், இந்தியாவிலிருந்து திரும்பி அழைக்கப்பட்டவர்களுக்கு 100 வீட்டுத்திட்டம் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா, கள்ளிக்குளம், சிதம்பரம் கிராமத்தில் இடம்பெற்ற கிராம சக்தி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்துள்ளார். அவர் மேலும் தனதுரையில்,

கிராம சக்தி வேலைத் திட்டம் கடந்த ஒக்டோபர் மாதம் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தற்போது நாடு முழுவதும் இவ் வேலைத்திட்டம் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஜனாதிபதியின் சிந்தனையில் இந்த நாட்டிலிருந்து வறுமையை முற்றுமுழுதாக ஒழிக்க வேண்டும் எனத் தெரிவித்து அதற்கு ஒரு திட்டத்தினை வகுத்து இது ஒரு நீண்டகாலத்திட்டத்திற்கு அமைவாக 2030ஆம் ஆண்டளவிலே இது முடிவுறும். அதன் ஆரம்ப நிகழ்வே இடம் பெற்றுள்ளது. துரதிர்ஷ்டவசமாக இந்த 30 வருடயுத்தத்தில் ஒரு தேங்கிய நிலை வந்துவிட்டது. இல்லா விட்டால் இலங்கை சிங்கப்பூர் போல வந்திருக்கும். அடுத்த வருடமளவில் 100வீட்டுத் திட்டம் அமைத்து முன்னாள் போராளிகளுக்கு அல்லது இந்தியாவிலிருந்து திரும்பியவர்களுக்கு வழங்குவதற்கு திட்டம் ஒன்று போடப்பட்டுள்ளது. அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளோம். இப்பகுதியில் அவர்களையும் குடியேற்றவுள்ளோம். ஒரு ஏக்கர் காணி உள்ளவர்களின் 50பயனாளிகளை தருமாறும் அவர்களுக்கு முருங்கை செயற்றிட்டத்தில் உள்வாங்கி முருங்கை விதை தருவார்கள். அதை வைத்து வளர்த்து அவர்களிடம் திருப்பி 25ரூபாவிற்கு கொள்முதல் செய்வார்கள் இச் செயற்றிட்டத்தில் முயற்சியாளர்கள் கிராம அலுவலரிடம் பெயர் விபரங்களை வழங்குமாறும் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# பொலிஸ் மற்றும் குற்றவியல் நீதித்துறை பல்கலைக்கழகம் விரைவில் தாபிக்கப்படும்

**"நீலப் பசுமை" எனும் தொனிப் பொருளில் 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் (பட்ஜெட்-2018) (09.11.2017) நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.**

வீட்டுரிமை கொண்ட சமூகம் மற்றும் நகர மையங்களை உருவாக்குதல்

215. சபாநாயகர் அவர்களே, ஒவ்வொரு பிரஜையும் ஒரு வீட்டின் உரிமையாளராக வரவேண்டும் என்பதனை உறுதிப்படுத் துவதே எமது தொலை நோக்கமாகும்.

ஆகவே, சமூகத்தின் கீழ் மற்றும் நடுத்தர வருமான பிரிவு மக்களின் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பெருந்தோட்ட வீடமைப்பு, நிலச்சரிவினால் பாதிக்கப் பட்டவர்களை மாற்றிடங்களில் குடியேற்றுதல் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட எமது பிரஜைகளை மீளக குடியேற்றல் என பல வீடமைப்புத் திட்டங்களை நாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். இது தொடர்பில் நான் பின்வருவனவற்றை அறிவிக்க விரும்புகின்றேன்.

216. நாங்கள் நகர மீள் உருவாக்கத் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள குறைந்த வருமானப் பிரிவினரின் தேவைக்காக 20,000 வீடுகளை 2020 ஆம் ஆண்டிற்குள் நிறைவு செய்து வழங்கவுள்ளோம்.

2017 ஆம் ஆண்டளவில் 5,856 வீடுகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப் பட்டுள்ளன. அரசாங்கம் இக்கருத்திட்டங்களை விரைவுபடுத்த அர்ப்பணிப்புடன் இருப்பதனால் 2018 ஆம் ஆண்டின் வரவு- செலவுத்திட்டத்தில் ரூபா 17.5 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும். இக்கருத்திட்டமானது அங்கொடை, கொலன்னாவை, மாளிகாவத்தை மற்றும் தெமட்டகொடை ஆகிய இடங்களில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

217. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உரிய வீட்டு வசதிகள் இன்மையானது யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் மீள்குடியேற்றப்படுவதனை உறுதிப்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் முக்கியதொரு கரிசனையாகக் காணப்படுகின்றது. இது தொடர்பில் 2018 - 2020 காலப்பகுதியில் தேவையான வீடுகளை அமைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ரூ.3000 மில்.)

218. பெருந்தோட்டத் துறையானது எமது ஏற்றுமதி வருமானத்திற்கு தொடர்ச்சியாக பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. அவர்களது வாழ்க்கைத் தரம் இன்றும் நியம நிலைக்கு கீழாகவுள்ளது. பெருந்தோட்ட மக்களை லைன் அறைகளிலிருந்து வீடுகளுக்கு மாற்றும் முயற்சிக்கு நாம் ஆதரவளிக்கவுள்ளோம். நடுத்தர காலப்பகுதியில் 25,000 வீடுகள் இதற்காக வழங்கப்படவுள்ளன. (ரூ.2000 மில்.)

219. கிராமிய வீட்டுத்தேவைகள் உரிமையாளர் முன்னெடுக்கும் வீட்டுத் திட்டம் மற்றும் வீடுகளைத் திருத்துவதற்கு உதவியளித்தலின் ஊடாக தீர்வு பெறப்படவுள்ளது. (ரூ.7000 மில்.)

220. நாட்டில் மத்திய வருமானப் பிரிவினர் வளர்ந்து வருவதன் காரணமாக குறிப்பாக எழுந்துவரும் நகர மையங்களில் செலவு குறைந்த வீடுகளின் தேவை தொடர்பில் அரசாங்கம் தலையிட வேண்டியுள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை என்பன பொறளை, கொட்டாவை, வாதுவை, ஹோமாகமை மற்றும் ராகமை ஆகிய பகுதிகளில் பல கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதுடன் இந்நிகழ்ச்சித்திட்டம் மேலும் விரிவாக்கப்படவுள்ளது. முதற் தடவையாக வீடு கொள்வனவு செய்பவர்களை இலக்காகக் கொண்டு குறைந்த வட்டிக் கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் இம்முயற்சிக்கு நாம் உதவியளிக்கவுள்ளோம். (ரூ.500 மில்.)

221. எமது அரசாங்கத்தின் நிலைபேறான அபிவிருத்தி மற்றும் நிலைபேறான நவீன நகர மையங்களை உருவாக்குகின்ற அர்ப்பணிப்புகளைக் கருத்திற்கொண்டு நகர மீளுருவாக்கல் கருத்திட்டத்திற்கு ரூபா 24 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் இத்திட்டம் கொழும்பு நகர் மற்றும் வேறஸ் கங்கை கருத்திட்டம் உள்ளிட்ட கொழும்பின் சுற்றுச் சூழல் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வெள்ளக் குறைப்பு பொறிமுறை, மெனிக் சந்தையினை பேலியாகொடைக்கு இடம் மாற்றல், நிர்வாக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் கொழும்பு துறைமுக நகருக்கான துணை உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பேரவாவி புனரமைப்பு மற்றும் மீள் அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் ஹோமாகமையில் அமைந்துள்ள தொழில்நுட்ப நகருக்கான வீதியமைப்பு என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. (ரூ.24000 மில்.)

222. சபாநாயகர் அவர்களே, எமது அபிவிருத்தித்திட்ட மாதிரி கொழும்பு மற்றும் அதன் பிறநகர் பகுதிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. இது சகலருக்கும் நன்மைபயக்கும் அபிவிருத்தி உபாயமாகவும் உள்ளதுடன் இது நாட்டின் அனைத்து 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாகும். இதன்படி பட்டினங்கள் மற்றும் உபாய நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பத்தில் கண்டி, அநுராதபுரம், காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை உள்ளடங்கியிருக்கும். (ரூ.12000 மில்.)

223. கல்முனை மற்றும் சம்மாந்துறை பாரிய நகர அபிவிருத்திக்கான பெருந்திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பெருந்திட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள முக்கிய கருத்திட்டங்களுக்கு நாம் உதவிகளை விரிவாக்கவுள்ளோம். நாட்டின் பின்தங்கிய பிராந்தியங்களில் நவீன வசதிகளைக் கொண்டமையும் சிறிய மற்றும் நடுத்தர பட்டினங்களை மேம்படுத்தும் நோக்குடன் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. (ரூ.2000 மில்.)

224. மத்திய அதிவேகப் பாதையின் இரண்டாம் கட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு நாம் நிதியேற்பாடு செய்யவுள்ளோம். (ரூ.10000 மில்.)

225. நாட்டிலுள்ள கிராமிய பாதை வலையமைப்பினை மேம்படுத்துவதற்கு முதலீடு செய்யப்படவுள்ளது. வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் போன்ற அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. (ரூ.4000 மில்.)

226. முன்னோடி "சரிசார" அல்லது முற்பணம் செலுத்தப்பட்ட பிரயாண அட்டை நிகழ்ச்சித்திட்டமானது வெற்றியளித்துள்ளதனால் இத்திட்டத்தினை இ.போ.ச. பேருந்துகளுக்கும் விஸ்தரிப்பதற்கு நாம் ஆதரவளிக்கின்றோம். இம்முனைவிற்கு மேலும் ஆதரவளிக்கும் முகமாக பேருந்து போக்குவரத்திற்காக குறைந்த நேர அட்டவணை அமுல்படுத்தப்படும்.



## நீலப்பசுமை பட்ஜெட்-2018

அனைவருக்கும் ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்குதல்

227. சபாநாயகர் அவர்களே, நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் இணையப் பயங்கரவாதம், நிதிக்குற்றங்கள், போதைப்பொருள் மற்றும் ஆட்கடத்தல் என்பன முக்கியமான அச்சுறுத்தல்களாகும். ஆகவே, எமது பாதுகாப்பு படையினருக்கு உரிய பொருத்தமான வன் உட்கட்டமைப்பு மற்றும் மென் உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுக் கொடுத்து நாட்டு மக்களின் தனிப்பட்ட விடயங்களில் தலையிடாது தேவையான தகவல்களை உள்நாட்டிற்குள் மாத்திரமல்லாது அண்டை நாடுகளின் உதவியுடன் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படும். ஆகவே, வளங்கள் பின்வரும் வகையில் ஒதுக்கப்படும்.

228. இலங்கை பொலிஸ் படையினரை ஒரு தொழில் ரீதியான மக்கள் நட்பான சட்ட அமுலாக்கல் நிறுவனமாக நிலைப்படுத்தும் நோக்கமான பொலிஸ் துறை மறுசீரமைப்பில் சமூக பொலிஸ் முறையானது ஒரு முக்கியமான கூறாக அடையாளம் காணப்பட்டுள்ளது. (ரூ.100 மில்.)

229. பிரதம மந்திரியின் ஒரு முக்கிய எண்ணக்கருவான பொலிஸ் மற்றும் குற்றவியல் நீதித்துறை பல்கலைக்கழகம் தாபிக்கப்படும். இது பிரதானமாக மனித உரிமைகள், சர்வதேச சட்டம் மற்றும் பாதுகாப்பு, குற்றவியல், சட்ட மருத்துவம் மற்றும் புலனாய்வு பகுப்பாய்வு போன்ற துறைகளில் கூடிய கவனம் செலுத்தும். (ரூ.125 மில்.)

230. இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சைபர் குற்றவியல் புலனாய்வு பிரிவானது மேம்படுத்தப்படும் அதே வேளை சமகால தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பொலிஸ் தகவல் மற்றும் தொடர்பாடல் முறைமையானது தரமுயர்த்தப்படும்.

231. ஐக்கிய நாடுகள் சபையானது எமது அமைதி காக்கும் படைகளின் செயற்பாடுகளை பாராட்டியுள்ளதோடு அமைதி காக்கும் முயற்சிகளில் இலங்கையின் பங்களிப்பை அதிகரிக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளது. ஆகவே, இலங்கை படையினர் ஐ.நா. அமைதி காக்கும் படைகளில் பங்குபற்றும் வகையில் தேவையான விசேட பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி பாடநெறிகள் அமுல்படுத்தப்படும். (ரூ.750 மில்.)

சட்ட மறுசீராக்கம்

232. சபாநாயகர் அவர்களே, எமது நீதிமன்றங்களில் நீதிபதிகளின் மற்றும் ஏனைய ஊழியர்களின் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை காரணமாக வழக்குகளினால் நிரம்பி வழிகின்றது.

பிணக்குகள் தீர்ப்பதில் காணப்படும் காலதாமதமானது சிவில் சமூகத்தில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது மாத்திரமல்லாமல் ஒப்பந்தங்களை செயற்படுத்துவதற்கு தடையாகவும் காணப்படுகின்றது. இது நாட்டில் வியாபாரம் மேற்கொள்வதற்கான செலவையும் அதிகரிக்கும். இந்நிலைமையானது நாட்டின் நீதித்துறை உட்கட்டமைப்பிற்கு மேலும் முதலீடுகளை வேண்டி நிற்கின்றது. இச்சூழ்நிலையால் நான் பின்வருவனவற்றை முன்மொழிகின்றேன்.

233. நிதிக்குற்றங்கள், ஊழல்கள் மற்றும் திட்டமிடப்பட்ட குற்றங்கள் உள்ளடங்கலாக எமது நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விசாரிப்பதற்காக ஒரு புதிய உயர் நீதிமன்றத்தை தாபிப்பதற்கு முன் மொழிகின்றேன். இந் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு நவீன கட்புல மற்றும் செவிப்புல பதிவு முறையும் பொருத்தப்படும். (ரூ.25 மில்.)

234. நாங்கள் தானியங்கி வழக்கு முகாமை பொறிமுறை ஒன்றை அறிமுகம் செய்வோம். (ரூ.50 மில்.)

235. இரத்தினபுரி மற்றும் வெலிமடை நீதிமன்றக் கட்டடங்கள் மண்சரிவுக்கு உட்படும் என அடையாளம் காணப்பட்டுள்ளதால் இந்நீதிமன்றங்களை நாங்கள் பாதுகாப்பான இடங்களில் மீள் நிர்மாணம் செய்வதற்கு ஆதரவு அளிப்போம். (ரூ.500 மில்.)

236. கிளிநொச்சி, தெல்தெனிய, பூகொடை மற்றும் கந்தளாய் நீதிமன்றக் கட்டடத் தொகுதிகள் இடம் மாற்றம் செய்யப்பட்டு விரிவாக்கம் செய்யப்படுவதனூடாக இந்நீதிமன்றங்களில் காணப்படும் நெரிசல் மற்றும் வசதிக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும். (ரூ.400 மில்.)

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# வடக்கில் மாற்றுத்திறனாளிகளுக்கு விசேட நிலையம் நிர்மாணிக்கப்படும்

237. இளம் குற்றவாளிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை வயதுவந்த குற்றமிழைத்தவர்களுடன் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்வதனால் சிறுவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆகவே, இப்பிரச்சினையை தீர்க்குமுகமாக இளம் குற்றவாளிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை கொண்டு செல்வதற்காக பிரத்தியேக வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக உதவிகள் வழங்கப்படும். (ரூ.50 மில்.)

### மூலதனச் சந்தையை உறுதிப்படுத்தல்

238. எமது மூலதனச் சந்தையானது பெரியளவில் பயன்படுத்தப்படாமலேயே காணப்படுகின்றது. ஆகவே அதன் மேலதிக அபிவிருத்திக்கு தேவையான சட்ட வேலைச்சட்டகம் மற்றும் கொள்கை சூழலை உருவாக்கப்படுவதை உறுதி செய்வோம். இதன்பொருட்டு, உபாயமல்லா தொழில் முயற்சிகளில் காணப்படும் எமது உரிமைகளானது கைமாற்றம் செய்யப்படுவதனூடாக எமது பங்குச்சந்தை மேம்படுத்தப்படும். எமது மூலதனச் சந்தை உபாயமானது தொழில் முயற்சிகளின் வளர்ச்சிக்கு அவசியமான குறைந்த கிரயத்திலான நீண்டகால நிதிக்கான கிடைப்பனவினை உறுதி செய்வதாகும்.

239. வங்கித்துறைக்கான Basel III ஒழுங்குவிதிகளை ஏற்கனவே அமுல்படுத்தி வருகின்றோம். இதன் இலக்குகள் 2019 ஆம் ஆண்டில் அடையப்படவுள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் "உள்ளக முறைமையில் முக்கியமான வங்கிகள்" என நியமிக்கப்பட்ட 6 வங்கிகளில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய 3 அரச வங்கிகளும் உள்ளடங்கும். இவ்வங்கிகள் பெருமளவில் மூலதன அழுத்தத்திற்கு முகங் கொடுத்துள்ளதோடு இதில் இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியானது சர்வதேச மூலதனச் சந்தையினை வெற்றிகரமாக அணுகி தமது ஐந்தொகையினை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளது. இதன் மூலம் எமது அரச வங்கிகளால் மூலதனச் சந்தையில் இருந்து தமக்குத் தேவையான மூலதனத்தை பெற்றுக் கொள்ளும் அளவிற்கு போதுமான வளர்ச்சியினைக் கண்டுள்ளது. இச்சூழ்நிலையில், நாங்கள் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிகளை கடன் மற்றும் பங்கு மூலதனத்தை திரட்டுவதற்கு அனுமதியளிப்போம். பங்கு மூலதனத்தை அதிகரிப்பதனூடாக அரசாங்கமானது தமது உரிமையைக் கைவிடாது. ஆனால், வைப்பாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் பங்குதாரர்களாவதற்கான சந்தர்ப்பத்தை அளிப்பதற்கு அரசாங்கமானது விரும்புகின்றது. எவ்வாறாயினும், இதற்கான நடவடிக்கையாக 2017 இல் இலங்கை வங்கியில் ரூபா 5 பில்லியன்களை மூலதனமாக உட்செலுத்துவதோடு 2018 இல் மேலும் ரூபா 5 பில்லியன்கள் செலுத்தப்படும். இதற்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டில் பிராந்திய அபிவிருத்தி வங்கியிலும் ரூபா 2.5 பில்லியன்கள் மூலதனமாக உட்செலுத்தப்படும். (ரூ.5000 மில்.)

### கலாசாரம் மற்றும் மரபுரிமைகள்

240. சபாநாயகர் அவர்களே, நாங்கள் செழிப்பான மற்றும் துடிப்பான பாரம்பரியங்களின் பெருமைக்குரிய வாரிசுகளாகும். எமது எதிர்கால சந்ததியினர் இச்செழிப்பினை அனுபவிக்கும் வகையில் இவைகள் பாதுகாக்கப்படல் வேண்டும். எமது அரசாங்கமானது மத வழி பாட்டுத் தளங்கள் மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதில் கூடுதல் கவனம் செலுத்தும். இதற்கு மேலதிகமாக நாங்கள் எமது கலைகள் மற்றும் கலைஞர்களையும் பாதுகாப்பதிலும் அதிக கரிசனைக் கொண்டுள்ளோம். ஆகவே, நான் பின்வருவனவற்றை முன்மொழிகின்றேன்.

241. நாங்கள் பொது நூலகத்தின் கீழ் பௌத்த நூலகம் ஒன்றினை உருவாக்குவோம். (ரூ.50 மில்.)

242. நாடு பூராகவும் காணப்படும் தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க புராதன விகாரைகள் மற்றும் இந்து, கத்தோலிக்க மற்றும் இஸ்லாமிய வழிபாட்டுத் தளங்களைப் புனரமைத்து பாதுகாப்பதற்கு நாங்கள் ஆதரவு அளிப்போம். (ரூ.250 மில்.)

243. அநுராதபுரம், சிவனொளிபாத மலை, மடு, கோணேஸ்வரம், முன்னேஸ்வரம் மற்றும் நல்லூர் ஆகிய இடங்களில் யாத்திரிகர்கள் தங்குமிடங்களை நாங்கள் தாபிப்போம். (ரூ.100 மில்.)

244. ரிடிகல மற்றும் ரஜகலதென்ன தொல்பொருள் பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். (ரூ.25 மில்.)

245. குதிரைப் பந்தய கட்டடத் தொகுதியானது தேசிய கலை, கைவினை மற்றும் நவீன வடிவமைப்பு மத்திய நிலையமாக மாற்றியமைக்கப்படும். இது பாரம்பரிய மற்றும் சமகால கலைஞர்கள், கைவினைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் தமது பொருட்களை காட்சிப்படுத்துவது மாத்திரமல்லாமல் அவற்றிற்கான சந்தைகளையும் உருவாக்குவதற்கான ஒரு கேந்திரமாக அமையும். கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் தமது திறமைகளை மற்றும் பொருட்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காட்சிப்படுத்துவதற்காக நிதி வசதிகளும் செய்து கொடுக்கப்படும். (ரூ.250 மில்.)

246. நடுத்தர மற்றும் உயர் நடுத்தர வருமானம் பெரும் சனத்தொகை வளர்ச்சியைக் கொண்ட நகரங்களில் பொழுதுபோக்கு வசதிகளுக்கு பாரிய குறைபாடு காணப்படுகின்றது. மொரட்டுவை நகரில் உலகத்தரத்திலான ஒரு கவின்கலை நிலையமொன்றை தாபிப்பதனூடாக சமகால கலைகளை அபிவிருத்தி செய்வதற்கு நாங்கள் ஆதரவளிப்போம். (ரூ.600 மில்.)

247. தாழ்ப்பாடு கலாசார நிலையம் புனரமைப்பு செய்யப்படும். (ரூ.25 மில்.)

248. ஜனாதிபதி நலன்புரி நிதியம் மற்றும் டவர் மண்டப மன்றம் ஆகியவற்றினால் ஆதரவளிக்கக் கூடிய கலைஞர்களுக்கான விபத்து மற்றும் மருத்துவக் காப்புறுதி அறிமுகம்செய்யப்படும் (ரூ.10 மில்.)

### பொதுத்துறை

249. சபாநாயகர் அவர்களே, எமது பொதுத்துறையும் உலகின் ஏனைய நாடுகளைப் போன்றே அதன் செயலாற்றுகை மற்றும் மறுசீராக்கல் தொடர்பில் அதிகரித்து வரும் அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளது. எமது நிர்வாகத்துறை கட்டமைப்பானது பலவருட காலமாக சவால்களுக்கும் தேர்வுக்கும் உட்படுத்தப்படாதமையினால் அது செயற்றிறனான மற்றும் வினைத்திறனான சேவை வழங்கலுக்கு இடையூறாகவுள்ளது. போட்டித்தன்மையை உறுதிப்படுத்துவதானது மறுசீரமைப்பு செயற்பாட்டினை ஊக்குவிப்பதற்கு கட்டாயமாக வழிவகுக்கும். நவீன தொழில்நுட்பத்தின் உள்வாங்கல், சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளில் மாற்றம் என்பன கட்டாயமாகும். மிகவும் முக்கியமாக அரச ஊழியர்களை வலுவூட்டுவது இன்றியமையாததாகும். எனவே, நான் பின்வருவனவற்றை முன்மொழிகின்றேன்.



நீலப்பசுமை பட்ஜெட்-2018

250. இலத்திரனியல் மயப்படுத்தல் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை உள்வாங்குதனூடாக சேவை வழங்கலை மேம்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சியை வழிநடத்தும் பொறுப்பானது இக்டா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ரூ.2000 மில்.)

251. நாட்டின் அபிவிருத்தி கொள்கைகளை உருவாக்குவதில் ஒருங்கிணைந்த அணுகு முறையினை தேசிய பொருளாதார சபை உறுதி செய்யும். (ரூ.300 மில்.)

252. அனைத்து திறைசேரி திணைக்களங்களையும் இணைத்து ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையானது தற்போது தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையானது சிறப்பான திறைசேரி செயலாற்றுகைக்கு வசதியளிப்பதோடு அது விசேடமாக சுற்றிக் காணப்படும் செலவு அலகுகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஊழியர்களின் இயலளவைக் கட்டியெழுப்புவதிலும் ஆதரவளிக்கின்றது. இத்தகவல் முறைமையின கீழ் புதியதொரு கணக்கு அட்டவணை ஒன்றும் அமுலப்படுத்தப்படும். (ரூ.500 மில்.)

253. அரச துறை ஊழியர்களுக்கு ஒரு பொது சம்பளப் பட்டியல் முறைமையினை நாம் அறிமுகம் செய்வோம்.

254. அடுத்து வரும் 10 வருடங்களில் நிதி அறிக்கைகள் தயாரிப்பதில் தற்போது பின்பற்றப்படும் திருத்தப்பட்ட காசு அடிப்படையிலான கணக்கீட்டு முறையிலிருந்து உண்மைக் கணக்கீடு முறைமையின் அடிப்படையில் நிதி அறிக்கைகளை தயாரிக்கும் முறைக்கு மாறுவதற்குள்ளோம். இது நாட்டின் ஐந்தொகையை மேம்படுத்துவதோடு சிறப்பான பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையையும் உறுதி செய்யும்.

255. மேலும், முதலீடுகளை மேற்கொண்டு உள்ளுராட்சி மன்றங்களின் இயலளவை உறுதிப்படுத்தவுள்ளோம். (ரூ.150 மில்.)

256. தேசிய மதிப்பீட்டு கொள்கை மற்றும் மதிப்பீட்டு முறைமையினை நாங்கள் அறிமுகம் செய்யவுள்ளோம். இது வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல் என்பவற்றை உறுதி செய்வதோடு ஆதாரங்களின் அடிப்படையிலான தீர்மானம் மேற்கொள்வதற்கும் உதவி செய்யும்.

257. அரச துறையில் காணப்படும் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினது ஒரு முழுமையான ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

258. ஐந்நூறு ஊழியர்களை விட அதிகமான ஊழியர்களைக் கொண்ட அரச காரியாலயங்கள் அல்லது ஒரே சுற்றுச்சூழலில் காணப்படும் தனியார் காரியாலயங்கள் உட்பட இணைந்ததாக குறைந்தது 500 ஊழியர்கள் காணப்படுமாயின் அங்கு சிறுவர் பராமரிப்பு வசதிகளை அரசாங்கம் உருவாக்கும். (தனியார் துறையினரிடமிருந்து அரசாங்கம் அவ்வசதிகளை கொள்வனவு செய்யும்). (ரூ.50 மில்.)

259. தற்போது 2016 ஆம் ஆண்டிற்குப் பின் இளைப்பாறியவர்களுக்கு மாத்திரமே அக்ரகார காப்புறுதியின் நன்மையை பெற்றுக் கொள்ள முடியும். இவ்வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களும் ஒரு பங்களிப்புத் தொகையினை செலுத்துவதன் மூலம் இக் காப்புறுதியின் பயன்களைப்பெற்றுக்கொள்ள முடியும். (ரூ.50 மில்.)

260. அரச ஊழியர்களுக்கான சலுகை அடிப்படையிலான வாகன அனுமதிப்பத்திரத்திற்கு ஏற்புடைய வரிச் சலுகையானது பெறுமதியிலான உயர்மட்ட வரையறையுடன் தொடர்ந்து வழங் கப்படும்.

261. அரசாங்க நிறுவனங்களினால் பெற்றுக்கொடுக்கப்படும் சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்களானது பல வருட காலமாக சீராக்கப்படாமல் காணப்படுகின்றது. இக்கட்டணங்களானது அவ்வப் போது நடைமுறை பொருளாதார குறிகாட்டிகளுக்கமைய சீராக்கம் செய்யப்படல் வேண்டும். கடந்த 3 வருட காலமாக திருத்தப்படாத அவ்வகையான கட்டணங்களை 15 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### நல்லிணக்கம்

262. சபாநாயகர் அவர்களே, இலங்கையானது உயர் பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாடு என்ற இலக்கினை அடைந்து கொள்ள வேண்டுமாயின் நாம் எமது எதிர்கால திட்டங்களை ஒரு உறுதியான ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையில் கட்டியெழுப்புவது அத்தியாவசியமாகும்.

(தொடரும்)




# சிம்பாவே ஜனாதிபதி சிறைபிடிப்பு ஆட்சி அமைத்தது இராணுவம்!

(ஹரரே)
ஆபிரிக்க நாடான சிம்பாவேயில் ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியுள்ளது. 1980-ம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக இருக்கும் முகபே மற்றும் அவரது குடும்பத்தினர் பாதுகாப்பாகவுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடான சிம்பாவேயில் ராபர்ட் முகபே 1980 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். அதிகாரத்தை தனது வசம் கொண்டு வர முயற்சிப்பதாக கூறி அந்நாட்டு துணை ஜனாதிபதி எம்மர்சன் நங்கா வாவை கடந்த வாரம் முகபே பதவி நீக்கம் செய்தார்.



இதனால், ஆளும்ஷானு-பி.எப் கட்சியில் பிளவு ஏற்பட்டது. இராணுவ தலைமை தளபதி ஜெனரல் சிவெங்கா, நீக்கப்பட்ட துணை ஜனாதிபதி நாங்காவாவுக்கு ஆதரவாக நின்றார். இதனால், அந்நாட்டு அரசியலில் குழப்ப நிலை ஏற்பட்டது.

இந்நிலையில், உள்ளூர் நேரப்படி நேற்று முன் தினம் அதிகாலை தலைநகர் ஹரரேவை இராணுவ பீரங்கிகள் சுற்றி வளைத்தன. அதிகளவிலான இரா ணுவ வீரர்கள் ஆயுதங்க ளுடன் தலைநகரை சுற்றி குவிக்கப்பட்டிருந்தனர். அப்போது, துப்பாக்கி மற்றும் பீரங்கிகளால் சுடும் சத்தம் கேட்டதாகவும் கூறப்படுகிறது. அந்நாட்டு அரசு ஊடக தலைமையகத்தையும் இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது.

பாராளுமன்றம் உட்பட அனைத்து அரசு அலுவலகங்களையும் படிப்படியாக இராணுவம் முற்றுகையிட்டு, தன்வசம் கொண்டு வந்தது. ஜனாதிபதி மாளிகையை எப்போது வேண்டுமானாலும், இராணுவம் முற்றுகையிடலாம் என்ற நிலை நீடித்து வந்த நிலையில், ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

'அரசை கைப்பற்றும் நோக்கமில்லை' என இராணுவ செய்தி தொடர்பாளர் முன்னர் கூறியிருந்தார். குற்றவாளிகளை மட்டுமே இராணுவம் குறிவைத்துள்ளது எனவும் தெரிவித்திருந்தார். ஜனாதிபதி முகபே மற்றும் அவரது குடும்பத்தினர் இராணுவத்தின் கண்காணிப்பில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே, 'ரத்தம் சிந்தாமல் நடைபெற்ற மாற்றம்' என ஆளும்கட்சி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

சிம்பாவேயில் குழப்பமான சூழ்நிலை நிலவுவதால் தங்களது நாட்டவர்கள் வெளியே செல்லாமல் பாதுகா ப்பாக இருக்கும்படி அமெரிக்க மற்றும் பிரிட்டன் தூதரகங்கள் அறிவுறுத்தியுள்ளன. (இ-7)

## பரோலில் வந்தபோது 622 சொத்துக்கள் மறு பத்திரப்பதிவு?

### சசிகலாவிடம் விரைவில் விசாரணை



(பெங்களூர்)
சசிகலா பரோலில் வந்திருந்தபோது 622 சொத்துக்கள் மறுபத்திரப்பதிவு செய்யப்பட்டதா ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு ளதால், சசிகலாவிடம் விசாரணை நடத்த அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

சசிகலா உறவினர்கள் வீடுகளிலும், அலுவலகங்களிலும் வருமான வரித்துறை அதிகா கள் கடந்த 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திக வரை 5 நாட்கள் அதிரடி சோதனை நடத்தின

## ரோஹிஞ்யா விவகாரம்

# மனித உரிமை மீறல் தொடர்பாக நியாயமான விசாரணை தேவை

### அமெரிக்கா வலியுறுத்தல்

(நைப்பியிதோ)
மியன்மார் மீது பொருளாதாரத் தடை விதிக்க இது தக்க நேரமில்லை என கூறியுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன், ரோஹிஞ்யா விவகாரத்தில் நம்பகமான விசாரணை கோரியுள்ளார்.

மியன்மாரின் வடக்குப் பகுதியான ரக்கினே மாநிலத்தில் சிறுபான்மை ரோஹிஞ்யா இன முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். பங்களாதேஷ் நாட்டில் இருந்து குடிபெயர்ந்து மியன்மாரில் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்டவர்களாக இருக்கும் இவர்களில் சிலர், கடந்த 2012 ஆம் ஆண்டில் இருந்து ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரின் தாக்குதலால் உயிருக்கு பயந்து ரோஹிஞ்யா முஸ்லிம்கள் பங்களாதேஷத்திற்கு தப்பிச் சென்ற வண்ணமுள்ளனர். இரு நாடுகளுக்கும் இடையிலான ஆற்றின் வழியாக படகில் செல்லும் பலர் விபத்துகளில் சிக்கி உயிரிழந்து வருகின்றனர்.

மியன்மாரிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளின் மீது கடந்த ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி ரோஹிஞ்யா போராளிகள் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து அவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தீவிரமடைந்தது.

மியன்மாரில் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிய நாளிலிருந்து சுமார் 6 இலட்சம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறி அண்டைநாடான பங்களாதேஷத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். ரக்கினே மாநிலத்துக்குள் பத்திரிகையாளர்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பலகாலமாக மியன்மாரின் ஆட்சியை கைப்பற்றி வைத்திருந்த இராணுவம் ஆட்சியாளர்களின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்து இஸ்லாம் மதத்தினரான ரோஹிஞ்யா மக்கள்மீது அடக்குமுறையை பயன்படுத்தி வருவதாக சில நாடுகள் குற்றம்சாட்டுகின்றன.

மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீது இராணுவம் நடத்திவரும் ஒடுக்குமுறைகளுக்கு ஐக்கிய நாடுகள்சபையின்பொதுச் செயலாளர் உட்பட பல உலக நாடுகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர்.



இந்நிலையில், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் மியன்மார் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். தனது பயணத்தில் இராணுவ அதிகாரிகள், ரோஹிஞ்யா மக்கள் என பல தரப்பினரையும் அவர் சந்தித்து பேசினார். இதனையடுத்து, அந்நாட்டின் தலைமை ஆலோசகராக இருக்கும் ஆங் சான் சூகியுடன் நேற்று முன்தினம் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, 'மியன்மார் மீது பொருளாதார தடைகள் வேண்டும் என அறிவுறுத்தக் கேட்கின்றன. ஆனால், இது அதற்கான நேரம் இல்லை. நடந்த காட்சிகள் கொடூரமானவை. மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக நம்பகமான விசாரணை வேண்டும்' என டில்லர்சன் வலியுறுத்தினார்.

மியன்மார் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகி கூறும் போது, இவ்விவகாரத்தில் அமைதியாக இருக்கப் போவது இல்லை என்றார்.

முன்னதாக, பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டுக்கு இடையில் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகரும், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகியை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்ரேஸ் சந்தித்து, ரக்கினே மாநிலத்திலுள்ள மக்களுக்கு மனிதநேய அடிப்படையிலான உதவிகள் சென்று சேருவதை உறுதிப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீனாவில் கடும் பனி முப்பது வாகனங்கள்

## 20 பேர் உயிரி

(பீஜிங்)
சீனாவில் நிலவிவரும் கடும் பனிமூட்டத்தால் நேற்று முன்தினம் தேசிய நெடுஞ்சாலையில் முப்பது வாகனங்கள் ஒன்றோடொன்று வரிசையாக மோதிய விபத்தில் இருபது பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் கிழக்கு பகுதியிலுள்ள அன்ஹூயி மாகாணத்தில் தற்போது பனிப் பொழிவும், பனிமூட்டமும் கடுமையாகவுள்ளது. இந்நிலையில் இங்குள்ள புயாங் நகரில் உள்ள தேசிய விரைவு நெ சாலை நேற்று முன்தினம் பனிப்படலத்தால் மூ பட்டிருந்தது.

இந்த பனிமூட்டத்துக்கு இடையில் அவ் யாக சென்ற சுமார் முப்பது வாகனங்கள் ஒ றோடொன்று வரிசையாக மோதிக்கொண்ட த்தில் பல வாகனங்கள் தீப்பிடித்து எரிந்தன. இ கோர விபத்தில் இருபது பேர் உயிரிழந்ததாகவும் மடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்

## கிம் ஜாங் உன் கடவுள் கொடிய குற்றவாளி ட்ரம்ப் மரண தண்டனைக்குரியவர்

### வடகொரியா வசை மழை



(பியாங்யாங்)
கிம் ஜாங் உன் தோற்றத்தை விமர்சித்த ட்ரம்ப் கொடூரமான குற்றவாளி என்பதையும், கொரிய மக்களால் மரணதண்டனை விதிக்கப்பட்ட ள்ளவர் என்பதையும் தெரிந்து கொள்ள

# வெளிநாடு

சசிகலாவின் தம்பி திவாகரன், உறவினர்கள் டி.டி.வி.தினகரன், இளவரசியின் மகனும், ஜெயா தொலைக் காட்சியின் தலைமை செயல் அதிகாரியுமான விவேக், இளவரசியின் மகள்கள் கிருஷ்ணபிரியா, சகிலா மற்றும் உறவினர்கள் வீடு உட்பட மொத்தம் 187 இடங்களில் இந்தச் சோதனை நடந்தது. சென்னை மட்டும் அல்லாமல் திருச்சி, தஞ்சை, மன்னார்குடி உள்ளிட்ட நகரங்களில் உள்ள சசிகலா உறவினர் வீடுகளிலும் சோதனை நடந்தது.

வருமான வரித்துறை அதிகாரிகள், கைப்பற்றிய ஆவணங்கள் மூலம் சசிகலா சொத்துக்கள் மாற்றம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இதுபற்றி வருமான வரித்துறை உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், "நாங்கள் சோதனை நடத்திய பெரும்பாலான நிறுவனங்களுக்கும், பெங்களூர் சிறையில் இருக்கும் சசிகலாவுக்கும் தொடர்புள்ளது. எனவே சசிக லாவிடம் விசாரணை நட த்த முடிவு செய்துள்ளோம். நீதிமன்றில் முறைப்படி அனு மதி பெற்று சசிகலாவை விசாரிக்க உள்ளோம்" என்றார். (இ-7)

# சர்வாதிகாரத்தால் உலகை பணியவைக்க முடியாது

## வடகொரியாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**சர்வாதிகாரத்தால் உலகை மிரட்டி பணியவைக்க முடியாது என வடகொரியாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா அனு ஆயுத ஏவுகணை சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக வடகொரியா மீது இராணுவ நடவடிக்கை எடுப்போம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்து வருகிறார்.

ஆனாலும் அமெரிக்காவை கண்டுகொள்ளாத வடகொரியா, தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பானை அணு குண்டுகளை வீசி அழித்து விடுவோம் என ஜனாதிபதி கிம் ஜாங் உன் மிரட்டல் விடுத்துள்ளார். வடகொரியாவுக்கு சீனாவும் ரஷ்யாவும் மறைமுக ஆதரவு அளித்து வருகின்றன.

இதற்கிடையே வடகொரிய அரசு சார்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு சமீபத்தில் ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் அமெரிக்கா மீது அணு ஆயுத போர் தொடுக்க தயங்க மாட்டோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் போர் சூழல் ஏற்பட்டு விடுமா? என அப்பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சர்வாதிகாரத்தால் உலகை மிரட்டி பணியவைக்க முடியாது என வடகொரியாவுக்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தேசிய தொலைக்காட்சி ஒன்றில் கூறுகையில், சர்வாதிகாரத்தால் உலகை மிரட்டி பணிய வைக்க முடியாது. அனு ஆயுதம் தொடர்பாக வடகொரியா விடுத்து வரும் மிரட்டலுக்கு யாரும் அஞ்சப் போவதில்லை. சீனாவுக்கும் வடகொரியா பிரதான எதிரியாக விளங்கப் போகிறது என்பதை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உணரும் வேளை வரும் என தெரிவித்துள்ளார். (இ-7)

## ...பனிமூட்டம் ...கள் மோதல் ...பிரிழப்பு



...ரும் 19 பேரில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

# பாகிஸ்தானில் குண்டுகாயங்களுடன் 15 பேரின் உடல்கள் பொலிஸாரால் மீட்பு

(குவெட்டா)

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாண தலைநகர் குவெட்டாவில் ஈரான் நாட்டின் எல்லையையொட்டியுள்ள புலோடா எனும் இடத்தில் பொலிஸார் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்கு துப்பாக்கி குண்டு காயங்களுடன் 15 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

அங்கு ஒரு சில ஆவணங்களும் கிடைத்தன.

அவர்கள் 15 பேரும், பாகிஸ்தானில் இருந்து ஈரானுக்கு சட்டவிரோதமாக செல்ல முயற்சித்து உள்ளனர் என்பது அந்த ஆவணங்கள் மூலம் தெரியவந்தது.

இவர்கள் 15 பேரும் மர்ம நபர்களால் கடத்தப்பட்டதாக நேற்று முன்தினம் பொலிஸில் வழக்கு பதிவானது குறிப்பிடத்தக்கது. (இ-7)

...வேண்டும் என்று வடகொரியா தெரிவித்துள் ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், தனது சமீபத்திய ஆசிய நாடுகள் சுற்றுப்பயணத்தை வடகொரியாவுக்கு எதிராக ஆதரவு திரட்டும் பயணமாக அமைத்துக்கொண்டார். அந்த நாட்டை அணு ஆயுதங்கள், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனைகளை கைவிடச்செய்வதில் அவர் உறுதியாக உள்ளார்.

இந்த பயணத்தின்போது வியட்நாமில் வைத்து அவர் டுவிட்டரில் வெளியிட்ட ஒரு பதிவில், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் என்னை முதியவர் என்று விமர்சிக்கிறாரே என ஆதங்கம் தெரிவித்தார்.

அதே பதிவில் அவரை குள்ளமானவர், குண்டர் என விமர்சித்தார். இது வடகொரியாவில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த நாட்டின் ஆளுங்கட்சி பத்திரிகை 'ரோடாங் சின் முன்' இதுபற்றி தலையங்க கட்டுரை எழுதியுள்ளது. ட்ரம்பை பலவாறு வசை பாடியுள்ளது.

அதில், "வடகொரியாவின் மாபெரும் தலைமையின் கௌரவத்துக்கு இழுக்கு சேர்க்கிற வகையில் விமர்சித்த குற்றம், மன்னிக்க முடியாத மோசமான குற்றம். அவர் (ட்ரம்ப்) கொடூரமான குற்றவாளி என்பதையும், கொரிய மக்களால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளவர் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

வடகொரியாவை பொறுத்தவரையில் ஆட்சியாளர்கள் கடவுள் நிலையில் வைத்து போற்றப்படுகிறார்கள். கிம் ஜாங் உன்னையும் அப்படித்தான் மக்கள் கருதுகிறார்கள்.

அப்படி இருக் கிற போது அந்த உயர்ந்த தலைமை மீது அவமதிப்பை ஏற்படுத்துகிற வகையில் ட்ரம்ப் கருத்து தெரிவித்திருப்பது ஆளுங்கட்சி வட்டாரங்களில் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது. (இ-7)

# நைஜீரியாவில் நான்கு தீவிரவாதிகள் அடுத்தடுத்து தற்கொலைத் தாக்குதல்

## 14 பேர் உயிரிழப்பு

(மைதுகுரி)

நைஜீரியாவில் ஒரே இடத்தில் 2 பெண்கள் உள்ளிட்ட 4 தீவிரவாதிகள் நடத்திய தற்கொலை தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வடபகுதியில் இஸ்லாமிய தேசம் அமைக்கும் முயற்சியில், கொடூரமான தாக்குதல்களை நடத்தி வரும் போகோஹராம் தீவிரவாத அமைப்பு பொதுமக்களையும் கடத்தி கொலை செய்து வருகிறது. மைதுகுரி மற்றும் பிற பகுதிகளில் தொடர்ந்து தற்கொலை தாக்குதல்களையும் நடத்தி வருகிறது. குறிப்பாக பெண்கள், குழந்தைகளை இந்த தற்கொலை



தாக்குதலுக்கு பயன்படுத்துகிறது. இந்நிலையில் போர்னோ மாநில தலைநகரான மைதுகுரியில் நேற்று முன்தினம் 4 தற்கொலை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள மூனா கரி புற நகர்ப் பகுதியில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டனர். 29 பேர் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாக்குதல் நடத்திய இரண்டு பெண்கள் உள்ளிட்ட 4 பேரும் இறந்தனர்.

இந்த தாக்குதல் காரணமாக அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

போகோஹராம் தீவிரவாதிகளை அவர்களின் ஆதிக்கப் பகுதியில் இருந்து விரட்டியடித்துவிட்டதாக கடந்த ஆண்டு அரசு தெரிவித்தது. ஆனால், அரசுக்கு மீண்டும் சவால் விடும் வகையில் தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழர்கள் மீதான சித்திரவதை குற்றச்சாட்டை நிராகரித்தார் பாதுகாப்புச் செயலாளர் கபில

(கொழும்பு)

தமிழ்ப் போராளி சந்தேகநபர்கள் மீது சித்திரவதைகள் மற்றும் பாலியல் வதைகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ள பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்திய ரத்ன; இது ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் கோருவதற்காக கூறப்பட்ட குற்றச்சாட்டு என்று தெரிவித்துள்ளார்.



இலங்கையின் தற்போதைய ஆட்சிக்காலத்தில், கைது செய்யப்பட்ட 50 இற்கும் அதிகமானோர் சித்திரவதை செய்யப்பட்டதாகவும் பாலியல் ரீதியான வதைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அண்மையில் அசோசியேட்டர் பிரஸ் நிறுவனம் ஒரு ஆய்வு அறிக்கையை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில்ஐ.நா அமைதிப்படை பாதுகாப்பு அமைச்சர்கள் மட்ட மாநாட்டில் பங்கேற்க கனடாவின் வன்கூவர் நகருக்கு சென்றிருந்த பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்னவிடம், இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அசோசியேட்டர் பிரஸ் நிறுவனம் கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்கு அவர் "இந்தக் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை. ஆதாரமற்றவை.

பாலியல் மீறல்கள் மற்றும் சித்திரவதைகள் விடயத்தில், அரசாங்கம் சகிப்புத்தன்மையற்ற கொள்கையை கடைப்பிடிக்கிறது.

அரசாங்கம் எல்லாக் குற்றச்சாட்டுகள் குறித்தும் விசாரித்துள்ளது. மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் முடிவடைந்து, அவை மூடப்பட்டு விட்டன.

சிலவேளைகளில் நட்புக்கரங்களால் கூட இவை நிகழ்கின்றன. அவர்கள் கூறுவதன் அடிப்படையில் மாத்திரம், குற்றச்சாட்டுக்களை கருத்தில் கொள்ளக் கூடாது. ஏனையவர்களின் கருத்துக்களையும் அறிய வேண்டும்.இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் இருந்தால், அரசாங்கம் சுதந்திரமான விசாரணையை வரவேற்கும்.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில், இலங்கைக்கான உதவிகள் குறைக்கப்பட வேண்டும் என்று கோருவது, நியாயமற்றது.

இது ஒரு பகுதி மக்களுடன் தொடர்புடைய விடயம் அல்ல. இது எல்லோருக்குமானது.

நிதி உதவிகள் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவுக்கு உரியதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.நா. பொதுச் செயலருடன் சந்திரிகா சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பணியகத்தின் தலைவருமான, சந்திரிகா குமாரதுங்க, ஐ.நா பொதுச்செயலர் அந்தோனியோ குட்ரேரஸை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.



இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது, ஐ.நா. பொதுச் செயலருக்கு சந்திரிகா குமாரதுங்க எடுத்துக் கூறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# உள்ளூராட்சி மன்ற பெண்களுக்கான அடையாள நடைபவனி கொழும்பில்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் பெண்களுக்கு 25 சதவீத பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியமையை அடையாளப்படுத்தும் நோக்கில், கொழும்பில் நேற்று முன்தினம் பாரிய நடைபவனி இடம்பெற்றது.

கொழும்பு - விகாரமகா தேவிப் பூங்காவிலிருந்து பிற்பகல் மூன்று மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந் நடைபவனி, மாலை நான்கு மணியளவில் சுதந்திரசதுக்க வளாகத்தைச்சென்றடைந்தது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா இந் நடைபவனியை வழி நடத்திச் சென்றார். இந் நடைபவனியில், பெருந்திரளான பெண்கள் கலந்துகொண்டனர்.

இறுதியில், இது தொடர்பிலான விசேட வைபவம் ஒன்று, கொழும்பு - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், இரவு 7 மணியளவில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அமைச்சர் பைஸர் முஸ்தபா உள்ளிட்ட அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள், பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



"உள்ளூராட்சி மன்றங்களில், பெண்களுக்கு 25 சதவீத பிரதிநிதித்துவம் கட்டாயம் வழங்கப்படல் வேண்டும் என்று, சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற வைபவத்தின் இறுதியில் கலந்து கொண்டு உரையாற்றும்போது, அமைச்சர் பைஸர் முஸ்தபா வலியுறுத்திக் கூறினார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### புத்திசாலி என்று காட்டிக் கொள்ளலாமா?

எல்லாவற்றிலும் வெற்றி வெற்றி பெற்றபடி இருந்து கொண்டு, இந்தப் பூனையும் பால்குடிக்குமா என்று நம்ப முடியாத அளவுக்கு எளிமையாகக் காட்சி தருகிற அல்லது அடக்கமாக பேசுகிறவர்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு வியப்புத்தான் மேலிடுகிறது.

"நான் இதையெல்லாம் சர்வ சாதாரணமாக முடித்துக் காட்டுவேன்," "அவனை எப்படி மடக்குறதுன்னு எனக்குத் தெரியும். பார்த்துக்கிட்டே இருங்க-அந்தாளை எப்படி மண்ணைக் கவ்வ வைக்கிறேன்னு!" என்றெல்லாம் வீண் பெருமைகளைப் பேசி, அப்புறம் அதைச் செய்யமாட்டாமல் தலையைத்தொங்கப் போட்டுக் கொள்கிறவர்கள் அதிகமாகி விட்ட இந்த சமூகத்தில்-அடக்கமாக எவ்விதச் சவடாலும் இன்றி, கருமமே கண்ணாயினார் என்று காரியங்களை ஆற்றி முடிக்கிறவர்களைப் பார்த்து வியக்காமல் என்ன செய்வது!

இருவரிடையே ஒரு கௌரவப் போர் அல்லது பிரச்சினை ஏற்படுகிறது என வைத்துக் கொள்வோம். "உன்னை என்ன செய்யிறேன் பாரு" என்ற எதிரியின் காதுபடவோ அவர் வட்டாரத்திலோ சொல்லி வைத்தால் எதிரி உஷாராகி விடுகிறான்.

உடனே தாக்குதலைப் பலப்படுத்த ஆரம்பிப்பான்; அல்லது பல்முனைத் தாக்குதலைத் தொடங்குவான். நாம் விழிப்பாகவோ முனைப்பாகவோ இல்லை என்கிற நினைப்பை எதிரியின் மனத்தில் தோற்றுவித்துவிட்டு அமைதியாக அவனை வெற்றிக் கொள்ள வேண்டுமே தவிர, உசுப்பிவிட்டுவிடக்கூடாது.

இதைச் செய்தால் எதிரிகளை மட்டுமல்ல, குடும்பப்பிரச்சினைகளையும் அலுவலகப் பிரச்சினைகளையும் தொழில் செய்யுமிடத்தில் உள்ள பிரச்சினைகளையும், பிரச்சினை உருவாக்குகின்றவர்களையும் நாம் வெற்றி கொள்ள முடியும். இவர்களை வெற்றி கொண்ட பிறகு பாராட்டுப் பத்திரத்திரங்கள் நிறைய வாசித்து அளிக்கப்படும். "பிரமாதப்படுத்திட்டீங்க போங்க" என்பார்கள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லிங்க!" என்று அப்போதும் அடக்கி வாசிக்க வேண்டும்.வெற்றிக்குப் பிறகு எளிமையாகஇருப்பது இரண்டாவது வெற்றி.

நம் புத்திசாலித்தனத்தை நாமே வெளிக்காட்டிக் கொள்ள வேண்டாம். அது நம் செயல்களால் மற்றவர்களுக்கு தானாகத் தெரிய வரட்டும். அதுவரை கடவுளவு பொறுமை தேவை.

**லேனா தமிழ்வாணன்**

# கையிருப்பு இல்லாமல் போனமையே பெற்றோல் பற்றாக்குறைக்கு காரணம்

## அமைச்சர் தயாசிறி விளக்கம்



(கொழும்பு)

மேலதிக எரிபொருளை சேமித்து வைக்காததன் காரணமாகவே இந்த மாத ஆரம்பத்தில் நாட்டில் பெற்றோல் பற்றாக்குறை பாரியளவில் ஏற்பட்டதாக அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதேவேளை, நவம்பர் மாதம் முதல் வாரத்தில் ஏற்பட்ட பெற்றோல் பற்றாக்குறை தொடர்பாக விசாரணை நடத்தும் பொருட்டு அமைச்சரவை உபகுழுவின் அறிக்கைக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)




# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சி

## கூட்டு எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து தேர்தலை ஒத்தி வைப்பதற்கு முயற்சிப்பதாக கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நேரத்திலும் தேர்தலை எதிர்நோக்கத் தயார் என அவர் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் விரிவான ஓர் கூட்டமைப்பினை உருவாக்கி அதனூடாக தேர்தலில் போட்டியிட உத்தேசித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர்ந்த வேறு எந்தவொரு கட்சியுடனும் இணைந்து போட்டியிடத் தயார் என அவர் தெரிவித்தார். (இ-7)

# பொருளாதார நெருக்கடி தற்கொலையை தூண்டுகிறதா?

## யாழில் இன்று கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் பொருளாதார நெருக்கடி தற்கொலைகளைத் தூண்டுகிறதா எனும் தொனிப்பொருளில் கருத்துரை வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோவில் வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம்பெறும்.

இதில் கருத்துரையை பேராசிரியர் வி.பி.சிவநாதன் மற்றும் எஸ்.ஜீவமுகுந்தன் ஆகியோர் வழங்குவர். (இ-10)

# கரும்பு உற்பத்தியாளர்கள் பாதிப்பு; 30 ஆயிரம் குடும்பங்கள் நிர்க்கதி



(கொழும்பு)

மொனராகலை மாவட்டத்தின் செவனகல, பெல்வத்த, ஹிங்குரான ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கரும்பு உற்பத்தியில் ஈடுபடும் 30 ஆயிரம் குடும்பங்கள், குறைந்த வருமானம் காரணமாக நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள், கடந்த 25 நாட்களாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதது ஏன்?" என, நாடாளுமன்ற உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம், சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு கூடியது. சபை ஆரம்ப நடவடிக்கைகளின் பின்னர், 23/2 நிலையியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் அநுரகுமார திஸாநாயக்க இந்தக் கேள்வியை முன்வைத்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது.

"எமது நாட்டின் நுகர்வுக்காக, 9 சதவீத சீனி மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த உற்பத்திகளின் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த கரும்பு உற்பத்தியாளர்கள் பெரும் பங்கு வகிக்கிறார்கள். எனினும், அவர்கள் வருமானத்தில் மிகவும் பின்தங்கியவர்களாகவே காணப்படுகின்றனர்.

குத்தகைக்கு நிலத்தைப் பெற்று, வருமானம் கிடைக்கும் போது குத்தகையை செலுத்துவதற்கே வருமானம் போதுமானதாக உள்ளமையே இதற்கு காரணம்.

"சீனி" உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள், பெரும் பணத்தைக் கொண்டிருக்கின்றன. ஆனால், சாதாரண விவசாயிகளின் விடயத்தில் அவை கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை.

"அந்த விவசாயிகள், 10 கோரிக்கைகளை முன்வைத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவை மிகச் சாதாரணமான, விவசாய மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய கோரிக்கைகள் ஆகும். விவசாயிகளின் இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

இதற்குப் பதிலளித்த நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர், அந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தொழிற்சாலைகளில் நிலவும் தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

இதன்போது கேள்வி எழுப்பிய அநுரகுமார திஸாநாயக்க, "தொழிற்சாலைகளைப் புனரமைப்புச்செய்து, அமைச்சர் தயா கமகேக்கு கொடுப்பதற்கா முயற்சிக்கிறீர்கள்?" எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு, "இல்லை" என அமைச்சர் பதிலளித்தார். (இ-7)

# அரச தொழிற்சாலைத் திணைக்களத்தின் செயற்றிறனை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரச தொழிற்சாலைத் திணைக்களத்தின் செயற்றிறனை அதிகரிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள, அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கே, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச தொழிற்சாலைத் திணைக்களத்தின் செயற்றிறன் மற்றும் உற்பத்தி அளவை அதிகரிக்கும் நோக்கில், உயரத்தில் பொருத்தப்படுகின்ற நவீன 8 தொன் எடைகொண்ட கிரேன் (பாரம் தூக்கி) ஒன்றை, திணைக்களத்தின் தேவை நிமித்தம் கொள்வனவு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், அத்திணைக்களத்தின் நிறுவன கட்டமைப்பைக் கட்டியெழுப்புவதற்காக வளங்களைத் திட்டமிடுவதற்கான மென்பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதியை ஒதுக்கிக் கொள்வது தொடர்பில், அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# போதிய பெண் பிரதிநிதித்துவம் இல்லாத வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் இடம்பெற வேண்டிய முறை தொடர்பில், எதிர்வரும் 10 தினங்களுக்குள் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது ஒவ்வொரு கட்சியும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்கையில், அதில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் பிரதிநிதிகளின் தொகை, அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்படவுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், உரிய எண்ணிக்கையிலான பெண் வேட்பாளர்கள் இல்லாவிடில், அந்தக் கட்சியின் வேட்பு மனுக்கள் நிச்சயம் நிராகரிக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த இரண்டு டிப்பர் வாகனங்கள் பறிமுதல்

(காரைநகர்)

குடத்தனை மேற்கில் இருந்து பருத்தித்துறை வீதியூடாக சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த இரண்டு ஹன்டர் வாகனங்களை பறிமுதல் செய்த காங்கேசன் துறை பொலிஸார், ஒரு சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, சட்டவிரோதமான முறையில், மணலை ஏற்றிக் கொண்டு வந்த இரு ஹன்டர் ரக வாகனங்களை பருத்தித்துறைக்கும் குடத்தனைக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து, காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் பிரிவின் கீழ் இயங்கும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார், இடை மறித்து சோதனை செய்துள்ளனர்.

அப்போது ஒரு ஹன்டர் வாகனச் சாரதி தப்பியோடிய போது மற்றைய சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹன்டர் வாகனத்தையும் சாரதியையும் காங்கேசன் துறை பொலிஸார், பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (இ-9-60)

# நல்லாட்சி அரசு மீதும் தமிழர்கள் அதிருப்தி

## நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார் சாள்ஸ்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் போய் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் வந்தால் காணாமல் போன தமது உறவுகள் மீண்டும் வந்து விடுவார்கள் என தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டார்கள்.



இதன் காரணமாகவே, நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்த தமிழ் மக்கள் கடுமையாக உழைததாரகள என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


"காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்று ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எனினும். இந்த மக்களுக்கு அரசாங்கம் இது வரையில் உரிய பதிலை தரவில்லை எனத் தெரிவித்தார். (இ-7)

# பதவியிலிருந்து என்னை நீக்கும் அதிகாரம் மகிந்தவுக்கு இல்லை

## ரஞ்சித் சொய்சா தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப் பினர் பதவியிலிருந்து என்னை நீக்கப் போவதாக அமைச்சர் மகிந்த அமரவீர அண்மையில் தெரிவித் திருந் தார்.



ஆனால் அவ்வாறு செய்வத ற்கு அவருக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாதென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் உறுப்பினர் ரஞ்சித் டி.சொய்சா தெரிவித் தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற செய்தி யாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தொண்டமான் பெயர் விவகாரம் இந்தியா கவனம் செலுத்தும்

## சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு



(டில்லி)

தொண் டமானின் பெயரை நீக்கிய விவகாரம் குறித்து இந்தியா கவனம் செலுத்தும் என அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் தி.மு.க. செயல் தலைவர் குறித்து மு.க.ஸ்டாலின் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் தனது டுவிட்டர் கணக்கில் சுஷ்மா சுவராஜ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஹற்றன் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொண்டமானின் பெயர் நீக்கப்பட்டது குறித்து சுஷ்மாவுக்கு கடிதம் மூலம் தனது அதிருப்தியை ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

அதில், தமிழ் தொழிலாளர்களின் உரிமைக்காகவும், நன்மதிப்புக்காகவும் உழைத்த முதுபெரும் தலைவர் தொண்டமானின் பெயரை அரச நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளில் இருந்து நீக்கியது அநீதியான செயல் என்றும் திட்டமிட்ட இந்த இருட்டடிப்பின் மூலம் இந்தியாவின் மீதான நன்மதிப்பையும் களங்கப்படுத்தியுள்ளது என்றும் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

சமூக மேம்பாட்டுக்காகப் போராடிய தலைவர்களின் பெயரும் புகழும் எந்த வகையிலும் யாரும் பாழ்படுத்தக்கூடாது என்றும் அவர் தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே சுஷ்மா சுவராஜ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# தேசிய அடையாள அட்டை இல்லை

## தேர்தலில் 3 இலட்சம் பேர் வாக்களிக்க முடியாத நிலை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம்நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலின் போது தேசிய அடையாள அட்டை இல்லாமை காரணமாக மூன்று இலட்சம் பேர் வரை வாக்களிக்க முடியாத நிலை ஏற்படும் அபாயம் காணப்படுவதாக ஆட்பதிவு திணைக்களத்தின் பணிப்பாளர் வீ. குணதிலக்க தெரிவித்துள்ளார்.

தங்க ளது வசிப்பிடத்தை உறுதிப்படுத்த தேவையான உத்தியோகபூர்வ ஆவணங்கள் இல்லாமை காரணமாக மூன்று இலட்சம் பேர் வரை தேசிய அடையாள அட்டை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்தா லோசித்து தேசிய அடையாள அட்டைகள் இல்லாதோருக்கு அதனை பெற்றுக்கொடுக்கும் திட்டமொன்றை விரைவில் நடைமுறைப்படுத்த ஆட்ப திவு திணைக்களம் தீர்மா னித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# வயோதிப மாதுவின் சடலம் மீட்பு

(கரணவாய்)

தனிமையில் வசித்து வந்த மூதாட்டி ஒருவர் வீட்டில் இறந்து அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிகண்டி ஆலடியைச் சேர்ந்த மல்லிகாதேவி (வயது -62) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த மூதாட்டியின் பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் அவர் பொலிகண்டியில் தனிமையில் வசித்து வந்துள்ளார்.

அவரின் வீட்டில் இருந்து நேற்று அதிகாலை துர்நாற்றம் வீசிய நிலையில் அயலில் உள்ளோர் சென்று பார்த்த போது அவர் இறந்து கிடந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற வல்வெட்டித்துறை பொலிஸார் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்தனர். (இ-60)

# முன்பள்ளி கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடி முன்பள்ளியின் வருடாந்த கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தொடர்மாடி குடியிருப்பு முன்பள்ளியில் முன்பள்ளி பொறுப்பாளர் க.ரஜெனஸ்ற் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தூய மரியன்னை பேராலய உதவிப்பங்குத் தந்தை அருட்பணி றிச்சட் ஒலிவர் றெரன்ஸ் கலந்து கொள்வார். (இ-10)

# ஜே.வி.பி.மற்றும் ஐ.தே.க. செயற்பாட்டாளர்கள் சிலர் மைத்திரியுடன் இணைவு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் கண்டி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தரிமுது அபேகோன் உள்ளிட்ட கண்டி மாநகர சபை மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் சிலர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து ஸ்ரீலங்கா சுதந்திர க்கட்சியுடன் இணைந்து கொண்டனர்.

கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டுக்காக முன்னெடுத்திருக்கும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக அவர்கள் தெரிவித்தனர். மத்திய மாகான அமைச்சர் திலின பண்டார தென்னக்கோனுடன் வருகை தந்த இவர்கள், ஜனாதிபதியை சந்தித்தனர்.

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவும் இச்சந்திப்பில் இணைந்துகொண்டார். (இ-7)

# உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்படாத பாம்பினம் சிவனொளிபாதமலையில்

(கொழும்பு)

உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்படாத பாம்பு இனம் ஒன்றை சிவனொளிபாத மலை பகுதியில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சிவனொளிபாத மலையின் மேற்கு மலையடிவாரத்தில் இந்த பாம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த பாம்பு தொடர்பாக கண்டுபிடிப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ள ஆராய்ச்சி சஞ்சிகையான சூட்டாஸ்கா சர்வதேச சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

கண்கொத்தி பாம்பு இனவர்க்கத்தை சேர்ந்த இந்த பாம்பு இலங்கைக்கே உரித்தான இனமாகும்.



இந்த கண்டுபிடிப்புடன் இலங்கைக்கே உரிய 51 பாம்பு இனங்களின் எண்ணிக்கை 52 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 104 வகை பாம்பு இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சமனல கந்தை அமைந்துள்ள பகுதிகளில் வாழும் உயிரினங்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் இந்த பாம்பு இனங்கள் கடந்த 2013ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அலெக்ஸ்சாண்டர் சைரன் உட்பட ஆராய்ச்சியாளர்களால் இந்த பாம்புகள் கண்டுபிடித்துள்ளதுடன் மேலதிக ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அல்கஹோல் குறித்த வரி அறவீட்டு முறையை ரத்து செய்ய கோரிக்கை

(கொழும்பு)

அல்கஹோல் குறித்த வரி அறவீட்டு முறையை ரத்து செய்யுமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், நிதி அமைச்சரிடம் கோரியுள்ளதாக சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தில் வரி அறவீடு தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளை உடனடியாக இடைநிறுத்திக் கொள்ளுமாறு கோரியுள்ளோம்.

இந்த வரிக்கொள்கைகளின் ஊடாக 2016ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட மது ஒழிப்பு குறித்த தேசிய கொள்கைகளுக்கு பாரியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.


நாட்டில் மதுபானம் பயன்படுத்துவோர் தொடர்பில் நிதி அமைச்சர் வெளியிட்ட தகவல்களில் உண்மையில்லை.


வரவு- செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பாதக யோசனைத் திட்டங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டும்.

மருத்துவ பீடங்களை உருவாக்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி எந்த வகையிலும் போதுமானதல்ல என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கற்பக மூலிகை வில்வம்







தமிழ்ப்பெயர் :- வில்வம், வில்வை, குசாபி, கூவிளம்
பொதுப்பெயர் : -வில்வம்.
தாவரவியல் பெயர் :- **Anglemarmelos**

இலங்கை, இந்தியா மற்றும் அயன மண்டலத்தை சேர்ந்த ஆசிய நாடுகளில் காணப்படும் தாவரம் ஆகும்.

இமயமலை அடிவாரத்தில் இருந்து தென் இந்தியாவின் கடைக்கோடி வரை வியாபித்து நிற்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மண்ணில் இருந்து வரும் அரியமரங்களில் ஒன்று. சைவசமயத்தவருடன் மிகவும் தொடர்புடையது.

30இற்கு மேற்பட்ட திருக்கோயில்களில் தலவிருட்சமாக அமைந்துள்ளது. இன்ன பிணிக்கு மட்டுமே மருந்தென்று அமையாது எல்லா பிணிகளையும் நீக்கும் தன்மையுடையது.

3 கூட்டிலைகளை மாற்றடுக்கில் கொண்டு உருண்டையான மணம் உள்ள சதைக்கனிகளை பெற்ற முட்கள் உள்ள பெரியமரம். எண் கூட்டிலைகளை கொண்ட அரிய வகை வில்வம் மகா வில்வம் அல்லது பிரம்ம வில்வம் என்று அழைக்கப்படுகிறது. முள்ளற்ற வில் வகைகளும் அரிதாக காணப்படுகின்றன.

விதை மூலம், காற்றுப் பதியம் மூலம், ஒட்டுக்கன்றுகள் மூலம் அவற்றின் இனப்பெருக்கத்தை மேற்கொள்ள முடியும். இந்துக்கள் மரபு வழியில் பசுஞ்சாணம் கலந்த மண்ணினுள் 3 நாட்கள் விதையை வைத்து அமாவாசை தினத்தில் மணலினுள் புதைத்து,45 நாட்களின் பின் கன்றுகளை பெற்றுக் கொள்கின்றனர். இது இலையுதிர் வகையைச் சேர்ந்த மரம் ஆகும்.

"பார்ச்சூன் ட்ரீ" எனப் படும் அதிர்ஷ்ட வில்வமரத்தை பூஜை செய்து வழிபடுவதன் மூலம் கடன் தொல்லைகள் அகன்று செல்வம் பெருகும் என நம்புகின்றனர்.

வில்வமரம் எங்கு வளர்க்கப்படுகின்றதோ அங்கு மகாலட்சுமி வசிப்பாள் என்பது நம்பிக்கை. சிவபெருமானின் அம்சமாக விளங்கும் வில்லையின் சிறப்பை சிவராத்திரி காலங்களில் அறிந்து வணங்குதல் வேண்டும்.

சித்த மருத்துவத்தில், பித்தத்தை தணிக்கும் மிக முக்கியமான மூலிகை ஆகும். "பழங்களின் ராஜா" என போற்றப்படுகின்றது. இம் மரத்தினது பூ, இலை, பிஞ்சு, பழம், வேர்ப்பட்டை, பிசின் ஆகியவை மருத்துவ பயன் உடையதாக காணப்படுகிறது. வில்வ மரத்தின் பாகங்கள் இயல்பாகவே பூச்சி கொல்லி ஆற்றலும், பூஞ்சை எதிர்ப்புத் தன்மையும் உடையவை.

இலை: நுரையீரல் தொடர்பான நோய் தீர்க்கும் இயல்பு கொண்டது. நாட்பட்ட இருமல், சளி, ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு காலைவேளை உணவுக்கு முன்னர், 7-8 வில்வ இலைகளை சாப்பிட்டுவர நோய் குணமடையும். இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களை அதிகரிக்க செய்யும்.

செரிமான கோளாறுகள், வாயுத்தொல்லைகளையும் வில்வ இலை கட்டுப்படுத்தும்.

## பழம்

இதில் புரதச்சத்து, தாது உப்புக்கள், மாச்சத்து, சுண்ணாம்பு, இரும்பு மற்றும் கொழுப்பு சத்துக்கள் காணப்படுகின்றன. வயிற்றுப்போக்கு, சீதபேதி ஆகியவற்றுக்கு சிறந்த மருந்து. பழத்தின் உள்ளே இருக்கும் கூழ் போன்ற பசையை நல்லெண்ணெயில் ஊறவைத்து உடலில் தேய்த்து குளித்துவர, சொறி, சிரங்கு, தோல் நோய்கள் கட்டுப்படும்.

ஜாம், பழச்சாறு, பழக்கூழ், பானங்கள், இனிப்புகள் போன்றன தயாரிக்கப்படுகின்றது.

## விதை

இதிலிருந்து வில்வ எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இவ் எண்ணெய் முடி வளர்ச்சிக்கு பயன்படுகின்றது.

## பட்டை

காய்ச்சலை கட்டுப்படுத்துவதுடன் நெஞ்சுவலி, மூச்சடைப்பு ஆகியவற்றையும் கட்டுப்படுத்துகின்றது.

## பழத்தின் தோல்

மேல் தோல் ஓடு போல் காணப்படும். அதை நெருப்பில் காட்டி தலையின் வழுக்கை உடைய இடங்களில் பூசிவர நல்ல பலன் கிடைக்கும்.

வில்வவிருட்ச விநாயகர் வழிபாடு


"ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் க்லீம்
ஐம் வில்வரூபிண்யை
சௌபாக்யலட்சுமியை
தனதாண்யகர்யை
நமோநம"!!!!

திருமதி. கி.சுதர்சினி விவசாயப் போதனாசிரியர்,
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்
அலுவலகம், வவுனியா.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1252

### அஜய்

Coffee la சர்க்கரையைக் கொட்டினாலும்
சக்கரைல Coffee ah கொட்டினாலும் கரையப்
போறது சக்கரை தான்



வாழ்க்கைய நெனச்சி வருத்தப்பட்டாலும்
வருத்தப்பட்டுக்கிட்டே வாழ்ந்தாலும்
கரையப் போறது உங்க வாழ்க்கைதான்

### வருண்

Judge Mark அவர்களே
என்ன தவறு செய்துவிட்டார் என் கட்சிக்காரர்?
ஆர்வக்கோளாறில் 4 Request கொடுத்துவிட்டார்



அதற்காக 14 நாட்களா Block செய்வது

### திலீப்

அண்ணே எனக்கொரு சந்தேகம்



மிளகாய்ப்பொடி எதுல இருந்து வருது அண்ணே?
மிளகாயிலிருந்து...
அப்ப பல்பொடிண்ணே?

### சந்துரு


திருடப் போகும் போது ஏன் உன்
மனைவியையும் கூட்டிட்டுப் போன...?



விக்கிற விலைவாசில இரண்டு பேரும்
வேலைக்குப் போனாத் தான் குடும்பம்
நடத்த முடியும்
ஜட்ஜ் ஐயா....!

### கார்த்திக்

பர்சனல் லோன் வாங்கி EMI கட்டற
மக்களுக்கு மட்டுமே தெரியும்



சலரி ஸ்லிப்பில் இருக்கும் சம்பளமும்
பாங்க் எக்கவுண்டில் இருக்கும் சம்பளமும்
வேறு வேறு என்று...

### ஹரிஸ்

மனைவிய அடிச்ச வழக்கில் உனக்கு 1000
ரூபா அபராதம் விதிக்கிறேன்...



ஐயா எங்கிட்ட 2000 ரூபா நோட்டுதான்
இருக்கு வேணும்னா இன்னொரு முறை
அடிக்கவா

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழர்கள் மீதான சித்திரவதைகள் குறித்து தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

பாதுகாப்புப் படையினர் மீது சுமத்தப்பட்டுள்ள சித்திரவதை மற்றும் பாலியல் வதைக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கரிசனை கொண்டுள்ளதாகவும், இத்தகைய மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் அண்மைக்காலத்தில், தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் தொடர்பாக, அசோசியேட்டர் பிரஸ் வெளியிட்ட ஆய்வு அறிக்கை குறித்து, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர், அசோசியேட்டர் பிரஸ் செய்தி நிறுவனத்திடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கை பாதுகாப்புச் சேவைகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது. சித்திரவதைகள், வல்லுறவுகள், பாலியல் வன்முறைகள், உலகில் எங்கு நடந்தாலும், அதனை அமெரிக்கா கண்டிக்கிறது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, விசாரணை செய்யும், இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை நாங்கள் வரவேற்கின்றோம்.

இத்தகைய மீறல்களுக்குப் பொறுப்பான அனைவரையும் தாமதமின்றி, பொறுப்புக்கூற வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அறிக்கையின் அடிப்படையிலேயே உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணயக் குழு வகுத்த திட்டத்துக்கமையவே உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது" என, விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல்திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கேள்வி: உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கமைய உறுப்பினர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் திருத்தம் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் என்ன?

பதில்: உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதென்பது புரிகின்றது. இது முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. எல்லை நிர்ணய விடயத்தில் காலதாமதம் ஏற்பட்டமையால் தேர்தலை உரிய காலத்தில் நடத்த முடியாது போனது.

இவ்வாறான நிலையில் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஆராயப்போனால் அரசாங்கம் தேர்தலை நடத்தாது வீணாக காலதாமத்தை ஏற்படுத்தி வருவதாக அரசாங்கம் மீதே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும்.

கேள்வி: அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தமானது எப்போது நடைமுறைப்படுத்தப்படும்.

பதில்: குறித்த ஒப்பந்தம், டிசெம்பர் மாதமளவில் நடைமுறைப்படுத்தப்படும்.

கேள்வி: அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மீது அரசியல் தரப்பில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட விடயம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதா?

பதில்: அரசியல் தரப்பில் தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் கருத்தை, அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, அமைச்சரவை கூட்டத்தின் போது மறுத்தார். பத்திரிகைகளில் இவ்வாறு தவறாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். இவ்வாறு செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகளுக்குத் தாம் அறிவிப்பதாகவும் தயாசிறி தெளிவாகக் கூறினார். (இ-7)

## தொண்டமான் பெயரை சூட்டக் கோரி டிக்கோயாவில் மீண்டும் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

ஹற்றனில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மீண்டும் தொண்டமான் பெயரை சூட்டக் கோரி 50இற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் மீண்டும் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பதாதைகளை ஏந்திய வண்ணம் தொண்டமான் பெயரை மீண்டும் சூட்டுமாறு கோஷமிட்டனர். ஆர்ப்பாட்டத்தின் பின்னர் டிக்கோயா நகரில் பேரணி ஒன்றும் நடைபெற்றது.

நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டே இந்த ஆர்ப்பாட்டமும் பேரணியும் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் மற்றும் உருவப்படம் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதையடுத்து தொடர்ந்து தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் பூல்பேங்க் என மாற்றம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மாணவிக்கு சீருடையை நீளமாக அணிய அறிவுரை கூறிய ஆசிரியைக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

பாடசாலையின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு பொறுப்பான ஆசிரியை ஒருவரை அச்சுறுத்தியதாகக் கூறப்படும் நபர் குறித்து புத்தளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 13ம் திகதி தரம் 11இல் கல்வி கற்கும் மாணவியொருவர் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட குறைவான நீளம் கொண்ட சீருடையை அணிந்து வந்துள்ளார்.

இதனை அவதானித்த ஆசிரியை மறுநாள் நீளமான சீருடையை அணிந்து வருமாறு கூறியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சம்பந்தப்பட்ட மாணவி தொலைபேசி மூலம் இது பற்றி தந்தைக்கு கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அவர், பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்து குறித்த ஆசிரியையை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் தெரியப்படுத்திய ஆசிரியை புத்தளம் பொலிஸிலும் முறையிட்டுள்ளார்.

இதற்கமைய நேற்று முன்தினம் குறித்த பாடசாலைக்கு பொலிஸார் சென்று சம்பவம் இடம்பெற்ற போது அங்கிருந்த ஏனைய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை விசாரித்துள்ளனர்.

இந்தநிலையில், சந்தேக நபர் புத்தளம் பிரதேசசபையின் முன்னாள் தலைவரது உறவினர் எனவும் அவர் இன்னும் கைதுசெய்யப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## பொதுநலவாய நாடுகளின் முக்கிய கூட்டம் இலங்கையில்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் உள்ளூராட்சி மன்றங்கள் அமைப்பின் வருடாந்த கூட்டத்தொடர் மற்றும் மாநாடு என்பவற்றை எதிர்வரும் 2019ஆம் ஆண்டில் இலங்கையில் நடத்துவதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துள்ளது.

இதற்கான யோசனைகளை மோல்டா நாட்டில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உள்ளூராட்சி மன்றங்கள் அமைப்பின் மாநாட்டில் முன்வைக்கப்பட உள்ளது.

இதேவேளை, இது தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

## புதிய அரசியலமைப்பு தொடர்பாக வெண்தாமரைச் செயற்றிட்டம்

### சுதந்திரக்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

வரலாற்றில் இழைக்கப்பட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டு இருக்காமல், புதிய அரசியலமைப்பு தொடர்பாக வெண்தாமரை திட்டம் போன்ற நாடளாவிய ரீதியில் மக்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஒற்றையாட்சி, அதிகாரப் பரவல் போன்ற விடயங்கள் குறித்து தமிழ், சிங்கள மக்களிடையே காணப்படும் சந்தேகங்களை இந்த வேலைத்திட்டத்தின் ஊடாகவே தீர்த்துக் கொள்ள முடியும் என்று சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

"கலகொட அத்தே ஞானசார தேரர் கூறுகின்ற விடயங்களை நாங்கள் கணக்கில் எடுப்பதில்லை. ஆனால் பெல்லன்வில நாயக்க தேரர் திடீரென முன்னே வந்து கருத்துக் கூறமாட்டார். ஒன்றை அலசி ஆராய்ந்த பின்னரே அவர் கருத்து முன்வைப்பார். உத்தேச புதிய அரசியல் யாப்பு மீது அவரே சந்தேக கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அவர்போன்ற மத்தியஸ்த நிலையிலிருக்கும்



தேரர்களுக்கும் சந்தேகம் எழுந்துள்ளது. புதிய அரசியலமைப்பை அமுல்படுத்தும் முறை குறித்தே அவர்களுக்கு சந்தேகம் காணப்படுகிறது. எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்திருக்கும் சர்வகட்சி மற்றும் சர்வமதத் தலைவர்களுக்கான மாநாட்டில் இந்த சந்தேகங்களை நீக்க முடியும் என நம்புகிறேன்.

2000ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி சந்திரிகாவின் தீர்வுப்பொதியுடன் கூடிய யாப்பினை தீ வைத்து கொளுத்தியிருந்தாலும், மக்கள் மத்தியில் அந்தத் தீர்வுப் பொதிக்கு ஆதரவு இருந்ததை வெண்தாமரை திட்டத்தின் ஊடாக அறிந்துகொள்ள முடிந்தது. எனவே மக்கள் மத்தியில் காணப்படுகின்ற இப்படிப்பட்ட சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக அப்படிப்பட்ட ஒரு விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்று இல்லாமையே பிரச்சினைகள் உருவாவதற்கான காரணமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2017-15.12.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



அன்பிற்கு மட்டுமே அடிபணியும் மிதுன இராசி வாசகர்களே!

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. உங்கள் இராசிநாதன் புதன் 6ஆம் இடத்தில் சகாய ஸ்தானத்திற்கு அதிபதி சூரியனுடன் சஞ்சரிக்கிறார். அதுமட்டுமல்ல குருவின் பரிபூரண பார்வையும் உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே தொட்டது துலங்கும். தொழில் முயற்சியில் வெற்றி கிடைக்கும். பட்ட கஷ்டங்கள் தீர்ந்தது என்று பலரிடம் சொல்லி மகிழ்வீர்கள். தொழிலை விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தொகை வரவு திருப்திகரமாக இருக்கும்.

மங்கல ஓசை, மனையில் கேட்பதற்கான வாய்ப்புகள் கைகூடும். வாசல் வரை வந்து திரும்பிய வரன்கள் கூட மீண்டும் வரலாம். வியாபாரப் போட்டிகள் விலகும். வீடு வாங்கிக் குடியேற வேண்டும் என்ற சிலரது எண்ணம் கைகூடும் நேரம் இது. உறவினர்களுடன் ஏற்பட்ட மனக் கசப்புகள் அகலும். குருப்பெயர்ச்சியாகியும் குழப்பங்கள் அகலவில்லையே, செய்தொழிலில் முன்னேற்றம் ஏற்படவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது எல்லாம் நல்ல விதத்தில் முடியும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் நிலையை அடைய சந்தர்ப்பங்கள் எப்பொழுது வரும் என்று காத்திருந்தவர்களுக்கு இப்பொழுது வெளிநாட்டு தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரப்போகிறது.

2இல் இராகு, 8இல் கேது சஞ்சரிப்பதால் சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. திரண்ட செல்வத்தைக் கொடுக்கும் 2ஆம் இடத்து இராகு என்பது ஜோதிட மொழி. எனவே தொழில் வளர்ச்சியும், வரும் இலாபமும் கூடுதலாகவே இருக்கும். குடும்பத்தில் மற்ற உறுப்பினர்கள் மூலம் வருமானங்கள் வந்து சேரும். அதே நேரத்தில் அஷ்டமத்து கேதுவின் ஆதிக்கம் இருப்பதால் திடீர், திடீரென விரயங்களும் உருவாகலாம். வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது.

மேலும் நாக சாந்திப் பரிகாரங்களை யோக பலம் பெற்ற நாளில், உங்களுக்கு அனுகூலம் தரும் தலங்களைத் தேர்ந்தெடுத்து செய்து வருவது நல்லது. இம்மாதம் திருக்கார்த்திகை வருகிறது. அதற்கு முதல்நாள் பரணிதீபம் ஏற்றுவது வழக்கம். அன்றைய தினம் முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நன்மைகளை அதிகம் வரவழைத்துக் கொள்ளலாம்.


## உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும்!

விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்

நவம்பர் 28ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். பஞ்சம விரயாதிபதியான சுக்ரன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் அதிகம் உருவாகும். பூர்வீகச் சொத்துகள் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு மேலிடத்து ஆதரவுடன், புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

செவ்வாய் பெயர்ச்சிக் காலம்

உங்கள் இராசிக்கு 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் டிசெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்கு செல்கிறார். அங்குள்ள குருவுடன் செவ்வாய் சேருவதால்,




குரு - மங்கல யோகம் உருவாகிறது. பிள்ளைகளின் கல்யாண சீர்வரிசை பொருட்கள் மற்றும் ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உருவாகும். நல்ல தகவல்கள் இல்லம் தேடி வரும். நாகரிகப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதார நிலை உயர வழிவகை செய்து கொடுப்பர். கடன் சுமை குறையும். வீடு கட்டிக் குடியேறும் எண்ணம் நிறைவேறும்.

புதனின் வக்ர காலம்!

உங்கள் இராசிநாதன் புதன், 4ஆம் இடத்திற்கு அதிபதியானவர். அவர் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 12ஆம் திகதி வரை வக்ர இயக்கத்தில் புதன் இருக்கப்போவதால், செயற்பாடுகளில் கூடுதல் கவனம் தேவை. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அரை குறையாக பல பணிகள் நிற்கும். வாகனப் பழுதுகளால் கவலை கொள்வீர்கள். வாய்ப்புகள் வாசல் தேடி வந்தும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. இம் மாதம் கேது பிரீதியாக சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

சுபச்செலவுகள் அதிகரிக்கும் மாதம் இது. பொருளாதார நிலை உயரும். உடன் பிறந்தவர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர். கணவன்-மனைவி உறவு பலப்படும். உதாசீனப்படுத்திய உறவினர்கள் ஓடி வந்து இணைவர். பிள்ளைகளால் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். வங்கிகளில் எதிர்பார்த்தபடி சலுகைகள் கிடைக்கும். தாய் வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு உயரதிகாரிகளுடன் ஏற்பட்ட பகை மாறும். பதவி உயர்வு கிடைப்பதற்கான பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பெறும். பெற்றோரின் மணி விழா, முத்து விழாக்களை நடத்தி மகிழும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உண்டு. செந்தில்நாதன் வழிபாடு வந்த துயரங்களைத் தீர்க்கும்.



வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்கும் வரை முயற்சிக்கும் கடக இராசி வாசகர்களே!

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் சுக ஸ்தானத்தில் குருவோடு இணைந்து குரு- சந்திரயோகத்தை உருவாக்குகிறார். தனாதிபதி சூரியன் சகாய, விரயாதிபதி புதனுடன் கூடி 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய பாதை புலப்படும். வருங்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சிகள் கைகூடுவதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

குரு பார்வை 8,10,12 ஆகிய 3 இடங்களில் பதிகின்றது. எனவே சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்புகள் வந்து சேரும். பயணங்களால் வளர்ச்சி உண்டு. இடமாற்றம், வீடுமாற்றம் எதிர்பார்த்தபடி அமையும்.

மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மதிப்பும், மரியாதையும் உயரும்.

கூட்டாளிகளில் ஒரு சிலர் உங்களை விட்டு விலகினாலும், புதிய கூட்டாளிகள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுக்க முன்வருவர். ஜென்மத்தில் இராகு இருப்பதால் சர்ப்பக் கிரகத்தின் ஆதிக்கம் பலமாக உள்ளது. எனவே கனவிலும், நனவிலும் நாகதரிசனம் வந்து செல்லும். அதற்காகப் பயப்பட வேண்டியதில்லை. இராகு-கேதுக்கள் லக்னத்தில் இருக்கும் பொழுது, வாழ்விலும், பொருளாதார நிலையிலும் ஏற்ற-இறக்கம் வந்து கொண்டேயிருக்கும். எப்பொழுதும் பொருளாதார நிலை சமநிலையில் இருக்க, இராகு-கேதுக்கள் வழிபாடு சிறப்பானது. அதற்குரிய சிறப்பு ஸ்தலங்களை தேர்ந்தெடுத்து நன்மை தரும் நட்சத்திர நாளில் வழிபட்டு வருவது நல்லது. இம்மாதம் திருக்கார்த்திகை நாளில் கதிர்வேலனை வழிபட்டு வருவதன் மூலம் கவலைகள் உங்களை விட்டு அகலும்.

விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்

நவம்பர் 28ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் சுக்ரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு சுக இலாபாதிபதியாக விளங்குபவர் சுக்ரன். அவர் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அணிந்து அழகு பார்ப்பீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் வாய்ப்பு கிட்டும். குழந்தைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

செவ்வாய் பெயர்ச்சிக் காலம்

டிசெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்கு செவ்வாய் பெயர்ச்சியாகிச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். தற்சமயம்




அவர் 3இல் இருப்பதால் சொத்துகள் வாங்கும் யோகம் ஏற்படும். வீடு, மனை வாங்கும் முயற்சி கைகூடும். பணம் ஏதாவது ஒரு வழியில் வந்து சேரும். பதவியில் இருப்பவர்களுக்கு கூடுதல் பொறுப்பு கிடைக்கும். தொழில் முயற்சிக்கு, வங்கிகளில் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது கிடைக்கும்.

புதனின் வக்ர இயக்கம்!

நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 12ஆம் திகதி வரை புதன் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். 3,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் வக்ரம் பெறும் பொழுது இடமாற்றம், வீடுமாற்றம் உருவாகலாம். குடியிருக்கும் வீட்டை ஒரு சிலர் விலைக்கு வாங்க முன்வருவர். சகோதரர்களுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை விரயம் செய்ய நேரிடும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். வாகன மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். இம்மாதம் செவ்வாய் தோறும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மாதத் தொடக்கத்தில் உங்களுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். வாங்கல்-கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். திட்டமிட்ட காரியங்களைத் திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். சுக்ரப் பெயர்ச்சிக்குப் பிறகு கணவன்-மனைவிக்குள் அன்பு கூடும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். குடும்ப இரகசியத்தை வெளியில் சொல்லியதன் விளைவாக ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தாய்வழி ஆதரவு உண்டு. தங்கம், வெள்ளி வாங்குவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும். நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்று ஒரு சிலருக்கு உத்தியோக வாய்ப்பு கிடைக்கலாம். சர்ப்ப சாந்தி செய்வதன் மூலம் சந்தோஷம் கிடைக்கும்.

## திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள்!

(தொடரும்)




# தன் கையே தனக்குதவி



ஒரு கிராமத்தில் கந்தசாமி என்பவர் வசித்து வந்தார். அவருக்கு வடிவேலு என்ற ஒரு மகன் இருந்தான். அவ்வூரில் பத்தாம் வகுப்புப் படித்து வந்தான்.

அவர்களுக்கு அந்த ஊரில் கொஞ்சம் நிலம் இருந்தது. கந்தசாமி அந்த நிலத்தில் பயிரிட்டிருந்தார். நேரம் கிடைக்கும்போது வடிவேலுவும் பயிரைப் பாதுகாக்க வயலுக்குச் செல்வது வழக்கம். அந்த வருடம் நல்ல மழை பெய்ததால் கந்தசாமியின் நிலத்தில் நல்ல விளைச்சல் கண்டிருந்தது. தினமும் காலைவேளையில் தன் மகன் வடிவேலுவை அழைத்துக் கொண்டு விளைந்து கதிர் முற்றிய பயிரைப் பார்த்துச் செல்வார். வடிவேலுவும் பயிர் பற்றிய கேள்விகளை அவரிடம் கேட்பான் கந்தசாமியும் மகிழ்ச்சியுடன் அவனது கேள்விகளுக்குப் பதிலுரைப்பார்.

தினமும் வயல் வரப்பில் நின்று இவர்கள் பேசிக்கொண்டு இருப்பார்கள். அந்த வயலில் விளைந்த பயிர்களுக்கிடையே ஒரு குருவி கூடு கட்டித் தன் குஞ்சுகளை வளர்த்து வந்தது. தினமும் அப்பாவும் மகனும் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கும் அந்தக் குஞ்சுகள். மாலையில் வீடு திரும்பும் தங்களின் தாயிடம் வடிவேலுவும் கந்தசாமியும் பேசிக்கொண்டதைச் சொல்லும்.

அன்று தாய்க் குருவி வழக்கம் போல இரை தேடப் புறப்பட்டது. புறப்படும் முன் தன் குஞ்சுகளிடம் அப்பாவும் மகனும் பேசிக் கொள்வதைக் கவனித்துத் தன்னிடம் கூறும்படிக் கூறிவிட்டுச் சென்றது. வழக்கம்போல கந்தசாமி தன் வயலுக்கு வந்து பார்வையிட்டார்.

அந்த வயல் முழுவதும் கதிர் முற்றித் தலை சாய்ந்திருந்தது. கந்தசாமி தன் மகனைத் திரும்பிப் பார்த்தார்.

"நம்ம வயலில் கதிர் முற்றித் தலை சாய்ஞ்சிடுச்சு. இனிமேல் அறுவடை செய்திடலாம். நீ நாளைக்கு நம்ம கதிரை அறுக்க ஆளுங்களைக் கூட்டி வந்துடு" என்று கூறியபோது வடிவேலுவும் "சரி அப்பா" என்று கூறினான்.

அன்று மாலையில் தங்களின் தாய்க் குருவி வந்தவுடன் குஞ்சுகள் கீச் கீச்சென்று கத்தித் தங்களின் அச்சத்தைத் தெரிவித்தன. செய்தி என்ன என்று கேட்டபோது குஞ்சுகள் அழுது கொண்டே அறுவடை நடக்கப் போவதைத் தெரிவித்தன.

அந்தத் தாய்க் குருவியோ சற்றும் அலட்டிக் கொள்ளாமல் தன் குஞ்சுகளுக்கு தைரியம் கூறிற்று. "குழந்தைகளே. நிலத்துக்கு உரியவர் தன் மகனிடம் தானே சொல்லியிருக்கிறார். நீங்கள் பயப்படாமல் இருங்கள்".

சமாதானம் கூறிய தாய்க் குருவி மீண்டும் மறுநாள் இரை தேடப் புறப்பட்டது. அன்றும் கந்தசாமி வயலுக்கு வந்தார்.

தன் மகனைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டார். "வேலு, நாளைக்கு நீயே போய் ஆட்களை அறுவடைக்குக் கூட்டிவா" என்று கடுமையாகக் கூறினார். அவனும் "சரி அப்பா" என்று அச்சத்துடன் பதிலளித்தான்.

அன்று மாலை வழக்கம்போலத் தாய்க்குருவி தன் கூட்டிற்கு வந்தது. அன்றும் கந்தசாமியும் வடிவேலுவும் பேசிக் கொண்டதைக் கூறிய குஞ்சுகள். அவற்றைப் பார்த்துத் தாய்க் குருவி" பயப்படாதீர்கள். அவர் அறுவடை செய்ய மாட்டார். அவர் அறுவடை செய்வதாகத் தெரிந்தால் நான் வீடு மாற்றிவிடுவேன்" என்று கூறித் தைரியமாக இருக்கும்படி கூறியது தாய்க் குருவி.

மறுநாள் காலையும் இரை தேடப் புறப்பட்டது தாய்க் குருவி. வழக்கம்போல கந்தசாமி என்ன பேசுகிறான் என்பதைக் கேட்டுத் தன்னிடம் கூறும்படி கூறிச் சென்றது தாய் குருவி. அன்று கந்தசாமி வடிவேலுவுடன் வராமல் தனியே வந்தார். கதிர்கள் படுத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கோபம் கொண்டார்.

பின் தனக்குள் பேசிக் கொண்டார்" சே, என்ன பையன் இவன். ஒரு ஏற்பாடும் செய்யாமல் விட்டுவிட்டானே. இனி அவனை நம்பிப் பயனில்லை. நாமே களத்தில் இறங்கவேண்டியதுதான்" என்று புலம்பியவாறே வீடு நோக்கி நடந்தார்.

மாலையில் வீடு திரும்பிய தாய்க் குருவியிடம் குஞ்சுகள் முறையிட்டன. நாளைக்கு அவரே களத்தில் இறங்கப் போகிறார். இச்செய்தியைக் கேட்ட தாய்க் குருவி" நான் வேறு இடம் பார்த்து வரும் வரை பத்திரமாக இருங்கள். நாம் வேறு வீடு கட்டிக்கொண்டு போய் விடலாம்" என்று கூறிச் சென்றது.

இப்போது வேறு வீட்டுக்குக் குடிவந்து விட்டது அந்தக் குருவிக் குடும்பம். அப்போது அந்தக் குருவிக் குஞ்சுகளில் சற்று கெட்டிக்காரக் குஞ்சு கேட்டது "அம்மா, மூன்று நாட்களாக இடம் மாற்றாத நீ இப்போது மட்டும் ஏன் மாற்றினாய்".

"அதுவா, மூன்று நாட்களாக அந்த முதலாளி மற்றவர் உதவியை நாடினார். அதனால் அவர் வேலை நடக்காது என்று தெரிந்து கொண்டேன். ஆனால் இப்போது தானே அந்த வேலையைச் செய் வதாகக் கூறியபோது இனி அந்த வேலை முடிந்துவிடும் எனப் புரிந்து கொண்டேன். இனியும் நாம் அங்கிருப்பது நமக்கு ஆபத்து அதனால் வேறு பாதுகாப்பான இடத்தைத் தேடி வந்துவிட்டேன்."

"அம்மா, தன் கையே தனக்கு தவி என்பதை அந்தப் பெரியவர் இப்போது புரிந்து கொண்டிருப்பார் இல்லையோ?" என்று கூறிச் சிரித்தது அந்தப் புத்திசாலிக் குருவி.

தாய்க் குருவியும் சிரித்தபடியே "அவர் புரிந்து கொண்டாரோ இல்லையோ நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்" என்று கூறித் தன் குஞ்சுகளை அணைத்துக் கொண்டது.

## 11.2017 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1511- ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து ஆகியன பிரான்சுக்கு எதிராக அணி திரண்டன.
- 1558- இங்கிலாந்தின் முதலாம் மேரி இறக்க அவரது ஒன்றுவிட்ட சகோதரி முதலாம் எலிசபெத் அரசியானார்.
- 1831- எக்குவாடோர் மற்றும் வெனிசுவேலா ஆகியன பாரிய கொலம்பியாவில் இருந்து பிரிந்தன.
- 1869- எகிப்தில் சூயஸ் கால்வாய் திறக்கப்பட்டது.
- 1903- ரஷ்யாவின் சமூக ஜனநாயக தொழிற் கட்சி போல்ஷெவிக் (பெரும்பான்மை). மேன்ஷெவிக் (சிறுபான்மை) என இரண்டாகப் பிளவுண்டது.
- 1918- யாழ்ப்பாணத்தில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. நூற்றுக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். நிவாரண நிதியம் அமைக்கப்பட்டது.
- 1922- முன்னாள் ஓட்டோமான் பேரரசின் சுல்தான் ஆறாம் மெஹ்மெட் இத்தாலிக்கு நாடு கடத்தப்பட்டான்.
- 1950-14வது தலாய்லாமா டென்சின் கியாட்சோ தனது 15வது வயதில் திபெத்தின் அரசுத் தலைவரானார்.
- 1968- அலெக்சாண்ட்ரொஸ் பனகோலிஸ் என்பவருக்கு கிரேக்க சர்வாதிகாரி ஜோர்ஜ் பப்படொபவுலொசைக் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- 1970- வியட்நாம் போர்: மை லாய் படுகொலைகள் தொடர்பாக அமெரிக்காவின் லெப்டினண்ட் வில்லியம் கலி விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.
- 1970- டக்லஸ் ஏங்கெல்பேர்ட் முதலாவது கணினி mouse க்கான காப்புரிமம் பெற்றார்.
- 1989- பனிப்போர்: செக்கோசிலவாக்கியாவில் இடம் பெற்ற மாணவர் போராட்டம் கலகம் அடக்கும் பொலிஸாரால் நசுக்கப்பட்டது. ஆனாலும் இந்நிகழ்வு பின்னர் டிசெம்பர் 29 இல் கம்யூனிச அரசைக் கவிழ்க்க ஆரம்பமாக அமைந்தது.

### பிறப்புகள்

- 1909-சி. இலக்குவனார், தமிழகத் தமிழறிஞர் (இ. 1973)
- 1917- க. வேலாயுதம், ஈழத்து எழுத்தாளர் (இ. 2009)
- 1920-ஜெமினி கணேசன், தமிழ்த் திரைப்பட நடிகர் (இ. 2002)
- 1930- பிரேம்ஜி ஞானசுந்தரம், இலங்கை எழுத்தாளர், பத்திரிகையாளர் (இ. 2014)

### இறப்புகள்

- 1989-திருச்சி லோகநாதன், தமிழ்த் திரைப்படப் பின்னணிப் பாடகர்
- 2013- பூரணி, தமிழக எழுத்தாளர் (பி. 1913)
- 2013- திடீர் கன்னையா, நகைச்சுவை நடிகர்
- 2015- பித்துக்குளி முருகதாஸ், பக்திப் பாடகர் (பி. 1920)

### சிறப்பு நாள்

- அனைத்துலக மாணவர் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 300 | 200 | 200 | 180 |
| உருளைக்கிழங்கு | 50 | 50 | 80 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 550 | 600 | 700 |
| தக்காளி | 100 | 150 | 120 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 20 | 60 | 50 | 50 |
| கோவா | 150 | 150 | 160 | 160 | 120 |
| கரட் | 120 | 120 | 160 | 240 | 140 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 | 50 |
| புடோல் | 100 | 100 | 80 | 120 | 120 |
| வாழைக்காய் | 100 | 60 | 80 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 200 | 400 | 350 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 120 | 160 | 120 |
| பாகற்காய் | 350 | 400 | 300 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 130 | 250 | 200 | 250 | 300 |
| லீக்ஸ் | 150 | 250 | 200 | 280 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 120 | 160 | 100 |
| கறிமிளகாய் | 350 | 200 | 280 | 320 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 100 | 150 | 200 | 300 |
| போஞ்சி | 250 | 250 | 180 | 240 | 160 |
| கத்தரித்தம்புள்ள | 200 | 100 | — | 160 | 160 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 50 | 100 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 75 | 60-100 | 60 |
| இராசவள்ளி | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | 240 | 60 |
| முள்ளங்கி | 60 | 200 | 120 | 120 | 40 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 150 | 60 | 80 | 80 |

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதம்
ஐந்தும் அகத்தே நகும்.

*- திருவள்ளுவர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உலகின் உன்னத இனம் என்ற பெருமையை இழந்த பின்னும்...

வள்ளுவர் செப்பாத பொருள் எதுவுமில்லை. வள்ளுவத்தைக் கற்றறிந்தால் உலகைக் கற்றறியலாம் என்பது மட்டுமல்ல தர்மத்தின் வழியில் வாழ்வை அமைத்துக் கொள்ளவும் முடியும்.

1330 குறட்பாக்களில் ஒன்று
*தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்* என்பதாகும்.

இதன் பொருள், ஒருவரைத் தெளிந்து கொண்டு அவரை உறவாக்க வேண்டும். அவ்வாறு தெளிந்து கொள்ளாமல் உறவாக்குவதும் தெளிந்து உறவாக்கியவர் மீது ஐயுறவு கொள்வதும் தீராத துன்பத்தைத் தரக் கூடியதாகும்.

ஆக, இதிலிருந்து வள்ளுவர் கூறுவது எவரையும் நன்கு அறியாமல் அவரை உறவாக்கிக் கொள்ளக்கூடாது.

மாறாக ஆராய்ந்து அறிந்து ஒருவரை நட்பாக்கிய பின்னர் அவர் மீது சந்தேகம் கொள்வதாக இருந்தால் அது எப்போதும் துன்பத்தைத் தரும்.

வள்ளுவன் கூறிய இக்குறள் மிகவும் முக்கியமானது. இன்றைய தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் ஒற்றுமையை குலைக்கவும், தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்களை வெறுப்படையச் செய்யவும் அப்பட்டமான பொய்ப்பிரசாரங்களை மேற்கொள்ளவும் கடுமையான முயற்சிகள் நடக்கின்றன.

ஏன்தான் இப்படிச் செய்கிறார்கள் என்று நொந்து கொள்வதைத் தவிர வேறு வழியின்றி தமிழினம் தத்தளிக்கிறது.

எங்களிடம் இனத்தின் பெயரால் ஒற்றுமை இருந்திருக்குமாயின் தமிழ் மக்களை எவராலும் எதுவும் செய்திருக்க முடியாது.

முப்பது ஆண்டுகாலப் போராட்டத்தின் முடிவு தோல்வி என்பதாக அமைவதற்கு எங்கள் இனத்தில் இருந்த காட்டிக் கொடுப்புகளே காரணமாயின.

இயேசுபிரானை அவரோடு கூட இருந்த யூதாஸ் காட்டிக் கொடுத்தான். அதற்காக வெள்ளிக்காசுகள் கொடுக்கப்பட்டன.

பிதாமகனின் வாழ்வில் நடந்த காட்டிக் கொடுப்புகளும் வெள்ளிக் காசுச் சலுகைகளும் மனித இனத்தில் சேர்ந்து கொண்டதாயினும் அது தமிழினத்தில் அதிகமாயிற்றோ என்று எண்ண வேண்டியுள்ளது.

ஆம், எங்கள் விடுதலைப் போராட்டத்தின் அஸ்தமனம் காட்டிக் கொடுப்புக்களாலும் நயவஞ்சகத்தாலும் நடந்தேறின.

இதற்காக அற்ப சொற்ப காசுகள் கைமாறப்பட்டன. இதனால் அவலமாக உயிர்விட்ட எங்கள் உறவுகளின் அழுகுரல்களும் அவல ஓலங்களும் இன்றுவரை ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

இந்த உலகில் தமிழர்கள் முதன்மையானவர்கள். அவர்கள் வீரர்கள், தியாகிகள், இனப்பற்றுக் கொண்ட மாமனிதர்கள் என்ற பெருமைக்குரிய இனமாக விழித்துரைக்கப்பட வேண்டிய நம் தமிழினம் அவற்றையெல்லாம் இழந்து,

இன்று வாழத் தெரியாத - சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தத் தெரியாத இனம் என்று முத்திரையிடப்படுமளவுக்கு எங்கள் ஒற்றுமையீனங்களும் காட்டிக் கொடுப்புகளும் அப்பட்டமான பொய்யுரைகளும் எங்களை அதல பாதாளத்தில் வீழ்த்தியுள்ளன.

இந்தக் கொடுந்துயர் கண்ட பின்பும் எங்கள் உறவுகள் துடிதுடிக்க இறந்த நிட்டூரத்தைப் பார்த்த பின்பும் நாம் திருந்த மறுப்போமாயின் எங்கள் எதிர்காலம் இன்னும் ஆபத்தாகவே அமையும்.

## இரத்ததான முகாம்

திருநெல்வேலிகாளிகோவிலடி சனசமூக நிலையத்தின் 73ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டுஇரத்ததானமுகாம் நடத்தப்படவுள்ளது.

காளி கோவிலடி சனசமூக நிலையத்தில் நாளை 18ஆம் திகதி காலை 9 மணி முதல் 2 மணிவரையில் இரத்ததானம் வழங்க முடியும் என சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

தன்னார்வ குருதி கொடையாளர்களை அன்றைய தினம் குருதி கொடையளிக்க வருமாறு சனசமூக நிலையத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (மு-4)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கோயிலுக்கு வெறும் கையுடன் போகலாமா?

ஆலயத்திற்கு செல்லும் போது அர்ச்சனைகள் பொருட்கள் போன்று எதுவும் இல்லாமல் வெறும் கையுடன் மட்டும் செல்லக் கூடாது.அதேபோல் கடவுள் அல்லது பெரியவர்களை பார்க்கச் செல்லும் போது கனிகள், மலர்கள் அல்லது ராஜகனி எனப்படும் எலுமிச்சை பழத்தினை கொண்டு செல்ல வேண்டும்.

ஏனெனில் இந்து சாஸ்திர விதிகளின் படி, கோவிலுக்கு செல்லும் ஒவ்வொருவரும் நைவேத்திய பொருட்களில் ஏதாவது ஒன்றினை கொண்டு செல்ல வேண்டும். அதனால் கடவுளின் ஆசிர்வாதங்கள் கிடைக்கும்.

**ஊசியால் கோர்த்த மாலையை கடவுளுக்கு போடலாமா?**

ஊசி போன்ற ஆயுதத்தினால் குத்தப்பட்ட மலர்கள் அல்லது கனிகளின் மாலைகளை கடவுளுக்கு அணிவிக்கக்கூடாது. அதனால் மலர்களை கைகளால் கோர்த்தே கடவுளுக்கு போட வேண்டும்.

**இரவில் பணம், உப்பு, எண்ணெய் கொடுக்கலாமா?**

பணம், உப்பு மற்றும் எண்ணெய் ஆகிய மூன்று பொருட்களுமே லட்சுமி தேவியின் அம்சமாக கருதப்படுகிறது. அதனால் இந்த மூன்று பொருட்களையும் இரவு நேரங்களில், மற்றவர்களிடம் கொடுக்கக் கூடாது.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மரியாதை பற்றி

கேள்வி: மக்கள் உங்களுக்கு மரியாதை கொடுக்கவில்லை என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

ஸ்ரீஸ்ரீ: அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள். அவர்கள் உங்களுக்கு சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள். (சிரிப்பு மற்றும் ஆச்சரியம்)

மக்கள் உங்களுக்கு மரியாதை கொடுக்கும்போது அவர்கள் உங்களிடமிருந்து சுதந்திரத்தை எடுத்து விடுகிறார்கள். நீங்கள் அவர்களைப் பார்த்து புன்னகை செய்யவேண்டும். அவர்களை அடையாளங் கண்டுகொளள வேணடும். அவர்களுடன் ஒரு குறிப்பிட்ட முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மக்கள் உங்களுக்கு மரியாதை கொடுக்காதபோது அவர்களுடைய கேள்விகளுக்கு பதில் தரவேண்டும் என்ற கடமைக்கு நீங்கள் உட்படுவதில்லை. மற்றும் இப்படிச் செய்யவேண்டும், அப்படிச் செய்யவேண்டும் என்ற முறைமைகளை நீங்கள் விட்டுவிடலாம். நீங்கள் புன்னகை செய்யவேண்டும் என்று தோன்றினால் புன்னகைக்கலாம். வெறுப்புக் காட்ட வேண்டும் என்று தோன்றினால் வெறுப்பைக் காட்டலாம். இயற்கையாக, முழுமையாக உன்னால் இருக்க முடியும்.

மக்கள உங்களிடம் அன்பு செலுத்தி மரியாதை கொடுக்கும்போது, அவர்களுடைய நயநடத்தையை ஏற்று அதற்கேற்றவாறு நடக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் அவர்கள் மனதை நோகச் செய்ய விரும்புவதில்லை. அவர்கள் உங்களுக்கு மரியாதை கொடுக்கவில்லை. அல்லது உங்களிடம் அன்பாக இல்லை என்றால உங்களுடைய சொல் முறையினால் அவர்கள் மனம் புண்படுவதில்லை. அவர்கள் உங்களுக்கு சுதந்திரம் கொடுத்து விடுகிறார்கள்.

உங்கள் சுதந்திரத்தை இழந்துதான் மரியாதையைப் பெறுகிறீர்கள். சுதந்திரத்திற்கு முதலிடம் கொடுப்பதுதான் அறிவுடைய செயலாகும். மரியாதையைப் பற்றிக் கவலைப்படாதே.

கேள்வி: சுதந்திரமானது இறுமாப்பைத் தருவதில்லையா?

ஸ்ரீஸ்ரீ: நான் எதையும் பொருட்படுத்தமாட்டேன் என்பது உண்மையான சுதந்திரத்தின் கருத்தல்ல. அதி கடுமையும் பிடிவாதமும் இல்லை. அது எதையும் மனமார்ந்த புன்னகையுடன் இலேசாக, எளிதாக எடுத்துக் கொள்ளும் மனநிலை. யாராவது கடுமையாகவும் பிடிவாதமாகவும் இறுமாப்புடனும் இருந்தால் அவர்கள் சுதந்திரமாக இல்லை என்று அர்த்தம். அன்பு சுதந்திரத்தில்தான் மலர்கிறது.

அன்பு உள்ளபோது மரியாதை தானாக உங்களைத் தொடர்ந்து வருகிறது.

## யுத்தகால சூழல் இன்றும் தொடர்கின்றது

### வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் தெரிவிப்பு

(மன்னார்)

அரசாங்கத்தினால தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டு வந்த யுத்தம் முடிவடைந்தாலும் யுத்த கால சூழல் இன்றும் தொடர்வதாக வடக்கு மாகாண மகளிர் விவகார புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதான பாலத்தடி பெரியகடை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குறித்த உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையத்தினை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு மாகாணத்திற்குட்பட்ட ஐந்து மாவட்டங்களிலும் தொழிற்துறை தொடர்பான பல வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இன்னும் நிறைய வேலைகள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைக்காமை பெரும் பின்னடைவாக உள்ளது

வடக்கு மாகாண சபையை புறந்தள்ளி ஏற்கெனவே அவர்கள் திட்டமிட்ட பல கோடி ரூபாய் பெறுமதியான திட்டங்கள் நடைமுறைப்படுத்த முடியாமல் மூடப்பட்ட நிலையை வடக்கு மாகாணம் முழுவதும் பார்க்கின்றோம்.

அந்தவகையில் நாங்கள் கிராமங்கள் தோறும் கிராமப்பொருளாதாரத்தை பல வழிவகைகளில் சிறிய சிறிய தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பது மட்டுமல்லாது உற்பத்திப் பொருட்களை உருவாக்கி சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பை பெற்றுக் கொடுத்து மக்களை தங்களுடைய கால்களில் தன்னம்பிக்கையுடன் வாழச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றோம்.

வடக்கு மாகாணத்தில் யுத்தம் காரணமாக பல இழப்புகள் வந்திருந்த நிலையில் இன்று தொழில் வாய்ப்புகள் இல்லாத காரணத்தினால் பலர் சமூகவிரோதிகளாக மாறிக்கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்திருந்தார். (2-4)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### உழைத்து உண்பதே சிறந்தது

- எண்ணத்தைக் கொண்டே செயல்கள் தீர்மானிக்கப்படுகின்றன.
- அறிவைத் தேடுகின்ற முயற்சியைத் தடுத்து நிறுத்துவது தீயொழுக்கமாகும்.
- கற்றவண்ணம் நடப்பவரே உண்மையில் கற்றவர் ஆவார்.
- நல்லமுறையில் பழகத் தெரிந்தவனும், நற்குணம் உள்ளவனுமே நண்பர்களுள் சிறந்தவன்.
- உழைப்பவர்களின் கூலியை அவர்களது வியர்வை உலரும் முன்பே கொடுத்து விடுங்கள்.
- தேவைக்கு மேல் எப்பொருள் இருப்பினும் பொருள் இலலாதவர்களுக்கு அதைக்கொடுங்கள். ஏனெனில் தேவைக்கு மேல் வைத்துக் கொள்ள நமக்கு உரிமை யில்லை.
- உங்களை விட செல்வத்திலும், அழகிலும் சிறந்தவர்களைக் காணும்போது, அவற்றில் உங்களை விடத் தாழ்ந்தவர்களையும் எண்ணிப் பாருங்கள்.
- உழைத்து உண்ணும் உணவே நீங்கள் உண்ணும் உணவில் சிறந்ததாகும்.
- உங்களை நீங்களே பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டாம்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழு த்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இனறு சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, பனைவள ஆராய்ச்சி நிலையம், கைதடி யுனைற்ரெட் மோட்டர்ஸ், கைதடி வடமாகாண சபை அலுவலகம், உடுப்பிட்டி V.C, நாச்சிமார் கோவிலடி, எள்ளங்குளம், இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ளரோட், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சியம்மன் கோவிலடி, பாரதி தாசன, கம்பர்மலை, பழைய பொலிஸ்நிலையம், வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி வாகிக சாலை, வல்வைவீதி, பொக்கணை, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா வடக்கு, அக்கரை, பாரதி வீதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில வெள்ளாங்குளப்பிரதேசம், கணேசபுரம்இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில கற்பகபுரம் கிராமம், பம்பைமடு கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# நான் ஒன்றும் ரோபோ இல்லை; எனக்கும் ஓய்வு வேண்டும்-கோலி



வீரர்களுக்கு ஓய்வு அளிப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த விராட் கோலி நான் ஒன்றும் ரோபோ இல்லை, எனக்கும் ஓய்வு தேவைப்படுகிறது என பதிலளித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விராட் கோலி இந்த ஆண்டு மட்டும் 7 டெஸ்ட், 26 ஒருநாள் மற்றும் 10 இருபது-20 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார். மேலும் இந்திய பிரிமீயர் லீக்கின் 10ஆவது சீசனிலும் 10 போட்டிகளில் விளையாடியுள்ளார். இந்தாண்டு அதிக போட்டிகளில் விளையாடிய இந்திய வீரர் விராட் கோலி ஆவார்.

தற்போது இந்திய அணி இலங்கையுடன் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இந்நிலையில் இந்த போட்டிக்கு முன்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் விராட் கோலி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது ஹர்திக் பாண்டியாவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த கோலி, 'நான் ஒன்றும் ரோபோ இல்லை எனக்கும் ஓய்வு தேவைப்படுகிறது' எனக்கூறினார். இது குறித்து விராட் கோலி கூறியதாவது,

பணிச்சுமை பற்றி பேச வேண்டியுள்ளது. வீரர்கள் ஓய்வெடுக்க வேண்டுமா இல்லையா என்பது பற்றி நிறைய பேச்சுகள் உள்ளன. விளையாட்டு வீரர்கள் ஏன் ஓய்வு கேட்கிறார்கள் என மக்கள் வெளியில் இருந்து கேட்பது தெரிகிறது. ஒவ்வொரு வீரர்களும் ஆண்டுக்கு சுமார் 40 போட்டிகளில் விளையாடுகின்றனர்.

அதில் அனைவரும் 45 ஓவர்கள் பட்டிங் பிடிப்பதோ, 30 ஓவர்கள் பந்து வீசுவதோ இல்லை. சிலரே அவ்வாறு செய்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வு அளிக்கவேண்டியது அவசியம். குறிப்பாக புஜாராவுக்கு அதிக பணிச்சுமை இருக்கிறது. அவர் அனைத்து போட்டிகளிலும் அதிக நேரம் களத்தில் விளையாடுகிறார்.

வீரர்கள் விளையாடுகிற ஒவ்வொரு போட்டியிலும் அனைவருக்கும் ஒரேவிதமான பணிச்சுமை இல்லை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது 20-25 வீரர்களை கொண்ட ஒரு வலுவான அணியை கொண்டுள்ளோம். முக்கியமான வீரர்கள் சரியான நேரங்களில் இறக்கப்பட வேண்டும். அந்த நிலை பராமரிக்கப்பட வேண்டும்.

மூன்று விதமான போட்டிகளில் விளையாடுபவர்கள் ஒரேவிதமான தன்மையைத் தக்கவைத்துக்கொள்ள இயலாது. நிச்சயமாக, எனக்கும் ஓய்வு தேவை. என் உடல் ஓய்வெடுக்க வேண்டும் என்று நினைக்கும்போது, நான் அதை கேட்பேன். நான் ஒன்றும் ரோபோ இல்லை, என் சதையை கிழித்து பார்த்தால் எனக்கும் இரத்தம்தான் வரும் என்றார். (க)

# இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து கோலாகலமாக இன்று ஆரம்பம்



நான்காவது இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டி கொச்சியில் இன்று ஆரம்பமாகவுள்ளது. மேலும் கூடுதலாக இரண்டு அணிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஐ.எஸ்.எல் என்று அழைக்கப்படும் இந்தியன் சுப்பர் 'லீக்' கால்பந்து போட்டி 2014 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இதில் அட்லெடிகோ கொல்கத்தா அணி சம்பியன் பட்டம் பெற்றது. 2015ஆம் ஆண்டு நடந்த போட்டியில் சென்னையின் எப்.சி. அணியும், 2016ஆம் ஆண்டு போட்டியில் கொல்கத்தாவும் வெற்றி பெற்றன.

4ஆவது ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டி கொச்சியில் இன்று தொடங்குகிறது. இதுவரை நடந்த 3 போட்டியிலும் 8 அணிகளே பங்கேற்றன.

இந்தப்போட்டியில் கூடுதலாக 2 அணிகள் சேர்க்கப்பட்டுள்ளன. பெங்களூர், ஜாம் ஷெட்பூர் அணிகள் இதில் புதிதாக விளையாடுகின்றன. இந்தப்போட்டியில் விளையாடும் 10 அணிகள் விபரம் வருமாறு,

அட்லெடிகோ கொல்கத்தா (2 முறை சம்பியன்), சென்னையின் எப்.சி. (ஒருமுறை சம்பியன்), டெல்லி டைனமோஸ், கேரளா பிளாஸ்டர்ஸ், கோவா, புனே, மும்பை சிட்டி கிளப், நார்த் ஈஸ்ட் யுனைடட் (கவுகாத்தி), பெங்களூர், ஜாம்ஷெட்பூர்.

இந்தப்போட்டியில் ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். அதன்படி ஒவ்வொரு அணியும் 18 ஆட்டத்தில் விளையாடும்.

அடுத்த ஆண்டு மார்ச் 4ஆம் திகதி வரை 'லீக்' ஆட்டம் 10 நகரங்களில் நடைபெறும். 'லீக்' முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிச்சுற்று 'லீக்' ஆட்டத்துக்கு தகுதி பெறும்.

முதல் இடத்தை பிடித்த அணியும் 4ஆவது இடத்தை பிடித்த அணியும், 2ஆவது இடத்தை பிடித்த அணியும், 3ஆவது இடத்தை பிடித்த அணியும் 2 முறை மோதும். இதில் இருந்து 2 அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும். மார்ச் 17ஆம் திகதி இறுதிப் போட்டி கொல்கத்தாவில் நடக்கிறது.

இன்று இரவு 8 மணிக்கு கொச்சியில் நடைபெறும் ஐ.எஸ்.எல் கால்பந்து தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா-கேரளா அணிகள் மோதுகின்றன.

சென்னையின் எப்.சி. அணி தொடக்க ஆட்டத்தில் கோவாவை சந்திக்கிறது. இந்த ஆட்டம் சென்னை நேரு அரங்கத்தில் 19ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நடக்கிறது. (க)

# சீன ஓபன் பட்மிண்டன் சாய்னா நேவால் தோல்வி



சீன ஓபன் பட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் முன்னணி வீராங்கனை சாய்னா நேவால் மற்றும் எச்.எஸ்.பிரனாய் ஆகியோர் தோல்வியடைந்து வெளியேறினார்.

சீன ஓபன் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் போட்டிகள் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியாவின் முன்னணி வீராங்கனைகளான சாய்னா நேவால், பி.வி. சிந்து, வீரர்கள் எச்.எஸ்.பிரனாய் ஆகியோர் தங்கள் முதல் சுற்று ஆட்டங்களின் வெற்றி பெற்றனர்.

இரண்டாவது சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் சாய்னா நேவால், ஜப்பான் வீராங்கனை அகானே யமகுச்சியை எதிர்கொண்டார்.

உலகத் தரநிலையில் 4ஆம் இடத்தில் உள்ள யமகுச்சியும், சமீபத்தில் தேசிய சம்பியன் பட்டம் வென்ற சாய்னாவும் மோதியதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது.

முதல் செட்டை 3 புள்ளிகள் வித்தியாசத்தில் போராடி இழந்தார் சாய்னா. இரண்டாவது செட்டிலும் ஜப்பான் வீராங்கனையே ஆதிக்கம் செலுத்தினார்.

14-9 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்த அவர், அதிரடியாக 8 புள்ளிகளை தொடர்ந்து பெற்று, அந்த செட்டை எளிதில் கைப்பற்றினார். 18-21, 11-21 என்ற நேர்செட்களில் சாய்னா தோல்வி அடைந்தார்.

இதன்மூலம் இந்த ஆண்டில் யமகுச்சியிடம் 4-வது முறையாக சாய்னா தோல்வி அடைந்துள்ளார். யமகுச்சி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

இதேபோல் ஆடவர் ஒற்றையர் பிரிவு 2ம் சுற்று ஆட்டத்தில் இந்திய வீரர் பிரனாய், சீன வீரர் செங் யிவீயை எதிர்கொண்டார். இப்போட்டியில் பிரனாய் 19-21, 17-21 என்ற செட்கணக்கில் தோல்வியடைந்து போட்டியில் இருந்து வெளியேறினார்.

இந்தியாவின் முன்னணி வீராங்கனை சாய்னா, பிரனாய் இருவரும் தோல்வி அடைந்த நிலையில், இனி நடப்பு சம்பியன் பி.வி.சிந்துவை மட்டுமே இந்தியா நம்பியுள்ளது. (க)

# பிறந்தநாளை கொண்டாடிய இந்திய நட்சத்திரம் சானியா



இந்திய டென்னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா நேற்று முன்தினம் தனது 31ஆவது பிறந்த நாளை குடும்பத்தினருடன் எளிய முறையில் கொண்டாடினார்.

இந்திய டென்னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சாவுக்கு நேற்று முன்தினம் 31ஆவது வயது. அவர் தனது பிறந்த நாளை குடும்பத்தினருடன் எளிய முறையில் கொண்டாடினார். சானியா மிர்சாவுக்கு அவரது கணவரும், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரருமான சோயிப் மலிக் டுவிட்டர் மூலம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அதில் 'பிறந்த நாள்காணும் எனது அழகிய மனைவிக்கு வாழ்த்துகள். இந்த தருணத்தில் அருகில் இருக்க முடியாததை நினைத்து வருந்துகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார். இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா உட்பட பிரபலங்கள் பலரும் சானியா மிர்சாவுக்கு வாழ்த்துகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இரட்டையர் பிரிவில் 'நம்பர் வன்' இடத்தை அலங்கரித்த சானியா மிர்சா, கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பெண்கள் இரட்டையர் பிரிவில் 3 பட்டங்களையும், கலப்பு இரட்டையரில் 3 பட்டங்களையும் வென்று இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)



வட மாகாணத்தில் முதலாவதாகவும், அகில இலங்கை ரீதியில் 18 ஆவதாகவும் 8 ஆவது கறுத்தப்பட்டி (22-10-2017) அன்று இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் மா.இரத்தினசோதி ஆசானுக்கு வழங்கப்பட்டது.

## யாழ்.குடாநாட்டில்...

தார சேவைகள் திணைக்கள புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்ததாக யாழ் மாவட்டம் முழுவதிலும், ஒரே நாளில் 87 பேருக்கு எதிராக நேற்றைய தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வடக்கில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து காணப்பட்ட போதிலும் யாழ்.மாவட்டத்திலேயே இம்முறை தீவிரமடைந்துள்ளது. இந்த வருடம் 5 ஆயிரம் பேருக்கு அதிகமானவர்கள் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார்கள். இது கடந்த வருடத்தை விட அதிகளவான பாதிப்பாக காணப்படுகிறது.

இந்த மாதம் 16ஆம் திகதி வரை 269 பேர் யாழ்.குடாநாட்டில் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் இந்த வருடம் 4 உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களை விட யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் தொற்று அதிகரித்து காணப்படுவதால் இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பல்வேறு விதமான செயற்திட்டங்கள் சுகாதார துறையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நேற்றும் இன்றும் டெங்கு ஒழிப்பு விசேட செயற்திட்டம் நடைபெறுகிறது.

விசேடமாக யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, கரவெட்டி, பருத்தித்துறை, தெல்லிப்பழை ஆகிய 10 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இந்த செயற்திட்டம் முனனெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த விசேட செயற்திட்டத்தில் யாழ்.குடாநாடு முழுவதும் நேற்று 7 ஆயிரத்து 210 இடங்கள் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் 2 ஆயிரத்து 851 இடங்கள் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டன. 223 இடங்கள் குடம்பிகள் பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டன. அத்துடன் 87 பேருக்கு எதிராக வழக்குத தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த விசேட செயற்திட்டம் இன்றும் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என சுகாதாரத் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (மு-9)

## கைது செய்யப்பட்ட...

ர்ந்து மறுநாள் செவ்வாய்க்கிழமையும் தொடர்ச்சியாக நான்கு இடங்களில் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. இவ் வாள்வெட்டுச் சம்பவங்களில் எட்டுப் பேர் வரையில் காயமடைந்திருந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளினூடாக நேற்றுமுன்தினம் மூவரிடம் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். அவ் விசாரணைகளினூடாக இருவர் விடுதலை செய்யப்பட்டதுடன் வேறு மூன்று சந்தேக நபர்களை இச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் நல்லூர், உரும்பிராய் மற்றும் கல்வியங்காடு ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியிருந்தனர். இதன்போது அந் நால்வரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. (மு-4)

## வாள்வெட்டு சந்தேக...

தொடர்பான வழக்கின் பிணை விண்ணப்பமானது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இப் பிணை விண்ணப்பத்தின் மீதான விசாரணையில் அரச சட்டவாதி, தற்போது யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு குழுமோதல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன் இதனால் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்தும், அம் மக்கள் அச்சத்திலும் பொழுதை கழித்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் இக் கைக்குண்டு வைத்திருந்த மற்றும் வாள்வெட்டு போன்ற சம்பவங்களில் ஈடுபட்ட நபருக்கு பிணை வழங்குவது சமூகத்தின் பாதுகாப்பை மேலும் கேள்விக்குள்ளாகிவிடும் என குறிப்பிட்டு அப் பிணை மனுவுக்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து நீதிபதி அப் பிணை மனுவை நிராகரித்து அதனை ஒத்திவைத்ததுடன் வாள்வெட்டு கலாசாரத்தை உடன் கட்டுப்படுத்துமாறு வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார். இவ்வாறான சூழ்நிலையிலேயே நேற்றைய தினம் நீதிபதியின் உத்தரவுக்கமைய மேற்படி விசேட கூட்டமானது ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது. (மு-4)

## நல்லாட்சியை வீட்டுக்கு...

யில் நாட்டு மக்கள் தம்முடன் கை கோர்ப்பார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம், நேற்றைய தினமும் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த அழைப்பை விடுத்தார்.

கடந்த இரண்டரை வருடங்களாக உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நல்லாட்சி அரசாங்கம் ஒத்திவைத்து வருவதை வன்மையாக கண்டித்த அவர், தமது ஆட்சிக்காலத்தில் எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைக்க நடவடிக்கை எடுத்ததில்லை என்பதை சுட்டிக்காட்டினார்.

மேலும் தமது ஆட்சிக்காலத்தில் கடனைச் செலுத்த முடியாமல் ஒருபோதும் அழவில்லை என்றும், சர்வதேச அமைப்புக்கள் போடும் தாளங்களுக்கு நடனமாடவில்லை எனவும் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, சர்வதேசத்தை வெற்றிகொண்டதாகவும் குறிப்பிட்டார்.

எனினும் இந்த நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச அழுத்தங்கள் இல்லாத சூழ்நிலையில் கடன்சுமைகளை அதிகரித்துக் கொண்டதாகவும், எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் நாட்டின் பணவீக்கம் மூன்று மடங்கால் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாகவும் அச்சம் வெளியிட்டார். (மு-15)

## மதில் விழுந்து...

ள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை குகன் வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முத்துலிங்கம் சுதர்சீலன் (வயது 42) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் மேசன் வேலை செய்து வருபவர். இவர் நேற்றைய தினம் காலை மேசன் வேலை செய்வதற்காக யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்கு சென்றுள்ளார்.

அங்கு கடந்த சில நாட்களுக்கு முன் பழைய மதில் ஒன்றின் மேல் ஒன்றரை அடி உயரத்துடன் 25 அடி நீளத்தில் புதிதாக கற்கள் வைத்து மதிலை கட்டியுள்ளனர். அந்த மதிலின் பொருக்குகளை சரிசெய்து கொள்வதற்காகவே குறித்த நபர் நேற்று அங்கு சென்றுள்ளார். அவர் வேலையை ஆரம்பித்து சிறிது நேரத்தில் புதிதாக பொருத்து வைக்கப்பட்ட மதில் அவரின் மேல் இடிந்து விழுந்துள்ளது. அதில் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-9)

## ஜனாதிபதியின் முடிவில்...

ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின் மீண்டும் முற்றுமுழுதாக நாம் ஏமாற்றம் அடைந்து விரக்தியின் உச்ச நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், வடக்கு கிழக்கில் காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே உறவுகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அவர்கள் சந்திப்பு தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

எமது கோரிக்கைகள் தொடர்பாக அவர்கள் வேண்டாவெறுப்பாகவே பேசுகிறார்கள். காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது? இருக்கிறார்களா? இல்லையா? என்பது தொடர்பில் அவர்கள் பதிலளிப்பதை நோக்கமாக கொண்டு எம்மிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை, மாறாக எமக்கான நடடாட்டை வழங்குவதிலேயே குறியாக உள்ளார்கள்.

நாங்கள் எமது பிள்ளைகளை நேரடியாகவே ஒப்படைத்திருந்தோம். இராணுவத்தின் கையில் ஒப்படைத்தவர்களைத்தான் கேட்கிறோம். ஆனால் அதற்கு ஜனாதிபதி பொருத்தமான பதிலை எமக்கு அளிக்கவில்லை.

அதாவது சிங்களவர்களும் முஸ்லிம்களும் கடத்தப்பட்டுள்ளார்கள். எனவே காணாமல் போனோர் அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் விசாரணையே அனைவருக்கும் பொருத்தமானது. அதை நாம் மேற்கொள்வோம் என தெரிவிக்கிறார்.

ஆனால் நாம் கையில் கொடுத்த பிள்ளைகளை தான் கேட்கிறோம். கடத்தியவர்களை கேட்கவில்லை. சிங்களவர்களும் முஸ்லிம்களும் காணாமல் போன விதம் வேறு. எமது பிரச்சினை வேறு என தெரிவித்திருந்தோம்.

காணாமல் போனோர் அலுவலகத்தை நாம் நிராகரிக்கிறோம். அதில் எமக்கு நம்பிக்கை இல்லை எனவும் நேரடியாகவே ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம். ஏற்கெனவே இருந்த விசாரணைக்குழுக்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியும். அதேபோன்று தான் இந்த குழுவும் ஒரு ஏமாற்று நாடகம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மற்றும் முன்னாள் இராணுவத்தளபதிகள் தற்போது இலங்கையில் தான் உள்ளார்கள். அவர்களை கூட்டில் ஏற்றி விசாரணை செய்வதற்கு ஏன் பின்னிற்க வேண்டும் என கேள்வி எழுப்பியுள்ளோம்.

ஆனால் இது தொடர்பில் ஆக்கபூர்வமான பதிலை எமக்கு தருவதாக இல்லை. இழப்பீட்டை தரும் முயற்சியில் தான் ஈடுபட்டுள்ளார்கள். எமது உறவுகளை மீட்கும் எண்ணம் யாருக்கும் இல்லை.

எமது அரசியல் தலைவர்களும் எம்மை கைவிட்டு விட்டார்கள். தேர்தலுக்கு எமது வீடுகளுக்கு அவர்கள் வரக் கூடாது. விரக்தியின் உச்சத்தில் நாம் உள்ளோம்.

எமது உயிரின் வேதனை ஏன் அவர்களுக்கு புரியவில்லை என்று எமக்கு தெரியவில்லை. எமக்கு என்று ஒரு அரசு இலங்கையில் இல்லை. சர்வதேசமே எமது பிரச்சினையில் தலையிட்டு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அதுவரை காணாமல்போன தமது உறவுகள் தொடர்பில் தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க போவதாக காணாமல் போனோரின் உறவுகள் அறிவித்துள்ளனர். (மு-9,281)

# ஊர்காவற்றுறை தொகுதிக் கிளையே வேட்பாளர் தெரிவை மேற்கொள்ளும்

ஊர்காவற்றுறை தொகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரில் சில நபர்கள் தங்களை தமிழரசுக் கட்சியின் அமைப்பாளர்கள் எனக் கூறிக்கொண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறியப்படுவதாகவும் இது முற்றிலும் தவறான நடவடிக்கை எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதிக் கிளைச் செயலாளர் சு.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் வேட்பாளர்களுக்கான தெரிவை தொகுதிக் கிளையே மேற்கொள்ளும் எனவும் கட்சி ஆதரவாளர்கள் இது விடயத்தில் விழிப்பாக இருக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ந)

## வர்த்தமானி...

லிப்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்த ஆறு பேரால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## எனது ஆட்சியில்...

காணாமல் போனோர் அலுவலகத்தின் ஊடாகவே விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், வடக்கு கிழக்கில் காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்வைத்திருந்தனர். அதன்போது தனது கருத்தை மேலும் தெரிவிக்கையில்

நாட்டின் அனைத்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் போதிய புரிந்துணர்வினை கொண்டுள்ளேன். வெளிப்படைத் தன்மையுடனும் நேர்மையாகவும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

அரசாங்கத்தின் சிறைக்கூடங்களில் சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய இரகசிய தடுப்புமுகாம்கள் எதுவும் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் செயற்படவில்லை, அவ்வாறு எவரும் இரகசியமாகத் தடுத்து வைக்கப்படவில்லை.

காணாமல் போனோரின் உறவினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான துரித தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நான் எதிர்பார்த்துள்ளேன் என தெரிவித்தார்.

மேலும் காணாமல் போனோரின் உறவினர்களின் முறைப்பாடுகள், கோரிக்கைகள் மற்றும் தகவல்களை சேகரிப்பதற்கான புதிய விண்ணப்பப்படிவம் ஒன்று மாவட்ட செயலாளரின் ஊடாக வழங்குமாறும். எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் குறித்த தகவல்களை சேகரிக்குமாறு சகல மாவட்ட செயலாளர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்றினை அனுப்பி வைக்குமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதுடன், சேகரிக்கப்படும் தகவல்களை காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் காணாமல் போனோர் பற்றிய ஆணைக்குழுவின் ஊடாக மீண்டும் விசாரணை செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (மு-9)

## அரியாலை துப்பாக்கி...

திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்கரன் உத்தரவிட்டுள்ளார். மேலும் நேற்றைய தினம் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் வழக்கின் சாட்சி குற்றத்தில் ஈடுபட்டார்கள் என சந்தேகிக்கப்படும் இரு விசேட அதிரடிப்படையினரையும் அடையாளம் காண்பிக்கவில்லை.

கடந்த மாதம் 22ஆம் திகதி யாழ்.மணியம் தோட்டம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மீது இனந்தெரியாத சிலர துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டிருந்தனர். இச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து சென்ற இளைஞரான தொன் போஸ்கோ ரிஸ்மன் என்பவர் உயிரிழந்திருந்தார்.

இதனை தொடர்ந்து இத் துப்பாக்கி பிரயோகத்தை பாதுகாப்பு தரப்பை சேர்ந்தவர்களே மேற்கொண்டிருக்கிறார்கள் என்ற சந்தேகம் வலுவடைந்திருந்த நிலையில் அதற்கு ஆதார பூர்வமான சில தடயப்பொருட்களும் பொலி ஸாரால் இனங்காணப்பட்டிருந்தன. குறிப்பாக இத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்ற முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பண்ணை விஷேட அதிரடிப்படையினரின் முகாமில் இருப்பது கண்டறியப்பட்டது.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளானது குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு பொலிஸ்மா அதிபரால் மாற்றப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பண்ணை விஷேட அதிரடிப்படையினரின் முகாமில் இருந்து குறித்த இரு வாகனங்களும் மீட்கப்பட்டதுடன் இச் சம்பவம் தொடர்பாக இரண்டு விஷேட அதிரடிப்படையினர் இருவரையும் கைது செய்திருந்துடன் நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்களது வழக்கானது நேற்றைய தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த இரு விஷேட அதிரடிப்படையினர் இருவரும் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். எனினும் அடையாள அணிவகுப்பில் குறித்த இருவரையும் சாட்சியான நிஷாந்தன் அடையாளம் காண்பித்திருக்கவில்லை. தொடர்ந்து வழக்கானது திறந்த மன்றில் விசாரணை செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை சந்தேக நபர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி அவர்கள் சார்பில் பிணை விண்ணப்பம் செய்திருந்த போதும் அப் பிணை விண்ணப்பமானது மன்றினால் நிராகரிக்கப்பட்டது. தொடர்ந்து குறித்த இரு விஷேட பொலிஸ் உத்தியோகத்தர்களையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் அது வரை வழக்கினை ஒத்திவைக்கவும் யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்கரன் உத்தரவிட்டார். (மு-4)

## வரவு - செலவு...

டுக்கான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக் கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த 10, 11, 13, 14, ஆகிய ஐந்து நாட்கள் விவாதம் தொடர்ச்சியாக நடை பெற்றதோடு ஆறாவது நாளான நேற்று் வியா ழக்கிழமை பிற்பகல் 5.20 வரையில் விவா தம் இடம்பெற்றிருந்தது. இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தினை எதிர்க்கட்சித் தலை வர் இரா.சம்பந்தன் ஆரம்பித்திருந்த நிலையில நிதி அமைச்சர் மங்கள சமரவீர திருத்தங்க ளுடனான உரையொன்றை ஆற்றியிருந்தார்.

இந்நிலையில் எதிர்க்கட்சி பிரதம கொறடா வும் மக்கள் விடுதலை முன்னணியின் தலை வருமான அநுரகுமார திஸாநாயக்க எம்.பி வாக்கெடுப்பினை கோரினார்.

இதனையடுத்து சபாநாயகர் கருஜெயசூரிய வாக்கெடுப்பிற்கான அறிவிப்பினை விடுத் தார். உறுப்பினர்கள் அனைவரும் இலத்திர னியல் முறையின் மூலம் வாக்குகளை பதிவு செய்யலாம் என்றும் அதற்கு முடியாதவர்கள் கைகளை உயர்த்தி தமது விருப்பினை தெரி விக்க முடியும் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து வாக்கெடுப்பு செயற்பாடு இடம்பெற்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் களான சிவசக்தி ஆனந்தன் எம்.பி, சரவண பவன் எம்.பி ஆகியோர் உட்பட 17 உறுப்பின ர்கள் சபைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

இதேவேளை சுயாதீனமாக செயற்படவு ள்ளதாக அறிவித்த ரத்ன தேரர் எம்.பியும், முன்னாள் நீதி அமைச்சரும் ஆதரவாக வாக்களித்ததோடு வரவுசெலவுத்திட்ட முன் மொழிவுகள் சிலதொடர்பில் கடுமையான விமர்சனத்தினை முன்வைத்திருந்த அமை ச்சர்களான ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க, சுசில் பிரேமஜெயந்த ஆகியோரும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

வாக்களிப்பு முடிவுகள் அறிவிக்கப்பட்ட தையடுத்து இன்று வெள்ளிக்கிழமை முதல் குழுநிலையில் ஒவ்வொரு அமைச்சுக்களு க்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக் கீடுகள் தொடர்பில் தனித்தனியான விவாத ங்கள் ஆரம்பமாகவுள்ளதாக நிதிஅமைச்சர் மங்கள சமரவீர அறிவித்தார் சபைமுதல் வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல் லவால் சபை இன்று காலை 9.30வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

இன்று ஆரம்பமாகும் 2018 ஆம் ஆண் டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் மீதான குழுநிலையிலான விவாதம் எதிர்வரும் டிச ம்பர் மாதம் எட்டாம் திகதி வரையில் நடை பெற்று மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## விசாரணைக்கு...

குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவு க்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வ ரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிணைமுறி ஆணைக் குழுவில் முன்னிலை யாகுமாறு பிரதமருக்கு பிணைமுறி தொடர்பில விசாரணை செய்யும ஜனாதிபதி ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இதேவேளை பிணைமுறி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன்னிலையாக தாம் தயாராக இருப்பதாக பிரதமர் ஏற்கெனவே தெரிவித்திரு ந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

(மற்றுமொரு செய்தி உள்ளே)

## புதிய அரசியலமை...

காலத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார். ஆனால் தீர்வு காணப்படவில்லை. இதனாலேயே மக்கள் இவரை தெரிவு செய்யவில்லை.

தற்போதைய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமராக ரணில் விக்கிரம சிங்கவும் தெரிவு செய்யப்பட்டனர். நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து அரசாங்கத்தை முன்னெடுக்கவேண்டும் என்றே மக்கள் இவர்களை தெரிவு செய்தனர்.

புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

எதிர்க்கட்சி தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவருமான இரா. சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டதுடன் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் கோரினார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத் தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சி தலைவர் இந்த கோரிக் கையை முன்வைத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சபையில் பிரசன்னமாகியிருந்த வேளையி லேயே இந்தக் கோரிக்கையை எதிர்க்கட்சி தலைவர்சம்பந்தன்நேரடியாகமுன்வைத்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் தொடர்ந்து உரை யாற்றுகையில், மகிந்த ராஜபக்ஷ இணங்கிக் கொண்ட யோசனைகளின் அடிப்படையி லேயே புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக் கான தீர்வு தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அப்படியாயின் அரசியல் அமைப்பு உரு வாக்க திட்டம் மற்றும் சமாதான முயற்சிகளு க்கு ஏன் ஆதரவு வழங்கவில்லை என்று மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பிய எதி ர்க்கட்சி தலைவர் சம்பந்தன்,

ஒன்றுபட்ட மக்கள் பிரிக்கப்படாத நாடொ ன்றுக்குள் வாழ வேண்டும். இதற்கு தாங்கள் உதவ வேண்டும். அதிகாரத்தை கைப்பற்ற வேண்டுமாயின் அதனை எந்த வழியி லாவது மேற்கொள்ளலாம். ஆனால் அதற்கு புதிய அரசியல் அமைப்பை பயன் படுத்த வேண் டாம் என மகிந்த ராஜ பக்ஷ உள்ளிட்ட ஒன் றிணைந்த எதிர்க் கட்சியில் அங்கம் வகிப்போரிடம் கோரி க்கை விடுப்பதாக வும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது கேட்டுக்கொ ண்டுள்ளார். (மு-11)


சிங்கள வகுப்பு
ஆரம்பம் : 18.11.2017
(சனி 3pm)
குறிப்பு: இம்மாத கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
NAC மானிப்பாய் 0776947162
(1357)

வாடகைக்கு
பருத்தித்துறை வீதியிலும் நெல்லியடி சந் திக்கு அருகாமையிலும் அமைந்துள்ள 3000 சதுர அடியில் உள்ள கட்டம் வாட கைக்கு விடப்படும்.
தொடர்பு : 0757599514, 0778404968
(வி-407)

ஒத்துமாறல்
வவுனியா பாடசாலையில் 3-ம் வகுப் பின் தரம் 1 (அ) ஆம் தரத்தில் உள்ள குடி யியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் யாழ்ப் பாணத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்பு: 0765790936

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(1367)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
அமெரிக்க லொத்தர் விசா (Green Card) முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இவ் வாய்ப்பினை பெற்றிடுங்கள்
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | வாதரவத்தை | சாவகச்சேரி | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா
(C-371)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-364)

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இன்னும் 2 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன.
0768226243
பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச விசா வாய்ப்புக்கள் இருக்காது.ஆகவே இப்போதே முந்துங்கள்.
வெளிநாடு செல்வது எனது இலட்சியம் எனது குடும்ப பொருளாதார வசதியை பெருக்குவதே அது கனவு எனது இலட்சியத்தினையும் கனவினையும் ஒரு கணத்தில் நிறைவேற்றிய V2 TRAVELS க்கு எனது இதயபூர்வமான நன்றிகள்.
2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
ஜேசுதாசன்-குகப்பிரியா அமெரிக்கா விசா வெற்றியாளர்
இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள் V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 | சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960
(சி-364)

CCTV
100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி
CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு
வேலைவாய்ப்பு உத்தரவாதம்*
Next Batch : 19- Nov-2017
iCS EDUCATION *77,மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். 021-7306000, 076-7013060

Computer Network Engineering
Duration : 2 Months
Next Batch : 25-11-2018
2017 A/L 25% Discount
(சி-402)


# மரண அறிவித்தல்



## திருமதி உமாபதி புஸ்பலதா

**மண்டைதீவு 2-ம் வட்டாரம்**

**(வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கு)**

மண்டைதீவு 2-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், வன்னியசிங்கம் வீதி, இருபாலை றோட், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாபதி புஸ்பலதா நேற்று (16.11.2017) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (தம்பிஜயா) - யோகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற உமாபதி அவர்களின் பிரியமான மனைவியும், கல்யாணி (சுவிஸ்), சசிதரா (ஆசிரியை - கோண்டாவில் இராமகிருஸ்ணா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இளங்கோ (சுவிஸ்), செந்தூரன் (வேலணை ப.நோ.கூ சங்க முன்னாள் கிளை முகாமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிரா, அக்ஷயா, ஐஸ்வரியா, அபிஷயன், அக்ஷரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், பரமேஸ்வரி, விஜயலட்சுமி, அரங்கநாயகி ஆகியோரின் சகோதரியும், கனகரத்தினம், கனகலிங்கம், உலகேஸ்வரி, விஷயலட்சுமி, காந்தமலர், நடனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண் டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்டைதீவு, 2-ம் வட்டாரம். (வி-401)

தகவல்: குடும்பத்தினர் கோண்டாவில் கிழக்கு

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.